

# ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமம்.

ஐப்பசி

202ஆவது மலர்

2014




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்**
**பேணா தழுக்கறுப் பான்.**

**பொருள் :** பிறனுடைய செல்வத்தைக் கண்டு மகிழாது பொறாமைப் படுகின்றவன் தனக்கு அறத்தையும் செல்வத்தையும் விரும்பாதவன் என்று சொல்லப்படுவான். (163)

**அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்**
**ஏதம் படுபாக்(கு) அறிந்து.**

**பொருள் :** தீய செயலால் துன்பம் வருதலை அறிந்த அறிவுடையார் பொறாமையினால் தருமமல்லாதவற்றைச் செய்யார். (164)

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்

ஆரா ரென்ன வறைந்த போதினும்
நீராயுள் ளுருகி நினையு மடியேம்
பாராதி யெல்லாம் பரனே யென்ன
நேரா யுணர்ந்து நிற்குதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 08

ஆக்கை நிலையில்லை யென்றே யறிந்து
வாக்கான் மனத்தான் வழுத்தொணா முதலைப்
பூக்கை கொண்டு பொன்னடி போற்றி
ஏக்கமற் றென்று மிறைஞ்சு வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 09

ஆராய்ந்து பார்த்தா லறிவே யன்றி
வேறா யொன்றும் விளங்க வில்லைப்
பேரா யிரமுடைப் பெம்மான் றானே
பாராதி யெல்லா மென்று பாடுவோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்



வெளியீடு – உ 202ஆவது மலர்

2014 பொருளடக்கம் ஐப்பசி


| | | |
|---|---|---|
| மானுட வாழ்க்கையின்... | பு. கதிரித்தம்பி | 01 -02 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 03 -04 |
| சிலப்பதிகாரத்தில் முருகப்... | நா. நல்லதம்பி | 05 -06 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 07 -10 |
| காலியில் தேயிலை... | ச. லலீசன் | 11 -14 |
| திருவருட்பயன் | முனைவர் ஆ. ஆனந்தராசன் | 15 -18 |
| சிவஞானசித்தியார் கூறும்... | க. கணேசதேவா | 19 -23 |
| திருஞானசம்பந்தரும்... | சி.வ. இரத்தினசிங்கம் | 24 -28 |
| பக்தி | ஆர்.வீ. கந்தசாமி | 29 -31 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 32 -33 |
| பைரவக் கடவுள் வழிபாடு | கு. சிவபாலராஜா | 34 -37 |
| சைவசமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 38 -39 |
| கந்தசஷ்டி விரதமும்... | திருமதி ந. பரமேஸ்வரி | 40 -41 |
| சிறுவர் கதைகள் | - | 42 -43 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 44 -46 |
| இந்துமதமும் அக்கினியும் | வி. செல்வரத்தினம் | 47 -48 |
| சைவசித்தாந்தம் | இரா. சாந்தன் | 49 -50 |
| கம்பராமாயணம் காட்டும்... | அ. சுப்பிரமணியம் | 51 -53 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 54 -56 |
| சித்தர்களின் ஞானம் | சிவ மகாலிங்கம் | 57 -62 |
| தியாகத்தின் மாண்பு | மு. சிவலிங்கம் | 63 -64 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 65 -68 |
| அதிசயம் ஆனால் உண்மை | மோகனதாஸ் சுவாமிகள் | 69 -70 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)


சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

புரட்டாதிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை சமாதான நீதிவான் திரு சிவ ஆறுமுகசாமி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் சந்நிதியான் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளைச் செவ்வனே மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும். இச்சுடரானது சைவர்கள் மத்தியில் ஒரு ஞான பொக்கிஷமாகத் திகழ்கின்றது.

அவர் தனது உரையில், சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல சமய சமூகப் பணிகள் நடாத்தப்படுகின்றது. அவற்றுள் பிரதானமான பணியாக இலவச வைத்தியசேவை இடம்பெறுகின்றது. அதன்மூலமும் நோயாளிகள் பயன்பெறுவதையும் காணமுடிகின்றது. இவ்வாறு நாள்தோறும் வளர்ந்து செல்லும் பணிகள் யாவற்றின்மூலம் அனைவரும் பயன்பெற்றுக்கொண்டு இருப்பது போற்றப்படவேண்டும்..

இறுதியாக அவர் தனது உரையில், ஞானச்சுடர் மலரானது மேலும் பல்வேறு அம்சங்களைக் கொண்டு திகழவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

201ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், 201ஆவது மலராக ஞானச்சுடர் திகழ்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன் என்று சபையோருக்குக் கூறினார். தொடர்ந்து உரையாற்றும்போது, ஞானச்சுடர் மலரானது அழகான அட்டைப்படத்துடனும் காட்சியளிக்கின்றது. அதன் வெளிப்பாடாக அமைந்துள்ள திருக்குறள், நற்சிந்தனை போன்றன எமது வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களை கொண்டமைந்ததுள்ளது மிகவும் சிறப்பான ஒரு விடயமாகும்.

அடுத்து அவர் தனது உரையில், இச்சுடரானது சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்து வாழ்க்கையில் இன்புறவேண்டிய விடயங்களைக் கூறுகின்றது. மேலும் இச்சுடரினை ஆய்வுசெய்வதன்மூலம் கோயில்களின் வரலாறுகள், புராணக்கதைகள், நாயன்மார் களுடைய வரலாறு இன்னும் பல அம்சங்களை மாதந்தோறும் அறிந்து கொள்ளலாம் என்று கூறினார்.

இறுதியாக அவர் தனது உரையில், ஞானச்சுடர் மலரானது பல்வேறு ஆக்கங்களை தன்னகத்தே கொண்டு வெளிவந்தாலும், அதனை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் மொழியும் மதமும் முக்கியமானவையாக அமைந்துள்ளன. தனிப்பட்ட மனிதனது வாழ்வியலுடன் பல்வேறு வகையில் அவன் பேசுகின்ற மொழியும் அவன் பின்பற்றுகின்ற மதமும் பின்னிப்பிணைந்து காணப்படுவதுடன் அவனது வாழ்வியலின் போக்கைத் தீர்மானிப்பதிலும் அவனது மொழியும் மதமும் பெரும் பங்குவகிப்பதையும் காணமுடிகிறது. முக்கியமாக அவனது ஜீவஆத்மாவை வழிப்படுத்துவதில் இவை இரண்டுமே பிரதான இடத்தை வகித்துக்கொண்டிருப்பதை நாம் ஒவ்வொருவருமே உணர்ந்துகொள்ள முடியும்.

அதேநேரம் சமூகரீதியாக ஒருவனை அடையாளப்படுத்தும்பொழுது அவனது மொழியும் அவன் பின்பற்றுகின்ற மதமும் இணைகின்றபொழுது அது மிகவும் முக்கியமானதும் துல்லியமானதுமான அடையாளமாக நோக்கப்படுகின்றது. இலங்கையை எடுத்துக் கொண்டால் தமிழ் மொழி பேசுபவர்கள் எல்லோரும் தமிழர்களாக நோக்கப்பட்டாலும் மொழியுடன் மதத்தையும் இணைக்கும்பொழுதுதான் ஒவ்வொரு சமூகக் குழுக்களையும் சிறப்பாக இனங்கண்டு அடையாளப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

இந்தவகையில் இலங்கையில் தமிழைத் தாய் மொழியாகவும் இந்து மதத்தை தமது வழிபாட்டு மார்க்கமாகவும் கடைப்பிடிக்கின்ற மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் சமூகமாகக் கணிக்கப்படுகின்றனர். இவர்கள் இலங்கையின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் இவர்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, நாகரிகம் என்பன எல்லாம் இந்த மக்கள் தொகுதியை தனித்துவமானதாக வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது. சுருக்கமாகக் கூறுவதானால் பிரதேச ரீதியான ஒரு வேறுபாட்டைத் தவிர ஏனைய அம்சங்கள் எல்லாவற்றிலும் இவர்கள் ஒற்றுமைப் பண்புள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். இந்த ஒற்றுமைப் பண்பை மேலும் வளர்க்க வேண்டியது மிகவும் அவசியமானதும் அவசரமானதும் என்பதை நாம் அனைவரும் உணருதல் வேண்டும். ஈழத்தில் சைவமும் தமிழும் இணைந்ததாகவே வளர்க்கப்பட வேண்டும்.

இலங்கையில் எல்லாக் கிராமங்களிலும் முக்கியமாக பெரும்பான்மை மக்கள் மத்தியில் வாழுகின்ற சைவ சமயத்தைப் பின்பற்றுகின்ற தமிழர்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் தாம் விரும்பியோ, விரும்பாமலோ தமது அடையாளங்களை இழந்து வருவதை நாம் காணமுடிகிறது. இதனை வடகிழக்குப் பகுதிகளில் வாழுகின்ற சைவ சமயத்தவர்கள் உணர்ந்து அவர்களை நாடிச்சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி அவர்கள் தமது அடையாளத்தை இழந்து போகாது பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்நிதியிற் சண்முகனை மறப்போமோ!

சந்நிதி முருகனிடஞ் செல்லுங்கள் - அவன்
சரணார விந்தமேந்திப் பணியுங்கள்
எந்நிதி வேண்டுமேனுங் கேளுங்கள் - அவனை
எந்நாளும் மனத்திலேகொண் டாடுங்கள்

கேட்டதெல்லாம் அள்ளியள்ளித் தருபவன் - நீங்கள்
கேளாதன வற்றையுமே தருபவன்
வாட்டமின்றிச் சென்றவனைப் பணியுங்கள் - உங்களை
வாடாமல் காத்து வாழ வைப்பவன்

ஆறுமுகம் பன்னிருகை யுடையவன் - மற்றும்
அழகுமயில் வாகனமே லேறியே
கூறுஞ் சேவற் கொடி வீசி - அவனியில்
குஞ்சரி வள்ளிசூழ வருபவன்

பாட்டுந் தொகை நூலும் தொல் காப்பியம்
பதினென் கீழ்க் கணக்குஞ் சொல்லித் தந்தெனை
மேட்டிமையாய்ச் சிலம்பு சிந்தாமணி - மணி
மேகலையும் படிக்க வைத்த வேலவனே
(பாட்டு- பத்துப்பாட்டு, தொகை எட்டுத் தொகை)

ஆசுகவி எனவுலகம் பேசவே - யாழ்
ஆரிய திராவிட பாஷா சங்கமே
மாசில் புலவர் மணி விருதைத் தந்திட - எனக்கு
ஞானச்சுடரைக் காட்டி முன்னே நின்றவன்

நாற்பதின்மேற் பிரபந்தங்கள் பாடவும் - இந்த
நானிலமே யறிந்து என்னைப் போற்றவும்
சாற்றவைத்தான் நூறு வயதிலும் - இந்தச்
சந்நிதியிற் சண்முகனை மறப்பேனா!

—முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2014 ஐப்பசி மலர்

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா

(லண்டன்)

M. சதாசிவமூர்த்தி

(கனடா)

கனகராசா ஸ்ரீமோகனன்

(பிரதேச செயலர், தெல்லிப்பழை)

செ. ஞானசபேசன்

(கிராம அலுவலர், ஏழாலை)

சி. மகேஸ்வரன்

(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர் )

சி. உதயகுமார்

(கிராம அலுவலர், கைதடி)

தலைவர்

(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

தி. இரவீந்திரநாதன்

(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

ஆ. வடிவேலு

(இளைப்பாறிய அதிபர், தும்பளை)

ச. நாராயணன்

(கிராம அலுவலர், வடலியடைப்பு)

சி. ஜெயபரன்

(மானிப்பாய்)

உரிமையாளர்

(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

சி. துளசிங்கம்

(சந்நிதி, தொண்டைமானாறு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. இராசசேகரம்

(இளைப்பாறிய பொது முகாமையாளர், நீர்வேலி)

இ. சண்முகசுந்தரம்

(ஆசிரியர், மந்திகை)

S. செல்வராசா (செல்வி)

(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)

மு. அப்புலிங்கம்

(கோண்டாவில் கிழக்கு)

S. தங்கசிவம்

(நல்லூர் யாழ்ப்பாணம்)

ந. சிவக்குமார்

(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)

திருமதி ஜெயராஜன் சசிலேகா

(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)

ப. தியாகராஜசர்மா

(திருமகள் வாசா, ஆவரங்கால்)

மகாலிங்கம் செல்வமணி

(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

K. முகுந்தன்

(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)

நா. நாகராசா

(புக்கிஸ்லேன், மானிப்பாய்)

ந. மணிவண்ணன்

(இரும்புமதவடி, வதிரி)

இராதாகிருஷ்ணன் கிரிதரன்

(தம்பலடி, பொலிகண்டி)

ஆ. யோகதாசன்

(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)

செ. இராசநாயகம்

(காப்பாளர், இ.போ.ச, அல்வாய்)

K. சீவரெட்ணம்

(கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவன் கனகன்

(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)

வே. முருகவேள்

(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

க. சத்தியதாஸ்

(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)

வ. இராசநாயகம்

(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)

க. வசந்தகுமார்

(ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்)

உரிமையாளர்

(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)

விக்னேஸ்வரி கணேசநாதன்

(வேளாங்கண்ணி, ஏழாலை)

சி. பத்மராசா

(நவிண்டில், கரணவாய்)

T.R. இரத்தினவேல்

(அரசவீதி, உரும்பராய்)

கா. குணவதி

(நேசபவனம், உடுப்பிட்டி)

பா. இந்துராணி

(மல்ரி ஓயில், இணுவில்)

சு. சுந்தரலிங்கம்

(வேவில் லேன், வல்வெட்டி)

வீ. வடிவேலு

(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

பொ. கணேசபிள்ளை

(பாடசாலைவீதி, கோண்டாவில்)

சிவலிங்கம் சுகந்திகா

(ஆதியாமலை, உடுப்பிட்டி)

த. கனகம்

(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் இந்திரமோகன்

(சண்டிலிப்பாய் மேற்கு)

திருமதி சிவநிதி முருகானந்தன்

(கட்டுடை, மானிப்பாய்)

இராசரத்தினம் வேல்குமார்

(இணுவில்வீதி, மானிப்பாய்)

P. சபாநாதன்

(யாழ்வீதி, மானிப்பாய்)

M. செந்தூரன்

(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

க. முருகானந்தம்

(காளிகோவிலடி, மல்லாகம்)

த. சொக்கலிங்கம்

(இணுவில் தென்மேற்கு)

பா. சியாமளநாயகி

(சுண்ணாகம் கிழக்கு)

கிட்டிணன் ஜெயக்குமார்

(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)

கு. ஜெகதீஸ்வரன்

(இராசவீதி, கோப்பாய் வடக்கு)

கி. ஜெயக்குமரபதி

(இடைக்காடு, அச்சுவேலி)

க. துரைராசா

(சுதுமலை வடக்கு)

அருச்சுனன் சுனோஜா

(தும்பளை தெற்கு)

சி. புஸ்பரதி

(கரணவாய் மத்தி)

இ. சிவபாதம்

(நீலமயில் வாசா, அல்வாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட வாழ்க்கையின் உயிர்நாடி கட்டுப்பாடு

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

இறைவன் தன்னை வழிபட மேன்மையான மானுடப்பிறவியைப் படைத்தான். நெறிப்பட்ட வாழ்வைக் கொண்ட மானுடன் புலன்வழி செல்லாது மனதை ஒருவழிப்படுத்தி இறைவனை வழிபடவேண்டும். புலன் அடங்கி, மனம் ஒடுங்கி வழிபடும் தலம் கோயில் ஆகும். இதனால் கோயிலுக்கு ஆலயம் (ஆ+லயம்) ("ஆ" என்றால் ஆன்மா, "லயம்" என்றால் ஒடுங்குதல்) என்ற பெயர் வந்தது. மனம் ஒடுங்குவதற்கு சுயகட்டுப்பாடு மிகவும் அவசியம். எனவே மானுடன் மானுடனாக வாழ உயிர்நாடியாகவுள்ளது கட்டுப்பாடு என்று கூறினால் மிகையாகாது.

மனிதன் வினையை ஒழிக்கவே பூமியில் பிறக்கின்றான். இவற்றை அடையவிடாது மண், பொன், பெண் ஆசைகள் தடுக்கின்றன. மனக்கட்டுப்பாடுடையவன் இவற்றைத் தகர்த்தெறிகின்றான். சுயகட்டுப்பாடு மனிதனிடம் ஏற்படுவதற்கு

(1) நான் யார்?

(2) நான் ஏன் பிறந்தேன்?

(3) எனது கடமைகள் என்ன?

ஆகிய வினாக்கள் வழி சமைக்கின்றன. மனிதனிடம் மனக்கட்டுப்பாடு ஏற்படும்போது மனிதநேயம் பிறக்கின்றது. உயிர்கள் மேல் அன்பு, கருணை பிறக்கின்றது. கொலை, களவு, கள்ளுண்ணல், விபசாரம், சூதாட்டம் ஆகிய பஞ்சமாபாதகங்களையும் ஒழிக்க மனம் தூண்டப்படுகின்றது. இதனால் நெறிப்பட்ட வாழ்க்கையை மனிதன் அமைத்துக் கொள்ளுகின்றான். அது மட்டுமன்றி மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகிய மனித வாழ்க்கையின் படிகளையும் கற்றுக்கொள்ளுகின்றான். கட்டுப்பாடுடைய சீரிய வாழ்க்கையின் பயனாக இறைவனை அடைகின்றான்.

தானாக உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்துதல் சுயகட்டுப்பாடு என்றும், பெற்றோர், குரு வேறு பிறரால் புத்திமதி கூறிக் கட்டுப்படுத்துதல் இன்னொரு வகைக் கட்டுப்பாடு ஆகும். முனிவர்கள் சுயகட்டுப்பாடுடன் தவம் செய்கின்றார்கள். சுயகட்டுப்பாடுடையவர்கள் உலகில் மேதைகளாகவும், பெரியோர்களாகவும் போற்றப்படுகின்றனர். ஒழுக்க நெறியைப் பற்றி வள்ளுவப் பெருந்தகை

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தொழித்து விடின்"

என மானுடருக்கு புத்தி கூறுகின்றார். இன்னும் அவர்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

**மனப் பண்பாடே வாழ்க்கையின் முக்கிய நோக்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒழுக்கத்தின் பெருமையை பறைசாற்றுகின்றார். மனித வாழ்க்கையின் உயரிய கிரீடமாக விளங்குவது கட்டுப்பாடு ஆகும்.

மனித வாழ்க்கையில் ஒழுக்கக் கட்டுப்பாட்டை இழந்து வேதனை அடைந்த காசிப முனிவர், சந்திரன், இந்திரன் போன்றோரை இன்றும் உலகம் தூற்றுகின்றது. ஒழுக்க நெறியில் நின்று வாழ்ந்த மகாத்மா காந்தி, ஏபிரகாம் லிங்கன் போன்ற பெரியோர்களை இன்றும் போற்றுவதைக் காணலாம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பண்புகளை மானுடன் கடைப்பிடிக்க பெற்றோரும் ஆசிரியர்களும் துணைநிற்க வேண்டும். இப்பண்புகளை இளமை தொடக்கம் வளர்த்து வந்தால் தானாகவே மனிதனிடம் கட்டுப்பாடு ஏற்படும் என்பது திண்ணம். இன்னும் மனிதன் தினமும் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டு வந்தால் கட்டுப்பாடு ஏற்படும் என்பது வெள்ளிடைமலை எனவே மானுட வாழ்க்கைக்கு உயிர்நாடியாக விளங்குவது கட்டுப்பாடு என்று ஆணையிட்டுக் கூறலாம்.

## வந்தே ஒருதரம் பாருங்கள்

ஆறுமுகன் செல்வச் சந்நிதி மணிஒலி
அழைக்கிது ஓடி வாருங்கள்
குறமகள் தன்னுடன் இருப்பான் உங்கள்
குறைகளை இவனிடம் கூறுங்கள்
சூரனைப் பிளந்து தேவரின் துயரை
துடைத்தது இவனது வேலல்லவா
பாரினில் நாம்படும் துயரினைப் போக்க
பரிவுடன் இங்கே காத்திருப்பான்
மனமது உருகி முருகனின் முன்னே
இருகரம் ஏந்தி நில்லுங்கள்
வினைகளை நீக்கி துயரினை தீர்ப்பான்
விரைவினில் வந்து சேருங்கள்
அருண கிரியரின் உயிரினைக் காத்து
அவனது புகழைப் பாட வைத்தான்
அருட்கவி ஔவை தமிழினை கேட்க
அவளுக்கு சுட்ட பழமளித்தான்
அருளொடு அன்னமும் தானம் தருவது
ஐயன் முருகனின் கொடையாகும்
வருமடி யார்க்கு திருவொடு கல்வி
வழங்குதல் இவனது குணமாகும்
கந்தா முருகா கடம்பா என்றே
கண்ணீர் சிந்தி அழையுங்கள்
வந்தே கண்ணீர் துடைப்பான் இவனிடம்
வந்தே ஒருதரம் பாருங்கள்

-மூனாக்கானா-

ஆசையற்ற மனம் ஆண்டவனின் இருப்பிடம்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

## சகத்திநுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

### நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி



**பதவுரை:-**

வேதி போற்றி- ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கும் உயிர்களை அதன் மறைப்பினின்றும் நீக்கி உண்மை நிலையினை அடையச் செய்பவனே நினக்கு வணக்கம்; விமலா போற்றி- இயல்பாகவே மலங்களினீங்கினவனே நினக்கு வணக்கம்; ஆதி போற்றி- ஆதி சக்தியோடு கூடினவனே நினக்கு வணக்கம்; அறிவே போற்றி- அறிவுருவானவனே நினக்கு வணக்கம்; கதியே போற்றி- வீடுபேற்றினை அருள்பவனே நினக்கு வணக்கம்; கனியே போற்றி- கனியின் சுவை போன்றவனே நினக்கு வணக்கம்; நதி சேர் செஞ்சடை நம்பா போற்றி- கங்கையாறு பொருந்திய சிவந்த சடையினை யுடையவனே நினக்கு வணக்கம்; உடையாய் போற்றி- எப்பொருள்களையும் உடையவனே நினக்கு வணக்கம்; உணர்வே போற்றி- எவற்றையும் அறிபவனே நினக்கு வணக்கம்; கடையேன் அடிமை கண்டாய் போற்றி- கீழ்ப்பட்டவனாகிய எனது அடிமைத் தொண்டினையும் ஒரு பொருளாக ஏற்றுக் கடைக்கணித்தவனே நினக்கு வணக்கம்.

வேதி- வேதிப்பவன்; மாறுபடுத்துபவன். உயிர்களை அவற்றின் தன்மையினின்றும் நீக்கித் தன் தன்மையடையச் செய்தலின் இறைவனை "வேதி" என்றார். "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்" (அச்சோப் 1) என வருதலுங் காண்க.

விமலன்- மலங்களினீங்கினவன்; மாசற்றவன். இறைவன் ஆதிசக்தியோடு இயைந்தவனாதலின் "ஆதி" என்றார். "ஆதி பகவன் முதற்றே யுலகு" என்றார் திருவள்ளுவரும். இனி ஆதி என்பதற்கு எப்பொருட்கும் முதலேயெனினுமாம்.

**தீய செயல்களில் இருந்து விலகுவதே உண்மையான அறிவு.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறைவன் பேரறிஞுனும் அறிவுருவானவனுமாதலின் "அறிவே" என்றார். "ஞானந்தா னுருவாகிய நாயகன்" எனக் கந்தபுராணத்து (சூரனமைச்சியல் 128) வருதலுங் காண்க.

கதி- வீடுபேறு. கதியைக் கொடுப்பவனைக் "கதியே" என்றார். "மண்பொருந்தி வாழ்பவருக்கும் மாதீர்த்த வேதியர்க்கும், விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை" என அப்பரடிகள் (தே.12:5) அருளியமையுங் காண்க. இறைவன் கனிபோ லினியனாதலின் "கனியே" என்றார்.

"கனியினும்.... இனியன் தன்னடைந் தார்க்கிடைமருதனே"

நாவு 128:10.

"ஈசனெனுங் கனி, இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே"

205:7

"கற்றவர்களுண்ணுங் கனியே போற்றி"

நாவு 246:1.

"கற்றுள வான்கனியாய கண்ணுதலை" சுந் 51:9.
"கண்ணுதலைக் கனியை" சுந் 84:6.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. கனி என்றது தேமாங்கனி முதலாயினவற்றை.

"ஆமாத்தூ ரரனே யென்றழைத்தலும்
தேமாத் தீங்கனிபோலத் தித்திக்குமே" 157:3.

என அப்பரடிகள் அருளியமையுங் காண்க. கதியே போற்றி கனியே போற்றி என்பது கற்றவர்களுண்ணுங் கனியே போற்றி. கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி" எனத் தேவாரத்தும் (நாவு 246:1) வருதல் காண்க.

நதிசேர் செஞ்சடை நம்பன் என்றது பகீரதன் பொருட்டுப் பெருக்கெடுத்து வந்த ஆகாயகங்கையைச் சடையின்கண் ஏற்று அதன் செருக்கை அடக்கிய எம்பெருமான் என்றவாறு.

பகீரதன் தன் முன்னோர்கள் நற்கதியடையும் பொருட்டு ஆகாய கங்கையைப் பூமியிற் கொணரவேண்டி இறைவனை நோக்கித் தவஞ்செய்ய இறைவனருளாற் பலமுகமாகப் பெருக்கெடுத்துவந்த கங்கை தரையில் விழுந்து அதனைச் சிதையாமைப் பொருட்டு இறைவன் அதனைச் செஞ்சடையிற்றாங்கித் தரையில் இழியவிட்டனன் என்பது வரலாறு.

"மையறு மனத்த னாய பகீரதன் வரங்கள் வேண்ட
ஐயமி லமர ரேத்த வாயிர முகம தாகி
வையக நெளியப் பாய்வான் வந்திழி கங்கை யென்னுந்
தையலைச் சடையி லேற்றார் சாய்க்காடு மேவினாரே"

(65:7)

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்து வருதலுங் காண்க. செஞ்சடை- சிவந்த சடை. "கங்கைநீர் தங்கு செஞ்சடையாய்" (அருட் 9) என வருதலுங் காண்க.

நம்பன்- சிவபெருமான். "நம்பன் பகவன்.... எம்பிரான் பெயரே" எனப் பிங்கலந்தையில் வருதலுங் காண்க. இனி, எல்லாவுயிரும் விரும்புதற்குரியோன் எனினுமாம். "நம்பு மேவும் நசையாகும்மே" என்பது தொல்காப்பியம். (உரி) உணர்வே என்பதற்கு மெய்யுணர்வே எனினுமாம். "கடையேனடிமை கண்டாய்" என்பதற்கு கடைப்பட்டவனாகிய என்னை நினக்கு அடிமையாகச் செய்தவனே எனினுமாம். (தொடரும்...

**கடவுள் அருளால் நாம் விதியை வெல்ல முடியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரத்தில் முருகப்பெருமான்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –



மலையும் மலைசார்ந்த நிலமும் குறிஞ்சி நிலம். இந்தக் குறிஞ்சி நிலத்துக் கடவுள் முருகப்பெருமான். அதனால் அவனுக்குக் குறிஞ்சிக் குமரன் என்றும் பெயர்.

கைலை மலையில் அம்மை அப்பரோடும் அண்ணன் விநாயகரோடும் இருந்த முருகப்பெருமான், ஒரு மாங்கனிக்காய் உலகஞ் சுற்றி வந்தும், அது கிடைக்கவில்லை என்று, அம்மலையை விட்டு நீங்கித், திருப்பரங்குன்றம், திருவேரகம், திருச்சீரலைவாய், பழநி, திருவீழிமிழலை, ஆலவாய் என ஆறுபடைவீடு கொண்டான். அதனால் அவன் குன்றுதோராடும் குமரன் ஆனான். இதனைத் தொல்காப்பியம், சேயோன் மேய மைவரை உலகம் எனக் குறிப்பிடுகின்றது.

முத்தமிழ் முருகனான எங்கள் முருகப் பெருமானைப் பற்றித் தாம் பாடிய முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தில், பல இடங்களில் குறிப்பிட்டுப் பாடியுள்ளார் இளங்கோவடிகள்.

இதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். புகார் நகரத்தை மையமாகக் கொண்ட பெருநிலப்பரப்பையாண்ட சோழ மன்னனது மதிப்புக்குரிய மாசாத்துவான் மகனான கோவலன்,

“மண் தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண் தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண் டேத்தும் செவ்வேள் என்று இசை போக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான் மன்னோ”

எனக் கோவலனைச் செவ்வேளுக்கு ஒப்பிடுகின்றார் இளங்கோவடிகள்.

கோவலன் கண்ணகியைப் புகழ்ந்து கூறும்போது, முருகப்பெருமான் தனது வேலை, அவளுக்கு இரு கண்களாக்கிக் கொடுத்திருப்பதாக, அவனைக் கூற வைக்கிறார் இளங்கோ அடிகள்.

அறுமுக ஒருவன் ஓர் பொறிமுறை இன்றியும்
இருமுறை காணும் இயல்பினின் அன்றே
அஞ்சுடர் நெடுவேல் ஒன்று நின்முகத்துச்
செங்கடை மழைக்கண் இரண்டா ஈத்தது (மனையறம்)

என்பது சிலப்பதிகாரம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் “அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்” என்றும், மதுரையில், “கோழிச் சேவற்கொடியோன் கோட்டம்” என்றும் முருகப்பெருமானைக் குறிப்பிடுதல் காணலாம். குன்றக் குரவையில், ஆறுமுகங்கொண்ட கோலத்தில் முருகன் மயில்மீது சென்று அவுணரை அழித்தமையை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்தியவே லன்றே
பிணிமுக மேற்கொண்டு அவுணர்பீ டழியும்வண்ணம்
மணி விசும்பிற் கோணேத்த மாறட்ட வெள்வேலே"

என்றும்,

வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருபெயர்க் குன்றம் கொன்றநெடு வேலே"

என முருகன் கிரவுஞ்ச மலையைப் பிளந்த வரலாற்றையும் கூறுகின்றார். இன்னொரு இடத்தில்,

கடல் வயிறு கிழித்து மலை நெஞ்சு பிளந்து ஆங்கு
அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்" (கட்டுரை)

எனவும் கூறுகின்றது சிலப்பதிகாரம்.

மேலும், சரவணப் பொய்கையில், தாமரை மலர்களில் முருகன் ஆறு பாலர்களாகத் துயிலும்பொழுது, கார்த்திகைப் பெண்கள் அறுவரின் திருமுலைப்பாலை உண்ட சம்பவத்தை,

"சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான் திருக்கை வேலென்றே"

என்றும்,

"ஆலமர் செல்வன் புதல்வன் வரும்"

என்றும், வள்ளியை மணம் புணர்ந்த கதையைக் குறித்து

"மயிலியல் மடவரல் மலையர் தம் மகளார்"

என்றும் குன்றக் குரவையில் சிலப்பதிகாரம் கூறுதல் காணலாம்.

முருகன் கடப்பமாலையை அணிந்திருப்பதைக் குறிப்பிட்டுக்

"கார்க் கடப்பந்தார் எம் கடவுள்" எனப் பாடுகின்றார் இளங்கோவடிகள்.

இன்னும் அறுபடை வீடுகொண்டமையைக் குறிப்பிடுகையில்,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே"

என்றும் குன்றக் குரவையில் காட்டிய இளங்கோவடிகளார்,

கண்ணகி, மதுரையை எரித்தபின், அந்நகரைவிட்டுச் சேரநாடு சென்று, அங்கு முருகப்பெருமானுக்கு உகந்த திருச்செங்குன்றின்மீது ஏறினாள் என்பதை, "நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி" (கட்டுரை) என்னும் அடிகளால் குறிப்பிடுகின்றார் இளங்கோவடிகள்.

இவ்வாறாக சிலப்பதிகாரத்தில், கோவலனை அறிமுகஞ் செய்வதிலிருந்து கண்ணகி தெய்வமாய்த் திருச்செங்குன்றின்மீது ஏறியது வரை பல இடங்களில் முருகப்பெருமானைத் தொடர்புபடுத்திப் பாடியிருக்கிறார் இளங்கோவடிகள்.

முருகனைப் போற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



44. சாடுந் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ
வீடும் சுரர்மாமுடி வேதமும்வெங்
காடும் புனமுங் கழலே.

## பதவுரை

சாடும்- பகைவர்களையும், மலமாயா கன்மங்களையும் அழிக்கின்ற, தனிவேல் முருகன் சரணம்- ஒப்பற்ற வேலாயுதத்தை உடைய முருகனுடைய திருவடிகள், வீடும்- முத்தித் தலத்திலும், சுரர் மாமுடி- தேவர்களுடைய சிறந்த தலைகளிலும், வேதமும்- வேதங்களிலும், வெம் காடும் புனமும் கமழும்- வள்ளியம்மை வாழ்ந்த வெப்பமான காட்டிலும் தினைப்புனத்திலும் மணக்கும்படி விளங்கும், கழல் சூடும்படி தந்தது- அத்தகைய திருவடியை அடியேன் சென்னியின்மீது சூட்டிக் கொள்ளும்படி தந்தருளிய கருணையை, சொல்லுமதோ- சொல்ல முடியுமோ? முடியாது.

## பொழிப்புரை

அசுரர்களையும் மலமாயா கன்மங்களையும் அழிக்கவல்ல ஒப்பற்ற "வேலாயுதத்தை யுடைய முருகனுடைய பாதமலர், முத்தித் தலத்திலும், தேவர்களின் சிறந்த தலைகளிலும், வேதங்களிலும், வள்ளி பிராட்டியின் கானகத்திலும், தினைப்புனத்திலும் கமழ்வது ஆகும். அத்தகைய ஞானத் திருவடியை அடியேனும் சென்னியில் சூட்டிக் கொள்ளுமாறு தந்தருளிய அப்பரமனுடைய கருணைத் திறத்தைச் சொல்ல முடியுமோ? முடியாது.

## விரிவுரை

இந்த அநுபூதிப் பாடல் அருணகிரியாருக்கு ஆறுமுகப் பெருமான் திருவடி தீட்சை தந்த அருள் திறத்தைக் கூறுவது.

சிறந்த புண்ணியம் நன்றி மறவாமையாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சாடும்:-**

சாடுதல்- அழித்தல்.

இங்கே, சூராதியவுணரையும், ஆன்மாக்களின் மலமாயா கன்மங்களையும் அழிக்கின்றதைக் குறிக்கின்றது.

**தனிவேல் முருகன்:-**

தனி- ஒப்பற்ற. முருகனுடைய வேல் சமானமில்லாதது.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தரும்.

**சரணம்:-**

அடியார்க்குப் புகலிடமாயிருப்பது முருகனுடைய திருவடி. இந்த சரண கமலாலயம் நான்கு இடங்களில் கமழ்ந்தது.

**வீடும், சுரர் மாமுடி வேதமும், வெங்காடும், புனமும் கமழும்,**

(1) வீடு- முத்தித்தலம். வீடு- விடு என்ற முதனிலை நீண்ட தொழிற்பெயர். பந்த பாசத்திலிருந்து விட்ட இடமே வீடு. இது வடமொழியில்- முக்தி. முக்தி- விடுதலை. நத்தையிலிருந்து விடுபட்டதால் முத்து எனப்பட்டது.

(2) சுரர் மாமுடி- தேவர்களின் சிறந்த தலை.

(3) வேதமும் - நான்கு வேதங்கள்.

(4) வள்ளியம்மையிருந்த காடும் புனமும். இந்த இரண்டும் ஒன்றுதான்.

வீடும் சுரர் என்று ஒன்றுசேர்ந்து, சூரன் இட்ட சிறையிலிருந்து விடுபட்ட தேவர் என்றும்,

வீடும்- இறந்துபடுகின்ற அநித்தர்களான தேவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

வேதம்- இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம்.

வெங்காடும் புனமும்- வெப்பமான காட்டிலே வள்ளியம்மைக்கு அருள் செய்யும் பொருட்டு எம்பிரான் தன்னுடைய மென்மையான திருவடி வருந்த உலாவினார்.

"இமையவர் முடித்தொகையும் வனசரர் பொருப்புமென
திதயமும் மணக்கும் இரு பாதச் சரோருகனும்"

-வேடிச்சி காவலன் வகுப்பு.

"எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
இரலைமரை இரவுபகல் இரைதேர் கடாடவியில்
எயினரிடும் இதணதனில் இளகுதினை கிளிகடிய
இனிதுபயில் சிறுமிவளர் புனமீதுலாவுவதும்
........மணநாறு சீறடியே"

-சீர்பாத வகுப்பு.

**இயற்கையை மீறி எவரும் நடக்கமுடியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குறமறவர் கொடியடிகள் கூசாது போய் வருட
கரடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியி னிளமரம தேயாகி நீடியுயர் குன்றுலாவி"

(உறவின்முறை கதறி) திருப்புகழ்.

**கழல் சூடும்படி தந்தது சொல்லுமதோ:-**

மேலே கூறியவாறு அரியதிலும் அரியதாகிய முருகனுடைய பாதாரவிந்தம் சிறியேனுடைய சென்னியில் சூடும்படி தந்தருளினார். அக்கருணையின் எளிமையை அடியேனால் அளவிட்டு உரைக்க எண்ணுமோ என்று அடிகளார் வியந்து விளம்புகின்றார்.

திருவடி தீட்சை பெற்றவரிடம் கூற்றுவன் குறுகான்.

"கோவாய் முடுகி அடுதிறற் கூற்றம் குமைப்பதன்முன்
பூவார் அடிச்சுவ டென்மேற் பொறித்துவை"

-அப்பர்.

"பூவார் அடிச்சுவ டென்மேல் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"

-திருவாசகம்.

"இபமுகவ னுக்குகந்த இளையவ மருக்கடம்ப
எனது தலையிற் பதங்கள் அருள்வோனே"

-(களபமுலை) திருப்புகழ்.

"நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்"

-(நினைந்துருகு) அப்பர்.

"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான்"

-பெரியபுராணம்.

அருணகிரியார் தன் சிரத்தில் வெவ்வேட் பரமன் திருவடி சூட்டிய கருணையைத் திருப்புகழிலும் கூறியுள்ளார்.

அப்பர் பெருமானுக்குத் திருநல்லூரிலே சிவபெருமான் திருவடி சூட்டியதை அப்பெருமானும் கூறுகின்றார்.

முருகா! மூவருக்கும் தேவருக்கும் வேதாகமங்கட்கும் எட்டாத நீர் ஒன்றுக்கும் பற்றாத மிகச் சிறியேனுடைய தலைமீது உமது திருவடியைச் சூட்டினீரே! என் தவமே தவம்! என் பாக்கியமே பாக்கியம்! ஆ! அடியேன் பெற்ற பேறு ஆர்பெறுவார்? என்னே நின் கருணை! அதனை என்னென்று சொல்வேன்! எப்படி வாழ்த்துவேன்! அது சொல்லுக்கு அடங்குமா? அடங்காதே.

உமது திருவடி பட்டதனால் என் தலையின்மீது இருந்த அயன் கையெழுத்து அழிந்துவிட்டதே. நாமகள் கணவன் நாணுகின்றானே!"

என்றெல்லாம் கந்தரலங்காரம் நாற்பதாவது பாடலில் கூறி அடிகளார் இன்பத்தினால் கிளுகிளுத்து உவகையுறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயுமானவர் தனக்குக் கிடைத்த திருவடி தீட்சையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

"அன்பருக் கன்பான மெய்யன் - ஐயன்
ஆனந்த மோனன் அருட்குரு நாதன்
தன்பாதஞ் சென்னியில் வைத்தான் - என்னைத்
தானறிந் தேன்மனந் தானிறந்தேனே"

**கருத்துரை**

முருகா! முத்தியிலும், தேவர் தலைப்பத்தியிலும், வேத வித்தையிலும், தினைப்புனச் சித்தியிலும் மணக்கும் உன் பாதார விந்தத்தை என் சிரத்தில் சூட்டிய பெருங்கருணை பேசுந்தரமன்று. (தொடரும்...

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 57

பல்லவி

பன்னிரு கையனே பரிந்தருள்வாய் – கந்தா
உன்னிரு பதமலரை உறுதியுடன் பிடித்தேன்

அநுபல்லவி

சந்நிதி நின்றாளும் சண்முகா வடிவேலா!
முன்வினை யாலெழுந்த மும்மல இருள்போக

சரணம்

நன்தினை மாவெடுத்து நறுந்தே னொடுபிசைந்து
பன்னிரு கையழகா பன்னிரு திரிபோட்டு
சென்னிறப் பொட்டிட்டு செழிமலர்ப் பொரிபோட்டு
என்மனத் துயரோட ஏற்றினேன் மாவிளக்கு

நன்கரு வதுஉறவும் உறுகரு நலம்பெறவும்
உன்திரு நீறுதீர்த்தம் உவந்திடு மருந்தாகும்
அன்னம தாலமிலை அறுபத்தைந்திற் படைத்தே
சந்நிதி வருவோரின் சகலநோயும் தீர்க்கும்.

-இராசையா குகதாசன்-

**கடவுள் சிந்தனை இருந்தால் பாவம் நுழையாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலியில் தேயிலை வளர்க்கும் தமிழரிடையே சமயப் பிரசாரம்

## யாழ்ப்பாணச் சைவச்சொற்பொழிவாளரின் நேரடி அனுபவம்

– திரு ச. லலீசன் அவர்கள் –

காலி மாவட்டத்திலும் மலைகள் உண்டு என அன்றுதான் நான் அறிந்து கொண்டேன். அழகான கடற்கரை, சீமெந்துத் தொழிற்சாலை, டச்சுக் கோட்டை எனக் காலியை அடையாளப்படுத்தும் இடங்களைத் தான் இதுவரையில் நான் அறிந்திருந்தேன்.

காலி மாவட்டத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் ஆயிரத்து ஐநூறு மக்கள் வாழும் பிரதேசம் தலங்ககா. காலியில் இருந்து உடுகம செல்லும் பாதையில் 30 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கிறது இவ்வூர். கூகுள் வரைபடத்தில் கூட இப்படியொரு இடம் இருப்பதாகத் தகவல்களைக் காணமுடியாத துலக்கமில்லாத ஊர். நாக்கியாதெனிய என்ற அஞ்சல் அலுவலக பிரதேசத்துள் இவ்விடம் இருக்கிறது.

ஆங்கிலேயரால் இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட மக்கள் இப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களின் கல்விக்காக க.பொ.த. சாதாரண தரம் வரை உள்ள ஒரு பாடசாலை மாத்திரம் காணப்படுகின்றது. அது தலங்ககா சரஸ்வதி வித்தியாலயம். அங்கு சில யாழ்ப்பாண ஆசிரியர்கள் அண்மையில் நியமனம் பெற்றுக் கல்வி கற்பிக்கத் தொடங்கியுள்ளனர்.

கல்வியில், பொருளாதாரத்தில் என எல்லாத்துறைகளிலும் வறுமையை எதிர்கொள்ளும் இவர்கள் மொழியையும் சமயத்தையும் மாற்றிக்கொண்டால் உய்வடையலாம் என்று நினைக்கிறார்கள் போலும்.

"தலங்ககாவில் தீவிர மதமாற்றம் இடம்பெறுகின்றது. மற்றைய சமயம் சார்ந்த பிரசாரகர்கள் அடிக்கடி இங்கு வந்து பிரசாரம் செய்கிறார்கள். இந்து சமயம் சார்ந்து யாரும் வருவதில்லை. இந்தமுறை நவராத்திரியை ஒட்டிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு எமது சமயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தித் தாருங்கள்."

இது அந்தப் பிரதேசத்தில் வாழும் ஒரே ஒரு அரச உத்தியோகத்தரான ஆசிரியர் சுப்பையா இராஜேந்திரன் என்னிடம் விடுத்த வேண்டுகோள். அங்கு பணியாற்றும் யாழ்ப்பாண ஆசிரியை சங்கீதா ஊடாகக் கிடைத்த இந்த அழைப்பை ஏற்று தயங்கித் தயங்கித் தலங்ககா நோக்கிப் பயணமானேன்.

காலியில் இருந்து வளைந்து வளைந்து உயர்ந்து செல்லும் குறுகலான பாதை வழியே பயணம். வழிவழியே அழகிய இயற்கைக் காட்சிகள். இயற்கையின் அழகு பயணத்தின் கடினத்தை மறைத்தது. சத்யா என்ற அன்பர் என்னைத் தனது மோட்டார் சைக்கிளில் ஒரு மணி நேரத்தில் தலங்ககாவிற்கு அழைத்துச் சென்றார்.

எனது வருகைக்காகக் காத்து நின்றவர்கள் போல் வாய்நிறையப் புன்னகையுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் "சுவாமி" என்ற எதிர்பார்ப்போடு வரவேற்றனர். (சத்தியமாக எனக்கு அப்படியொரு நினைப்பும் இல்லை) முதலில் தலங்ககாப் பாடசாலை பற்றிக் கூற வேண்டும். தலங்கக சரஸ்வதி

**தனது கோபம் என்றும் தன்னையே கெடுக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வித்தியாலயத்தில் 18 ஆசிரியர்களும் 311 மாணவர்களும் உள்ளனர். அதிபர் திரு ஏ.ஜே.எம். யசூர் பாடசாலை மீது பற்றுக்கொண்டவர் அதைவிடத் தனது சமயத்தின்மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர். இந்து சமய நடவடிக்கைகளில் பங்கெடுப்பதில் அவரிடம் நாட்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

தலங்ககா பாடசாலையில் கற்பிக்கும் 18 பேருள் இராஜேந்திரன் ஒருவரே ஊரவர். ஏனையவர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தோர் அல்லது காலியின் வேறு இடங்களைச் சேர்ந்தோராவர். இவர்களுள் எட்டுப் பேர் வரையிலேயே இந்துக்கள். வசதிகளற்ற நிலையிலேயே அங்கு தங்கி உள்ளனர். பெண்கள் ஒரு வகுப்பறையிலும் ஆண்கள் இன்னோர் வகுப்பறையிலும் தங்கி உள்ளனர். விரைவில் விடுதி அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறினர்.

இங்கு வாழும் பெரும்பாலான மக்கள் இந்துக்கள். தமிழர்கள். ஆயினும் இங்கு இப்பாடசாலையை விட்டால் கல்வி பெறுவதற்கு சிங்களப் பாடசாலைகளுக்குத்தான் போக வேண்டும். உயர் கல்வி ஆயின் காலி நகருக்கு வர வேண்டும். அங்கு தமிழ் மொழியில் கற்பதாயின் முஸ்லிம் பாடசாலைகளில் தான் கற்க வேண்டும். அல்லது தெனியாய போன்ற இடங்களுக்குப் போய் கத்தோலிக்கப் பாடசாலைகளில் கற்க வேண்டும். இதனால் கல்விக்காக மதம் மாறுகின்றவர்களும் இருக்கின்றனர். இதைவிடப் பொருளாதாரத்தில் வறுமையுற்றவர்கள் ஆதலாலும் கல்வியில் போதிய அக்கறையை வெளிப்படுத்தாதவர்கள் என்பதாலும் இலகுவில் மற்றையவர்களுடைய ஆசை வார்த்தைகளுக்கும் அவர்கள் வழங்கும் அன்பளிப்புக்களுக்கும் மயங்கி இந்து சமயத்தை விட்டு வேறு வசதியான சமயம் ஒன்றிற்குப் போய் விடுகின்றனர்.

இந்தப் பிரதேசத்தின் வரலாற்றில் இந்த ஆண்டிற்தான் ஒரு மாணவன் பல்கலைக்கழகத்திற்கும் ஒரு மாணவி கல்விக் கல்லூரிக்கும் அனுமதி பெற்றுச் சென்றுள்ளனர். மாணவன் தனது உயர்கல்வியை நீண்ட தூரத்தில் உள்ள கொட்டகலையில் பெற்றுள்ளார். மாணவி மதமாற்றத்திற்கு உட்பட்டு நீண்ட தூரத்தில் உள்ள தெனியாய சென்று உயர் கல்வியைப் பெற்றுள்ளார்.

"எங்களைத் தேடி முதன்முதலாக இந்துசமயம் சார்ந்து செய்தி சொல்ல வந்தவர் நீங்கள்தான் ஐயா" ஆசிரியர் இராஜேந்திரன் என்னைக் கண்ட மகிழ்வில் தனது மனக்கிடக்கையை வெளிப்படுத்தினார்.

தலங்ககா உள்ளிட்ட பெருந்தோட்டப் பிரதேசங்கள் யாவற்றையும் வட்டவல தேயிலைத் தோட்ட நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. நாங்கள் விரும்பிப் பருகும் வட்டவல மற்றும் செஸ்ரா தேயிலைகள் இங்குதான் பயிரிடப்படுகின்றன. அதைவிட பைன் மரச் செய்கையும் பெருமளவில் இடம்பெறுகின்றது. இளைஞர்கள் பைன்மரத் தோட்ட வேலைகளிலேயே பெருமளவு ஆர்வம் கொண்டுள்ளனர். அதற்குத்தான் மற்றைய வேலைகளோடு ஒப்பிடும்போது கூடியளவு ஊதியம் கிடைக்கின்றது. அவர்கள் பெறுவது என்னவோ குறைந்த ஊதியம் தான். ஆனால் ஒரு பவுசர் பைன் எண்ணெய் 35 இலட்சம் பெறுமதியுடையதாம். இவை எல்லாம் முதலாளி வர்க்கத்திற்கே சேர்கின்றன.

தலங்ககாவில் இடம்பெற்ற விழாவில் மாணவர்களும் பெற்றோர்களும் எனப் பலர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை

**தாய்மொழியை இழப்பவர் தம்மையே இழப்பார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகளுடன் எனது உரை பிரதான நிகழ்வாக அமைந்தது. நிகழ்வில் ஆசியுரை நல்கவெனக் காலியில் இருந்து குருக்கள் ஒருவரை அழைத்து வந்திருந்தனர். தான் இந்தியாவில் இருந்து சமஸ்கிருத மொழியிலேயே கல்வி கற்றதால் பெருமளவு சமஸ்கிருதமும் சிறிதளவு தமிழும் கலந்து தான் பேசுவேன் எனத் தனது பேச்சை ஆரம்பித்தார். அதனை ஒலிப்பதிவு செய்து யாழ்ப்பாணத்தில் உள்ள சமஸ்கிருதம் நன்கு அறிந்தவர்களுக்குப் போட்டுக்காட்டினேன். அவர்கள் நகைத்தபடி இதுதான் அங்குள்ள நிலையோ ஐயோ.. என்றனர். ஏதோ வாய்க்கு வந்தபடி விளங்காத வார்த்தைகளைச் சொல்லித் தன் கடமையை முடித்தார் அவர். தொடர்ந்து என்னுடைய உரை. எனது யாழ் மண்மணம் வீசும் தமிழை அவர்கள் புரிந்து கொள்வார்களோ என்ற அச்சம் என்னுள் இருந்தாலும் எனது கலாசாலையில் மலையகப் பிள்ளைகளுக்குக் கற்பித்த அனுபவம் அன்று எனக்குக் கைகொடுத்தது. நித்திரை என்பதைத் தூக்கம் என்றும் இருங்கள் என்பதை உட்காருங்கள் என்றும் மனைவி என்பதைச் சம்சாரம் என்றும் சொல்வது பொருத்தம். இப்படி ஏராளமான வார்த்தைகள் உள்ளன. இருப்பினும் அங்குள்ள யாழ்ப்பாண ஆசிரியர்களின் பேச்சு மொழியைப் பிள்ளைகள் கேட்டிருந்தமையால் என் பேச்சைக் கேட்பதில் அவர்கள் சிரமப்படவில்லை. ஆன்மீகத்தோடு கல்வியின் சிறப்பை வலியுறுத்துவதாகவே எனது பேச்சை அமைத்துக் கொண்டேன்.

தலங்ககாப் பிரதேச மதமாற்றத்திற்கு இன்னொரு பிரதான காரணத்தையும் குறிப்பிட வேண்டும். பிளவுற்ற குடும்ப நிலைமையே அது. தாய் வெளிநாட்டுப் பணிப்பெண்ணாக வேலை தேடிச் சென்று விட... தந்தை பிள்ளைகளைக் கைவிட்டு நிற்க... - ஆதரவற்ற நிலையில் இருக்கும் பிள்ளைகளை பிறசமய நிறுவனங்களே ஏற்றுக் கொள்கின்றன. அவர்களை ஆதரித்துக் கல்வி கொடுக்கின்றன. இது விடயத்தில் இந்து சமயம் சார்ந்த நிறுவனங்களின் பார்வை தலங்ககா மீது இன்னும் விழவில்லை. அறநெறிப் பாடசாலையில் ஆசிரியப் பணியாற்றியவரையும் மதமாற்றப் பிசாசு விட்டுவைக்கவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

தலங்காப் பாடசாலையின் விழாவை மாலையில் முடித்துக்கொண்டு பொழுது சாயும் நேரம் என்னை உடகம ஓமந்தல முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். காணும் இடம் எங்கணும் இயற்கையை இரசித்தபடி இருபது நிமிட மோட்டார் சயிக்கிள் பயணத்தில் ஓமந்தலவை அடைந்தேன். அரச சார்பற்ற நிறுவனத்தில் வேலை செய்யும் திரு மாதவன் என்னை வரவேற்றார். அந்தக் களத்தைப் பற்றி விளக்கினார்.

உடகம நகருக்கு அண்மையில் உள்ள கிராமம்தான் ஓமந்தல. இங்கு சில நூற்றுக்கணக்கிலேயே தமிழ் மக்கள் வாழ்கின்றனர். தமது பிரதான பேச்சு மொழியாகத் தற்போது சிங்களத்தையே கொண்டுள்ளனர். இப்பிரதேசத்தில் தமிழ்ப் பாடசாலைகள் எதுவும் இல்லாமையால் இவர்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்கள் தமது பிரதான குல தெய்வமாக முத்துமாரியையே கொள்கின்றனர். பார்ப்பவரை அச்சங்கொள்ளச் செய்யும் வகையில் சிமெந்தினால் ஆன உருவச் சிலைகளே கோவில் கருவறைகளில் உள்ளன. கருவறையை அடுத்து மக்கள் நின்று வழிபடும் இடம். ஏறத்தாழச் சிறிய வீட்டைப் போலத் தமது இயல்புக்கேற்பக் கோவில்களை அமைத்துள்ளனர். கோவில்களில் மந்திரமில்லாத பக்தி

புல்லிய எண்ணங்கள் மனக்குழப்பம் தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வமான வழிபாடு. பூசாரி என்று அவர்களால் அழைக்கப்படும் இளைஞர்களே பக்தி பூர்வமாகப் பூசை செய்கின்றனர்.

இந்து சமயம் என்றால் என்ன? ஏன் பல தெய்வங்களை நாம் வழிபடுகின்றோம். எமது சமயத்தின் தொன்மைகள் பெருமைகள் எவை என எனது ஒரு மணி நேர உரை அங்கு இடம்பெற்றது. மாதவன் அதனைச் சிங்கள மொழியில் அவர்களுக்குப் புரிய வைத்தார். அந்தப் பிரதேசத்தில் தமிழும் சைவமும் வாழ வேண்டும் என்ற தீவிரம் மாதவனிடம் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

தொடர்ந்து நாக்கியாதெனியவில் உள்ள படகெடிய முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அழைத்துச் சென்றார் ஆசிரியர் இராஜேந்திரன். கடும் இருட்டிலும் எனது வருகைக்காக நூற்றுக்கணக்கான மக்கள் காத்திருந்தனர். அவர்களுள் பலர் காலையில் பாடசாலையில் என் உரையைக் கேட்டவர்கள். அங்கும் இந்து சமயம் பற்றிய சிறப்புக்களை எளிமைப்படுத்தி விளக்கினேன். அவர்களது சந்தேகங்களுக்கும் பதிலிறுத்தேன். இந்து சுயம் சேவா சங்கத்தினர் தங்கள் மத்தியில் வந்ததாகத் தெரிவித்தனர். இலங்கைக்கான பிரதிநிதி திரு இராதாகிருஷ்ணன்ஜி இக்கோவிலுக்கு வந்துள்ளார் எனவும் பெருமையாகக் கூறினர். மகிழ்ச்சியாக இருந்தது. திரு இராதாகிருஷ்ணன்ஜி தீவிர இந்துப் பற்றாளர். மத மாற்றத்திற்கு எதிராகக் கடுமையாக உழைப்பவர்.

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தவூர் மக்கள் மிகுந்த மரியாதையுடன் விடை தந்தனர். சிறிய குறுகலான பாதைகளில் தனது மோட்டார் சைக்கிளின் வெளிச்சத்தில் இராஜேந்திரன் என்னை தலங்ககா கீழ்ப்பிரிவில் உள்ள விவேகானந்தர் அறநெறிப் பாடசாலையின் விழாவிற்கு அழைத்துச் சென்றார். விசேடமாகப் பந்தர் அமைத்துச் சமய எழுச்சி விழாவாகக் கலை நிகழ்வுகளை ஆற்றுகை செய்துகொண்டிருந்தனர். அந்தத் தோட்டத்துப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பழக்கிய நடனங்கள் மற்றும் பாடல்கள் அழகாக மேடையேற்றப்பட்டன. தலங்ககா பாடசாலைக்குச் சமீபமாகவே இந்த இடம் அமைந்துள்ளது. இதனால் பாடசாலைகளில் தங்கியிருந்த ஆசிரியர்களும் அங்கு வந்திருந்தனர்.

தலங்ககா அறநெறிப்பாடசாலை விழாவில் உரையாற்றி அவர்கள் விழாவையொட்டி நடத்திய போட்டிகளுக்குப் பரிசில் வழங்கி அங்கிருந்து விடை பெற்றேன்.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. நின்று சென்றால் என்ன என என்னை வினயமாகக் கேட்டனர். இருப்பினும் என் நிலையைப் புரிந்து கொண்டனர். திரு இராஜேந்திரன் தனது உடற்சோர்வையும் பாராது யாருமற்ற தெருவில் என்னைக் காலி நோக்கி மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்தார். வழியில் இடையிடையே இருந்த காடுகளின் இருள் என்னை மிரட்டியது. கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை துணிவைத் தந்தது. இராஜேந்திரன் என்னைக் கொழும்பு பஸ் ஒன்றிலும் ஏற்றி விட்டார்.

“இந்து சமயம் சார்ந்து எத்தனையோ பேரை அழைத்துப்பார்த்தேன் சார். யாரும் வரல்ல.. நீங்க வந்து எங்களுக்குக் கைகொடுத்தீங்க.. என்னிக்குமே மறக்க மாட்டோம் சார்....” கண்களில் நீர் கனக்க விடை தந்தார்.

தலங்ககா மக்களைச் சந்தித்தது என் வாழ்வில் மறக்க முடியாத அனுபவம். கூழுக்கு உப்பில்லையே என்று அங்கு அவர்கள். பாலுக்குச் சர்க்கரை இல்லையே என்று இங்கு நாங்கள்.

அன்பற்ற வாழ்க்கை சாவுக்கு ஒப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 12. உயிர்கள் மூவகையினர்

திரிமலத்தார் ஒன்று அதனில் சென்றார்கள் அன்றி
ஒரு மலத்தா ராயும் உளர்.

**பொருள்:**

எல்லாவுயிர்களும் மூவகையுள் அடங்கி நிற்பர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலமும் உடையவர் எனவும், அவற்றுள் மாயை நீங்கிய இருமலம் உடையவர் எனவும், மாயையோடு கன்மமும் இன்றி ஒரு மலமே உடையவர் எனவும் இங்ஙனம் மூவகையினராவர்.

**சொற்பொருள்:**

திரிமலத்தார்- மும்மலமும் உடையவர் எனவும், அதனில் ஒன்று சென்றார்கள்- அம்மும்மலங்களுள் ஒன்று நீங்கி இருமலம் உடையவர் எனவும், அன்றி- அவரேயன்றி, ஒருமலத்தாராயும்- ஒரு மலமே உடையவர் எனவும், உளர்- இங்ஙனம் அனைத்துயிரும் மூன்று வகையினராய் உள்ளனர்.

**விளக்கம்:**

மும்மலமும் உடையவர் சகலர் எனவும், இருமலம் உடையவர் பிரளயாகலர் எனவும், ஒரு மலமே உடையவர் விஞ்ஞானகலர் எனவும் பெயர்பெறுவர். இம்மூவகை உயிர்களிடத்திலும் ஆணவ மலம் என்ற ஒன்று மட்டும் பொதுவாக உள்ளது என்பது விளங்கும்.

**ஆணவப் பிணிப்பில் வேறுபாடு:**

ஆணவ மலம் இயல்பிலே எல்லாவுயிர்களையும் பிணித்து நிற்பதாகும். ஆயினும் அப்பிணிப்பு ஒரே வகையாய் இல்லாது, உயிர்தோறும் வேறுவேறு வகையாகவே இருக்கும். அப்பிணிப்பு உயிர்களின் நிலைக்கேற்ப வன்மை, இடைமை, மென்மை என மூவகையாய் நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகலர்:**

ஆணவ மலம் வன்மையாய்ப் பற்றிய உயிர்களுக்கு அம்மலத்திற்கு மாற்றுப் பொருளாக மாயை, கன்மம் என்னும் இரு மலங்களை இறைவன் சேர்ப்பிக்கின்றான். மாயை என்பது இங்கே அசுத்தமே வடிவாகிய பிரகிருதி மாயையைக் குறிக்கும். பிரகிருதி தனது முக்குணங்களால் உயிர்களுக்குப் பெருமயக்கத்தை விளைவிப்பதாகும். அது தனு, கரண, புவன, போகங்களாய் அமைந்து உயிர்களை மயக்குகிறது. உயிர்கள் உலக வாழ்வில் மயங்கி, ஆணவ மலத்தின் தூண்டுதலால் யான் எனது என்று பற்றுக்கொண்டு கன்மங்களைச் செய்கின்றன. இவ்வாறு ஆணவ பந்தம் வன்மையாய் உள்ள உயிர்களை ஏனைய மாயை, கன்மம் என்னும் இரு மலங்களும் வந்து பற்றும். மும்மலமும் உடைய இவர்கள் சகலர் எனப்படுகின்றனர்.

சகலர் என்ற சொல்லுக்குக் கலையோடு கூடியவர் என்பது பொருள். கலை என்பது பிரகிருதி மாயையைக் குறிக்கும். எனவே, கலையாகிய பிரகிருதி மாயையோடு கூடியவர் சகலர் எனப் பெயர் பெற்றனர்.


**பிரளயாகலர்:**

இனி, ஆணவ மலம் வன்மையாய் நில்லாது இடைமையாய் நிற்கும் உயிர்களுக்கு மேற்கூறிய பிரகிருதி மாயையின் தொடர்பு நீங்கும். ஆயின், கன்மம் எனப்படும் வினை உண்டு. அதனால் அவர்கள் ஆணவம், கன்மம் என்னும் இருமலம் உடையவராயினர். ஏதோ ஒரு பிரளயத்தில் (ஊழிக் காலத்தில்) இவர்கள் கலையாகிய பிரகிருதியினின்றும் நீங்கினர். ஆதலால் பிரளயாகலர் எனப்பட்டனர். அகலர்- கலையில்லாதவர்.

**விஞ்ஞானகலர்:**

இனி, ஆணவ பந்தம் மென்மையாய் உள்ள உயிர்களுக்குப் பிரகிருதியோடு கன்மமும் இல்லையாகும். அவர்கள் விஞ்ஞானகலர் எனப்படுவர். விஞ்ஞானமாவது சிறந்த ஞானம். அது சிவனால் உணர்த்தப்படுவது. எனவே அவர்கள் ஒரு காலத்தில் இறைவனால் உணர்த்தப்படும் சிறந்த ஞானத்தைப் பெற்றுப் பிரகிருதியோடு கன்மமும் நீங்கப் பெற்றமையால் இப்பெயர் பெற்றனர்.

இதுகாறும் கூறியவற்றால், பிரகிருதியோடு கூடியிருப்பவர் சகலர் என்பதும், பிரகிருதியினின்றும் நீங்கியவர் அகலர் என்பதும் விளங்கும்.




**மூன்று மாயைகள்:**

சகலர் பிரகிருதி மாயையோடு தொடர்புடையவர்கள் ஆதலால் அவர்கள் வாழும் உலகங்கள் பிரகிருதி மாயையில் உள்ளன என்பது விளங்கும். அவர்களுக்கு அமைந்த உடம்புகளும், நுகர்ச்சிப் பொருள்களும் பிரகிருதியின் காரியங்களேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப் பிரளயாகலரும் விஞ்ஞானகலரும் பிரகிருதியினின்றும் நீங்கியவராயிற்றே. அவர்கள் வாழ்வது எங்கே? அவர்களுக்கு உடம்பு முதலியவை எவ்வாறு அமையும்? என வினவலாம்.

உயிர்களுக்கு இடம் மாயை ஆகும். உயிர்கள் மூவகையினராய் அமைதல்போல மாயையும் மூன்றாக அமையும். அவை சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என்பன. சகலருக்குப் பிரகிருதி மாயை இடமாக அமையும் என அறிந்தோம். பிரளயாகலருக்கு அசுத்தமாயை இடமாகும். எனவே அவர்கள் வாழும் உலகங்கள் அசுத்த மாயையில் உள்ளன என்பது விளங்கும். விஞ்ஞானகலருக்குச் சுத்த மாயை இடமாகும். எனவே அவர்கள் வாழும் உலகங்கள் சுத்த மாயையில் உள்ளனவாகும். பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆகியோர்க்கு உடம்பும் நுகர்ச்சிப் பொருள்களும் ஆகியவை அவ்வவ் மாயைகளால் ஆனவை என்பதும் அறியத்தகும்.

### 13. மாயையுள் அகப்பட்டு மயங்குவோர்

மூன்று திறத்து உள்ளாரும் மூலமலத்து உள்ளார்கள்
தோன்றலர் தொத்து உள்ளார் துணை.

**பொருள்:**

மேற்கூறிய மூவகைப்பட்ட உயிர்களும் மூலமலமாகிய ஆணவத்தில் அகப்பட்டுள் ளார்கள். அவர்களுள் மாயைப் பிணிப்புள்ள சகலரே தமக்குத் துணையாய் உள்ள இறைவனை உணரப்பெறாது மயங்கி நிற்பர்.

**சொற்பொருள்:**

மூன்று திறத்து உள்ளாரும்- மும்மலம் உடையவர், இருமலம் உடையவர், ஒருமலம் உடையவர் என மேற்கூறிய மூன்று வகையாரும், மூலமலத்து உள்ளார்கள்- மூலமலம் எனப்படும் ஆணவமலப் பிணிப்பில் அகப்பட்டுள்ளார்கள், (அவருள்) தொத்து உள்ளார்- மாயைப் பிணிப்பில் அகப்பட்டுள்ள சகலரே, துணை- தமக்குத் தோன்றாத் துணையாய் உள்ள இறைவனது இருப்பு, தோன்றலர்- தோன்றப் பெறாது மயங்கி நிற்பர்.

**விளக்கம்:**

தொத்து என்பதற்குக் கொத்து என்பது பொருள். அஃதாவது தொகுதி. இங்கு எண்ணற்ற, பல்வேறு வகைப்பட்ட ஆற்றல்களின் தொகுதியாகிய மாயையைக் குறித்தது. "ஆறுகோடி மாயா சக்திகள்" என்பது திருவாசகம்.

"தொத்து உள்ளார் துணை தோன்றலர்" என அமைத்துக்கொள்ள வேண்டும்.

**தொத்து உள்ளார்:**

பெரு மயக்கத்தைச் செய்வதாகிய பிரகிருதி மாயையே உலகமாய்ப் பரிணமித்துச் சகலராகிய உயிர்களோடு தொடர்பு கொண்டுள்ளது. உடம்பும் உடம்பிலுள்ள ஐம்பொறிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் முதலிய கருவிகளும், உடம்போடு கூடிய உயிர்கள் போக்கு வரவு புரிதற்குரிய நிலமும், நிலத்திற் காணப்படும் சிறியனவும் பெரியனவும் ஆகிய நுகர்ச்சிப் பொருள்களும் ஆகிய எல்லாம் அம் மாயையின் காரியங்களேயாகும்.

தனு, கரணம், புவனம், போகம் எனப்படும் இந்த ஆக்கப் பொருள்கள் யாவும் நிலையற்றவை; இடையில் நீங்கக் கூடியவை; உயிருக்கு வேறானவை. ஆனால் உயிர் அவற்றை அப்படி நினைக்கிறதா? அவை வேறுதான் வேறு என்று கருதாமல் அவற்றோடு உயிர் ஒற்றுமைப்பட்டிருக்கிறது. உடம்பும், ஐம்பொறிகளும், உலகியற் பொருள்களும் ஆகிய அவை அந்த அளவுக்கு உயிரை வசப்படுத்தியிருக்கின்றன.

ஐந்து இந்திரியங்களுக்கும் கட்டுப்பட்டே சகலராகிய உயிர்கள் வாழ்கின்றனர். எந்த அளவுக்கு அவை ஆட்டிவைக்கின்றனவோ அந்த அளவுக்கு அவர்கள் ஆடுகின்றனர். இந்த உலகத்தில் பிறந்து இந்த உடம்பையும் உடம்பில் ஐந்து இந்திரியங்களையும் பெற்றிருப்பது இந்த உலகிலுள்ள பொருள்களை ஆனமட்டும் அனுபவிப்பதற்கே என்று நினைக்கின்றனர்.

விட்டிற் பூச்சி எரிந்து கொண்டிருக்கிற விளக்கொளியைக் கண்ணால் பார்க்கிறது. கட்பொறிக்கு அடிமைப்பட்ட அது அதனைப் பழம் என்று நினைத்துக்கொண்டு அதிற்போய் விழுகிறது. அதன் வெப்பத்தால் தாக்கப்பட்டுப் பன்முறையும் மீள்கிறது. பின்னரும் விடாது சென்று முடிவில் அதிலேயே வீழ்ந்து இறக்கிறது. அதுபோல ஐம்பொறிகளுக்கு அடிமைப்பட்ட சகலர் உலக சுகத்தையே பெரிதாக எண்ணி மயங்கி அதனையே நாடுவர்; அதனால் நோயும் துன்பமும் வந்து தாக்கினும் அதனை விடமாட்டாது அதிலேயே அழுந்திக் கிடப்பர்.

உடம்பும் ஐம்பொறிகளும் உயிரை வசப்படுத்தியிருப்பதைப்போல உலகப் பொருள்களும் உயிரறிவைப் பிணித்துள்ளன என்பதைச் சொல்ல வேண்டா. இருக்க ஓர் உறைவிடம் இருந்தால் போதும் என்று யாரும் நினைப்பதில்லை. எத்தனை இடங்கள் உண்டோ அத்தனையும் நமக்கே சொந்தமாகவேண்டும் என்றே எண்ணுகிறார்கள். வாழ்வதற்கு உரிய அளவுக்குச் செல்வம் இருந்தால் போதும் என்ற மனம் வருவதில்லை. உலகத்துச் செல்வமனைத்தும் தமக்கே உரிமையாக வேண்டும் என்றே ஆசைப்படுகிறார்கள். மண், பொன் முதலிய நிலையற்ற உலகப் பொருள்கள் உயிரறிவை அந்த அளவுக்கு மயக்கித் தம்மையே விடாது பற்றும்படியாகச் செய்கின்றன.

இவ்வாறு மாயாகாரியங்களால் பிணிப்புண்டு மயங்கி நிற்கும் சகலரையே “தொத்து உள்ளார்” என்று குறிப்பிட்டார் ஆசிரியர்.

**துணை தோன்றலர்:**

சகலரே மேற்கூறியவாறு உலக மயக்கத்தில் ஆழ்ந்து, யான் எனது என்று செருக்குவர்: தமக்கு மேல் ஒரு முதற்பொருள் உண்டு என்பதை அறியாது மயங்குவர்.

தேவர்கள், அசுரர்கள், மக்கள், அடி முடி தேடிய பிரமன் மாயோன் ஆகிய இவர்கள் யாவரும் சகலர் என்ற பிரிவைச் சேர்ந்தவரே என்பது அறிதற்குரியது.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானசித்தியார் கூறும் அன்புக் கருத்துக்கள்

– திரு க. கணேசதேவா அவர்கள் –

அறிமுகம்

சித்தாந்த சாத்திரங்கள் பதின்னான்கினுள் மிகப்பெரிய நூலாக விளங்குவது, மெய்கண்டதேவரின் மாணாக்கர் ஆகிய அருணந்தி தேவநாயனார் அருளிச் செய்த சிவஞானசித்தியார் ஆகும். இது சிவஞானபோதத்தின் வழிநூலாகும். அதற்கேற்ப மெய்கண்டார் கைக்கொண்ட நூலாக அமைப்புமுறை, பொருள் ஒழுங்கு முறைகள் அப்படியே இதில் பின்பற்றப்படுகின்றன. மெய்கண்டார் சிவஞானபோதத்தில் பிரயோகிக்கப்பட்ட அளவைகளே சிவஞானசித்தியாரிலும் பிரயோகம் பெற்றுள்ளன.

சிவஞானசித்தியார் புறச்சமயங்களின் கருத்துக்களை அளவிடும் பரபக்கமும், சித்தாந்த சமயத்தின் மெய்ப்பொருளை விளக்கும் சுபக்கமும் ஆகிய இரண்டு பெரும் பகுதிகளைக் கொண்டதாகும். சுருங்கக் கூறின் சிவஞான போதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களின் தத்துவக் கருத்துக்களை, பன்னிரண்டு அதிகாரங்களில் விரித்துரைப்பதே சுபக்கம் ஆகும். பரபக்கத்துள் புறச்சமயங்களும், புற புறச்சமயங்களும் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. இங்கு ஆகமங்களை ஒப்புக்கொண்ட சமயங்கள் புறச்சமயங்கள் எனவும், ஆகமங் களை ஒப்புக்கொள்ளாத சமயங்கள் புறபுறச் சமயங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிவஞானசித்தியாரின் பரபக்கம், பாயிரப்பகுதியில் பதினொரு விருத்தங்களும், நூற்பகுதியில் இருநூற்றித்தொண்ணூறு விருத்தங்களுமாக முந்நூற்றிஒன்று விருத்த செய்யுட்களைக் கொண்டு விளங்குகிறது. சிவஞான சித்தியாரின் சுபக்கம் முந்நூற்றி இருபத்தெட்டு செய்யுட்களை உடையது. திராவிட மாபாடிய கருத்தராகிய மாதவச் சிவஞான சுவாமிகள் "சிவஞானசித்தி சிவாகமாந்தங்களுக்கு எல்லாம் உரையாணி எனச் செய்யப்பட்டு நிலவுவது" எனக் கூறியுள்ளமை சிவஞானசித்தியாரின் சிறப்பை உணர்த்தி நிற்கின்றது.

சிவஞானசித்தியாரின் சுபக்கம் சைவசித்தாந்த சமயத்தின் கோட்பாடுகளை மிக விரிவாக கூறி விளக்குகின்றது. சிவஞானசித்தியாரின் சுபக்கப் பகுதியில் உள்ள 2ஆம் சூத்திரம், பதினொராம் சூத்திரம், பன்னிரண்டாம் சூத்திரம் என்பவற்றில் அன்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

**சிவஞானசித்தியாரின் இரண்டாம் சூத்திரத்தில் அன்பு பற்றிய கருத்துக்கள்**

பிரபஞ்சங்களாகிய பசு, பாசங்களைத் தோற்றுவிக்கும் முதல்வன், அப்பசு, பாசங்களோடு அத்துவிதமாய் ஒன்றித்தும் உடனாயும் வேறாயும் நிற்கும் முறைமையை இச் சூத்திரம் கூறுகின்றது. பாசங்களாகிய இரு வினை உண்மை இலக்கணங்களும், மாயை மாயேயெங்களின் இலக்கணங்களும், ஆணவத்தின் உண்மை இலக்கணங்களும் இம்மலங்களின் உயிர்களைப் பந்திக்கும் முறைமையையும், உயிர்கள் அம்மல பந்தத்தில் நின்று நீங்கி அருள் பெறுவதற்கு வாயிலும் கூறப்படுகின்றன.

**நாம் தேடும் இன்பம் எம்மிடமே உண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானசித்தியாரின் இரண்டாம் சூத்திரத்தின் 106ஆவது பாடலில் அன்பு பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

"தந்தைதாய் பெற்ற தத்தம்புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினா லடித்துத் தீய
பந்தமு மிடவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்
இந்த நீர் முறைமை யன்றோ வீசனார் முனிவு மென்றும்"

தந்தை தாய் பெற்ற தம் புதல்வர்களை தம்முடைய சொல் வழியில் நடவாதவர்கள் ஆயின் அதட்டிச் சிறு கம்பினால் அடிப்பர், கொடிய விலங்கும் இடுவர். இச் செயல்கள் எல்லாம் வெகுளிபோல தோன்றினாலும், அவர்கள் மேற்கொண்ட அன்பு காரணமான செயல்கள் ஆகும். அதாவது தந்தை தாயார் தம் சொல்லின் வழி ஒழுகாத புதல்வர்களைக் கண்டித்தல் போல, முதல்வன் நிக்கிரகம் செய்தல் செயல் வகையால் வெகுளிபோல தோன்றினும் கருத்து வகையால் அருளே ஆகும்.

சிவஞானசித்தியாரின் சுபக்கம் பகுதியிலுள்ள இரண்டாம் சூத்திரத்தின் 117ஆவது பாடலில் சிவன் திருவடியை அன்பினால் வழிபடுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

"காண்பவன் சிவனே யானா லவனடிக் கன்பு செய்கை
மாண்பற மரன்றன் பாத மறந்துசெ யறங்க ளெல்லாம்
வீண்செய லிறைவன் சொன்ன விதியறம் விருப்பொன் நில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே"

ஏனைய கடவுளிடத்து செய்யும் வழிபாடுகளை அறிந்து அவற்றிற்கு பயன் அளிப்பவன் சிவபெருமான் என்று கூறப்படுகிறது. சிவபெருமான் திருவடியை அன்பினால் வழிபடுதல் சிறந்த புண்ணியமாகும். அம் முதல்வனது திருவடியை மறந்து செய்கின்ற புண்ணியங்கள் யாவும் பயனற்ற செயல்களாகும். சிவபெருமானை வழிபடுதல் அதனிலும் சிறந்த புண்ணியம் ஆகும். இங்கு சிவபெருமான் திருவடிக்கு அன்பு செய்யும் வழிபாட்டை செய்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இங்கு அன்பு பற்றிய வழிபாடு முக்கியம் பெற்றிருப்பதைக் காணலாம்.

சிவனடிக்கு அன்பு செய்தல் பற்றி சிவஞான சித்தியாரின் 119ஆவது பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

"அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே"

இங்கு பரமசிவனது திருவடிகளுக்கு அன்புடையார் செய்யும் பாவச் செயல்களும் அறங்களாய் முடியும். பரமசிவனது திருவடிகளுக்கு அன்பு இல்லாதவர் செய்யும் புண்ணியச் செயல்கள் பாவங்களாய் முடியும். இங்கு சிவபிரானது திருவடிப் பூசையை அன்போடு செய்ய வேண்டும். இப் பரமசிவனை நாள்தோறும் பக்தி செய்து அன்புடன் வழிபடுதல் வேண்டும் என இப்பாடல் கூறுகின்றது.

**சிவஞானசித்தியாரின் பதினொராம் சூத்திரத்தில் அன்பு பற்றிய கருத்துக்கள்**

சிவஞானசித்தியாரின் பதினொராவது சூத்திரத்தின் 310ஆவது பாடலில் அன்பு பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

**உள்ளத்தில் உலக ஆசை புகுதலாகாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காயமொழிந் தாற்சுத்த னாகி ஆன்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்(கு)
ஏயும் உயிர் காட்டிக்கண் டிடுமா போல
ஈசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவன் இத்தை
ஆயுமறி வுடையனாய் அன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையின் அடைந்தமுறை யாலே
மாயமெலாம் நீங்கி அரன் மலரடிக்கீ ழிருப்பன்
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே"

ஆன்மா அறிவுடையவனாய் அன்பு செய்ய உடல் அழிவு பெறுமாயின் மலப்பற்றில்லாது பரிசுத்தமாகிறது. அந் நிலமை அடைந்த முறையாலே மல சம்பந்தமான மயக்கம் எல்லாம் நீங்கப்பெற்று, என்றும் நீங்காத அத்துவித பேரின்பத்தைச் சுவைத்துக் கொள்ளும். முதல்வனது மலர்போன்ற சீபாதத்தை அணைந்து இருப்பவன், காட்டக் காணும் தன்னுடைய கண்ணுக்கு உயிர் காட்டிக் காணும்போல முதல்வனது மல நீக்கம் பெற்ற உயிர்க்கு பேரின்ப அனுபவத்தை துய்ப்பித்து தன் பொருட் அன்றி தானே துய்ப்பவனுமாய் இருப்பன் என்று இப்பாடலின் கருத்துக் கூறுகின்றது.

சீவன் முத்தர்க்கு உடம்பு அழிய பரமுத்தியாக மாறும். பரமுத்தியும் அத்துவித பேரின்ப இயல்பும் தொகுத்து இப்பாடல் கூறுகின்றது. அதாவது மெய்ஞ்ஞானம் பெற்று நிட்டை கைவந்த சீவன்முத்தர் உடல் அழிந்துபட மும்மலமும் பற்றறத் திருவடிப்பேறாகும். அத்துவித பரமுத்தியின்பம் துய்த்திருப்ப முதல்வன் அந் நிலையில் உயிரோடு லீலை புரிந்து வேறாயும் உடனாயும் ஒன்றித்து நின்று சிவா அனுபவம் நிகழ்த்துவன் என்று கூறப்பட்டுள்ளது.

**சிவஞானசித்தியாரின் பன்னிரண்டாம் சூத்திரத்தில் அன்பு பற்றிய கருத்துக்கள்**

சிவஞானசித்தியாரின் பன்னிரண்டாம் சூத்திரத்தில் 323ஆவது பாடலில் அன்பு பற்றிய கருத்துக் காணப்படுகிறது. பாடல் பின்வருமாறு,

ஈசனுக்கன் பில்லார் அடியவர்க்கன் பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும்அன் பில்லார்
பேசுவதென் அறிவிலாப் பிணங்களைநாம் இணங்கிற்
பிறப்பினும் இறப்பினும் பிணங்கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு
அவர் கருமம் உன்கரும மாகச் செய்து
கூசிமொழிந் தருள்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே

சிவனடியார்பால் அன்பில்லாதவர் முதல்வனிடத்தும் அன்பில்லாதவரே ஆவார். அவர் பிற உயிர்க்கும் அன்பில்லாதவர். தமக்கும் அன்பில்லாதவர் ஆவார். இத்தகையோர் உயிரோடு இருந்தும் அறிவின்மையால் பிணமே ஆவர். இத்தகையரோடு சேர்ந்திருப்பவர் மேலும் துயரத்திற்கு உட்படுத்துவர். பேரன்போடும் சிவனடி பேணுவார்க்கு கடமை பூண்டொழுகும் மெய்யன்பர் கூட்டத்தில் கலந்து, அவர் கருமம் உன் கருமமாகச் செய்து பணிவாக அவர் முன் பேசி, தற்பேதமின்றி இருப்பது முதல்வன் அருளாகும்.

**கொடுப்பவனுக்கு என்றும் மேன்மை உண்டு.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈசனுக்கு அன்பில்லாதவர் எல்லா உயிர்க்கும் அன்பில்லாதவராய் தம் உயிர்க்கும் உறுதிசெய்து கொள்பவர் அல்ல. திருக்குறளில் தம்முயிர்க்கன்பு பூண்டு அதை நற்கதி சேர்க்க வேண்டுவோர் மன்னுயிர்க்கன்பு பாராட்டற்பாலர். என்னை? "மன்னுயிரோம்பியருளான் வார்க்கில்லென்ப, தன்னுயிரஞ்சும் வினை" என்ற முறையினாம் என்று கூறப்பட்டுள்ளது. எனவே சிவநேயமும், அடியார் நேயமும், மன்னுயிர் அன்பும் கூடி உள்ளது என்று கூறுகின்றது. இதனையே திருமந்திரம்

"அன்புஞ் சிவமுமிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதாருமறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே" எனக் கூறியுள்ளது.

நட்புரிமை கிட்ட இறை அன்பை நோக்கி ஆன்ம அன்பு பெருகி வளரும். இந்த நட்புரிமையை நாடுவதன் மூலமே "அன்பின்" மூலத் தன்மையை அடைய முடியும். இதன் பயிற்சியே இறைவன், அடியவர் பிற உயிர், தான் என அனைத்துடனும் அன்பு பழகுதலாகும். உலகப் பொருள் பழக்கமாகிய பயிற்சிகள் அனைத்தும் மாறுவன. அன்பினால் கொள்ளும் பழக்கம் மாறாது. அன்பு இறைவனின் அத்துவித கலப்பில் இயங்கும் ஒன்றாக இருப்பது. அந்த அன்பால் உயிரினுள் தன்னை நிறைவித்துக்கொண்டவன் இறைவன். தான் ஞானத்துள் உயிரை அமைத்துக் கொண்டும் இருக்கிறான். உயிருள்ள அந்த அன்புடன் பழகுவதற்கான பயிற்சியே உலக நட்பு. இந்த நட்பு மற்ற உயிர்களுடன் தான் பிற உயிர் என்ற வேறுபாடு இல்லாது பழகுதலை மேற்கொள்கிறது. வெல்கிறது. இந்த முயற்சியில் "நட்புரிமையை" நீக்கியும் அதற்காக வரும் இடர்களை எல்லாம் நீக்கியும் இடரில் விழாமல் நின்றும் நட்புடமையில் தெரிந்து நாடும் முயற்சியில் பரம்பொருள் துணை இருப்பது தெரியும். இந்த உயிரின் வேற்றுப் பொருள் பழக்கத்தில் "அன்பும் சிவமும்" வேறு வேறாக இருந்தன. நட்புடமை பயிற்சியில் "அன்பே சிவம்" ஆவது என்பது தெரிய வருகின்றது. நீக்கமற நிறைந்த சிவத்தின் "அன்பு" பழக்கமான பின் அன்பும் சிவமும் இரண்டாக இல்லாத கலப்பு கிடைக்கிறது. இது ஒன்றே அல்ல.

இதுவரை "இயக்க இயக்கியது" ஆன்மா என்றாலும் இறைவன் இயக்க தன் போக்கில் ஆன்மா இயங்கியது. இவ்வகையில் வேறு வேறு பழக்கமே நின்றது. இறைவன் இயக்க அதில் இயங்குவது என்பதுதான் "அன்பில் இயங்குதல்" என்பது இங்கே ஆன்மா அன்பும் சிவத்தின் அன்பும் ஒன்றாயின. இப்போது சிவமும் இன்பமும் என சிவமும் ஆன்மாவும் இருக்கின்றன. இன்பம் சிவனுக்கு இல்லை. ஆன்மாவிற்கே இன்பம். ஆயினும் சிவமும் அன்பும் பிரிப்பில்லாத அத்துவிதத்தில் இருக்க அந்த அத்துவிதத்திலே ஆன்மாவும் "அத்துவிதி"யாய் நிற்கின்றது என்பது தெளிவாகின்றது.

அன்பே இன்பமாக அனுபவிக்கப்படும்போது சிவம் என்பதே அனுபவமாகின்றது. இப்போது இருத்தல் என்பது சிவத்தின் விருப்பமாகவே இயங்குவதாக இருக்கும். "அமர்தல்" என்பது விருப்பத்தையும் குறித்தது. சிவத்தை விரும்புவது என்பதல்ல. சிவத்தின் பணி செய்தல் என்பதாகும். அவ்வக்கால மக்களுக்காக புதிது புதிதாகக் கடமையாற்றும் கடவுள் பணியில் அவர்கள் நிற்கிறார்கள். இப்போது

**வெறுப்பு வேற்றுமையை வளர்க்கிறது.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர்களின் பணி நயமான பணியாகின்றது. இப்படி ஒரு பணியை ஆற்றியவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள். அவர் செய்த புதுமைப் பணி "அடியவர்க்கு அடியவன் ஆதல்" என்பதைக் கொள்கையாக ஆக்கியது. அதனாலும் "நயத்துக்குச் சுந்தரனார்" ஆனார்.

"இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" என இறைவனைத் தெரிந்து கொள்வது வேறு. உலக அனுபவத்தில் ஏதாவது ஒன்று அப்படி நீங்காத ஒன்றாகப் பாதித்து இருந்தால் "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" என்பதை அனுபவிப் பதற்கான பயிற்சியாகும். இப்படியான பயிற் சியில்தான் நட்பின் பழக்கம், அன்பு மேலிடச் செய்வதான முறையாக ஆகிறது.

இவ்வாறு சிவஞான சித்தியார் பாடல்களில் அன்பு பற்றிய ஆழமான கருத் துக்கள் காணப்படுகின்றன. பதின்னான்கு சைவசித்தாந்த சாத்திரங்களுள் சிவஞான சித்தியார் மிகப்பெரிய நூலாக விளங்கு வதால் இந்நூலின் முக்கியத்துவம் சைவசித் தாந்தத்தில் நன்கு உணரப்பட்டுள்ளது.

**சந்நிதியில் வீற்றிருந்து தரணியெலாம் காப்பவனே**

சந்நிதியின் வீற்றிருந்து தரணியெலாம் காப்பவனே
உன்னியிடு வோர்க்குநல்ல உறுதுணையே – தன்னகரில்
வேலதனைத் தாங்கி வினையெல்லாம் தீர்த்திடுவாய்
பாலனே யெமக்கா ருளார்.

**தேறியிடா மாந்தர்க்கு வழிகாட்டுவாய்**

மூவிரண்டு முகமுடைய முகமுழுதும் அருளுடையாய்
ஆறிரண்டு தோளிலும்தான் அருளுடையாய் – தேறியிடா
உளமுடைய மாந்தர்க்கு உய்யும்வழி காட்டிடுவாய்
அழகுநிறை சந்நிதி யுளோய்.

**கார்த்திகையின் கந்தனே காத்திடுவாய்**

கன்னியரின் நாயகனே கலியுகத்தின் வரதனே
மன்னிய சந்நிதியில் உறைவோனே – தன்னிகரில்
கூர்த்தவடி வேல்கொண்டு குவலயத்தைக் காத்திடுவாய்
கார்த்திகையின் கந்தனே நீ.

**முத்திக்கு வித்தாகும் முருகன் சந்நிதியான்**

சத்திக்கும் நதியருகில் சரவணனே வீற்றிருந்து
எத்திக்கும் அருளலையை வீசுகின்றாய் – முத்திக்கு
வித்தாகும் முருகன் சந்நிதி யானைப்
பற்றிப் பிடித்திடுவோம் நாம்.

-திருமதி பொன். பாக்கியம்-

தொண்டன் உள்ளத்தில் அன்பு மிகுந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருஞானசம்பந்தரும் சைவமும்

– திரு சி.வ. இரத்தினசிங்கம் அவர்கள் –

திருஞானசம்பந்தர் தமிழுக்கும், சைவத்திற்கும் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகள் பற்பல. அவர் ஆற்றிய தொண்டுகள் மற்றும் சாதனைகள் பற்றியும் அவரடைந்த பேறுகள் கீர்த்திகள், இறையருள் பற்றியும் சற்றுக் கவனிப்போம்.

1. சிவனருட் கடாட்சத்தால் உமாதேவியாரின் பாலடிசில் உண்டு, சிவஞானப் பேறுபெற்று, மூன்றாம் வயதிலேயே குழந்தை சிவஞானக் கன்றாக்கிப் பக்தி நனிசொட்டுந் தமிழ் மந்திரமாம் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடத் தொடங்கிய வரலாறு அற்புதத்திலும் அற்புதம்.

2. பிள்ளைப் பெருமானின் பிஞ்சுக் கரங்கள் வலிக்குமே என்பதற்காகவும் தமிழ்ப் பாக்களை அவற்றில் வரும் சந்தங்கள் பிசகாமல் தாள லயத்தோடு பாடப்படவேண்டியும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அந்த இசைப் பண்கள் கிடைக்கவேண்டும் என்ற இறைவனின் திருவுள நோக்கால் காழிப்பிள்ளையாருக்கு தென்னகத்துத் "திருக்கோலக்கா" எனும் தலத்தில் "சிவாயநம" என்ற திருவைந்தெழுத்தும் எழுதப்பட்ட செம்பொற்றாளத்தை சிவபிரான் ஈந்தருளினார்.

3. ஆளுடைய பிள்ளையார் கால்நடையாகவே திருத்தல யாத்திரைகள் சென்று கால் நோவடைந்து வருந்துவதைத் தவிர்க்கத் திருவுளங்கொண்ட சிவபிரான் "அரத்துறைத்" திருத்தலத்தில் முத்துச் சிவிகை, முத்துச் சின்னங்கள், முத்துக்குடை ஆகியவற்றை வழங்கி அருளினார். அவற்றைப் பெற்றுக்கொண்ட நாயனார் அரத்துறை நாதரை ஏத்தி "எந்தை ஈசன் எம்பெருமான்" என்றெடுத்துத் திருப்பதிகம் பாடியருளினார்.

4. தல யாத்திரையின்போது "பட்டீச்சரம்" என்ற பதியை நாயனார் நண்ணிய சமயம் ஆங்கு வெயிலின் கொடுமை மிகவும் தீவிரமாகி காழிவேந்தரும் பரிசனங்களும் நலிவடைவதை நீக்கும்பொருட்டு பட்டீச்சர் பெருமான் முத்துப் பந்தர் ஒன்றைச் சிவகணம் ஒன்றின்மூலம் வழங்கி அருளினார். பட்டீச்சரநாதரின் பெருங் கருணையை வியந்தேத்தி "பாடல்மறை சூடல்மதி பல்வளையோர்" என்ற திருப்பதிகத்தை நாயனார் பயின்றருளினார்.

5. "திருப்பாச்சிலாச்சிராமம்" சார்ந்த பாலறாவாயரைக் கொல்லி மழவன் என்னும் சிவனடியான் அணுகித் தனது மகள் "முயலகன்" என்ற முயல்வலி நோயால் அவதியுறுவதை எடுத்தியம்பவும் பிள்ளையார் "துணிவளர் திங்கள்" என்ற பதிகத்தை எடுத்து "பாச்சி லாச்சிரா மத்துறை மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே" என்று பதிகம் பாடியவுடனேயே அந்தப் பெண்மணி நோய் நீங்கியெழுந்து நாயனாரின் தாள் பணிந்து வணங்கினாள்.

**நடுவுநிலைமை எய்துவது பெருமை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. "செங்குன்றூர்" (திருச்செங்கோடு) எனும் தலத்தை ஆளுடைநம்பி சென்றடைந்தபோது பனிப்பருவ காலம் வந்துற்றது. அவ்வேளையில் சுரநோய் பரவி மக்களையும் நாயனாரின் பரிவாரங்களையும் பீடித்து வருத்தியது. அதுகண்ட அடிகளார் "அவ்வினைக்கு இவ்வினை" என்ற தேவாரத் திருப்பதிகத்தினைத் தொடங்கி "செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்" என்று துதிக்கக் காலநிலை செவ்வியடைந்ததுடன் மக்களை வருத்திய சுரநோயும் நீங்கி அவர்களை மகிழ்ச்சி வெள்ளத்துள் ஆழ்த்தியது.

7. சுவாமிகளின் தல யாத்திரையின்போது "திருமருகல்" என்னும் தலத்தை அடைந்தார். ஆங்கு அரவந் தீண்டி உயிர் பிரிந்த வணிகன் ஒருவனின் காதலியின் அழுகுரலைக் கேட்ட சுவாமிகள் அவர்கள் வரலாற்றைக் கேட்டறிந்து "சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்" என்ற திருப்பதிகத்தைச் சாற்றவும் வணிகன் விடம் நீங்கி எழுந்து பிள்ளையாரை வணங்கி நின்றான். அவர் அவ்வணிகனுக்கும் கன்னிகைக்கும் திருமணம் செய்வித்து ஆசீர்வதித்து வழியனுப்பியருளினார்.

8. "திருநனிபள்ளி" என்ற பெருந்தலம் மழை பொய்த்துப் பல ஆண்டு காலமாக வரட்சியை அனுபவித்துப் பாலை நிலமானது கண்ட காழிவேந்தர், "காரைகள் கூகைமுல்லை" என்ற பதிகம்பாடி இறையருளால் அந்நிலத்தை நெய்தல், முல்லை நிலமாகமாற்றி அங்ஙண் வதியும் மக்களுக்கு ஆறுதலளித்தருளினார்.

9. "திருமயிலைத்" தலத்தில் சிவநேசர் என்ற வணிகரின் மகள் "பூம்பாவை" என்பாள் அரவந் தீண்டி மரணிக்க அவளுடலை அக்கினிக்காக்கி என்பைப் பொற்குடத்தில் பாதுகாத்து வைத்திருந்தார். சம்பந்தர் சுவாமிகளின் வருகையை அறிந்து அவரிடம் தன் மகளின் வரலாற்றைத் தெரிவிக்கவும் நாயனார் "மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலை" என்ற திருப்பதிகத்தை ஓதவும் அம்மங்கை பருவமடைந்த நிலையில் எழுந்து சுவாமிகளை வணங்கி நின்றாள்.

10. "திருவோத்தூர்" என்னும் திருத்தலத்தை அண்ணலார் சார்ந்த சமயம், திருத்தொண்டர் ஒருவர் அவர்பால் அணைந்து "ஐயனே! இறைவர்க்குப் பயனாவதென்று ஒரு தோப்பில் பனைகளை வளர்த்து வந்தேன். அவையாவும் ஆண் பனைகளாகின கண்டு சமணர்கள் எமை இழித்துரைக்கின்றனர். தேவரீர் அருளவேண்டும்" என இறைஞ்சி நின்றான். காழிவேந்தர் உடனேயே "பூத் தேர்ந்தாயன கொண்டு நின் பொன்னடி ஏத்தாதாரில்லை" என்று அடியெடுத்துத் தேவாரத் திருப்பதிகம் பாடியருளவும் சமணர்கள் நாணித் தலைகுனியும் வண்ணம் அந்தத் தோப்பிலிருந்த ஆண் பனைகள் யாவும் பெண் பனைகளாகிக் குலைகள் ஈன்றன.

11. "திருமறைக் காட்டில்" (வேதாரணியத்தில்) வேதங்களால் பூசிக்கப்பட்டுத் திருக்காப்புச் செய்யப்பட்ட கதவுகளை அப்பர் சுவாமிகள் "பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ" என்ற தேவாரத் திருப்பதிகம் பாடித் திறக்கவைத்தார். அத்திருக்கதவுகளை ஞானவாரிதி சம்பந்தர் சுவாமிகள் ஈசனை வழிபட்டுச் "சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்"


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்னும் பதிகத்தைப் பாடி மீண்டும் அடைக்கச் செய்தருளினார். இறையருளால் அன்று தொடக்கம் அக்கதவுகள் திறக்கவும் அடைக்கவும் கூடியவையாக ஆயின.

12. திருஞானசம்பந்தர் சுவாமிகள் "திருஆவடுதுறையில்" உறைந்துள்ள பெருமானை இறைஞ்சி "இடரினும் தளரினும்" என்னும் பதிகத்தைப்பாடி பசும்பொன் ஆயிரங்கொண்ட பொற்கிழியினை இறைவனிடம் இருந்து பெற்றுத் தந்தையின் வேள்விக் கடமைகளை இயற்றவென அவரிடம் வழங்கி அருளினார்.

13. "திருவீழிமிழலை" எனும் தலத்தில் வான் பொய்த்து மழைகுன்றி வரட்சி மிகுதியால் அந்நாடும், நாட்டு மக்களும் நலிவுற்றிருந்த பெரும் பஞ்ச காலத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும் அப்பர் சுவாமிகளும் அத்தலத்திற்கு தலயாத்திரை மேற்கொண்டு எழுந்தருளி இருந்தனர். இரு பெருங் குரவரும் சிவபிரானைப் பரவிப் படிக்காசு நாளும் பெற்று மக்களின் பசிப்பிணி போக்கி அருளினர். படிக்காசில் சம்பந்தருக்கு வழங்கிய காசில் மாசுள்ளதென்று அறிந்து "வாசி தீரவே காசு நல்குவீர்" என்று திருப்பதிகம் அருளிச்செய்து மாசற்ற காசுபெற்று மக்களின் பஞ்சப் பசியாற்றிப் பேரருள் புரிந்தனர் வள்ளலார் அவர்கள்.

14. சம்பந்த சுவாமிகள் காலத்தில் "மதுரை" மாநகரைச் சமண மேகஞ் சூழ்ந்து சைவ விளக்கங் குன்றியிருந்தது. ஆங்குக் கூன்பாண்டியனின் தேவியார் மங்கையர்க்கரசியார், மதிமந்திரி குலச்சிறையார் ஆகிய இருவரும் நீங்கலாக குடிமக்கள் அனைவரும், மன்னனும் சமணத்தைத் தழுவிக் கொண்டனர். தேவியாரும், மந்திரியாரும் இந்த நிலைமையைத் தெளிவுறுத்த எவ்வளவோ முயன்றும் முடியாமல் போயிற்று. ஞான சம்பந்தர் வந்தாலன்றி உய்வுபெற இயலாதென்று கருதிப் பரிசனங்களை அவர்பால் அனுப்பி வைத்தனர். அது செய்திகேட்டு சுவாமிகளும் தென்னாடு செல்ல இசைவுற்றார். இதையறிந்த அப்பர் சுவாமிகள், சமணரின் வஞ்சனைகளையும், கொடுமைகளையும் அனுபவித்த காரணத்தாலும், நாளுங் கோளும் நன்னிலையில் இல்லாதபடியாலும் சம்பந்தரை ஆங்குப் போவது உசிதமல்லவென்று தடுத்தார். அப்போது கவுணியர்கோன்

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே"

என்று தொடங்கிக் "கோளறு திருப்பதிகத்தைப்" பாடியருளி அஞ்சவேண்டாம் என அப்பருக்கு ஆறுதல்கூறி விடைபெற்று மதுரையை அடைந்தார். அங்கே அடிகளார் தங்கியிருந்த மடத்திற்குச் சமணர்கள் தீயிட்டனர். சம்பந்த சுவாமிகள் ஆதிமந்திரமாம் அஞ்செழுத்தோதி "செய்யனே திரு ஆலவாய் மேவிய ஐயனே" என்றெடுத்து "சிவனடியார்

**காலத்தை வீணாக்குவது தன்னைத்தானே கொள்ளையடிப்பதற்குச் சமம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் திருமடத்தில் வைத்த தீயானது மெல்லச் சென்று பாண்டியனுக் காகுக" என்று திருப்பதிகம் பாடவும், அத்தீயின் வெப்பம் திரண்டெழுந்து போய்க் கூன்பாண்டியனை வெப்புநோயாகப் பற்றிற்று. வெப்புநோய் தாங்காது உழன்ற மன்னனின் நோயைப் போக்கச் சமணர் செய்த சிட்சைகள் பலிதம் அற்றுப்போக காழிவேந்தர் "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடியருளி திருநீறு கொண்டு திருக்கையால் தடவப் பாண்டியனைப் பீடித்த வெப்புநோய் நீங்கப் பெற்றதுடன் அவன் கூனும் நிமிர்ந்தது.

15. பின்னர் சமணர்கள் அனல் வாதம் புரியத் தலைப்பட்டனர். சமணர்கள் தங்கள் மந்திரங்கள் எழுதிய ஏட்டைத் தீயிலிட அது எரிந்து பஸ்மமாகியது. சம்பந்தர் சுவாமிகள் திருநள்ளாற்றில் பாடிய "போகம் ஆர்த்த பூண்முலையாள்" என்று தொடங்கும் திருப்பதிகத்தை ஏட்டிலெழுதி அனலிலிட அது வேகாமல் பச்சையாகத் தோன்றிற்று. இவ்வாதில் சண்பை வேந்தர் அருளால் சமணம் தோற்றுச் சைவம் வென்றது.

16. அனல் வாதத்தில் தோல்விகண்ட சமணர்கள் மீண்டும் சற்றுத் தெளிவுற்றுப் புனல் வாதம் புரியச் சம்பந்தரை மல்லுக்கிழுத்தனர். இவ்வாதத்தில் தோல்வி கண்டால் தம்மைக் கழுவேற்றவும் ஒப்புக்கொண்டனர். சமணர்கள் "அத்தி நாத்தி" என்றெழுதி நீரிலிட்ட ஏடு வைகையாற்றுடன் அடித்துச் செல்லப்பட்டது. சம்பந்த சுவாமிகள் "வாழ்க அந்தணர் வானவ ரானினம்" என்ற திருப்பதிகத்தைப் பாடி அதையே ஏட்டில் எழுதி ஆற்றிலிட அவ்வேடு நீரை எதிர்த்துச் சென்றது. சம்பந்தர் சுவாமிகள் இறைவனை வழுத்தி இனிதமர்ந்திருக்கச் சமணர்கள் கழுவேற்றப்பட்டனர். சமண இருள் நீங்கி சைவம் துளிர்க்க மதுரை மாநகரம் மீண்டும் புதுப்பொலிவெய்தியது.

17. தலயாத்திரையின்போது "திருக்கொள்ளம்புதூர்" என்ற தலத்தில் ஒரு சமயம் ஆற்றைக் கடக்க முடியாவண்ணம் வெள்ளம் பெருகி ஓடிற்று. அங்கு ஓடம் செலுத்தவும் யாருமிலர். அவ்விடத்தே கட்டப்பட்டிருந்த ஓடமொன்றை அவிழ்த்து அடியவர்கள் சகிதம் ஏறி "கொட்டமே கமழும் கொள்ளம் புதூர்" என்ற திருப்பதிகத்தை இசைத்துப் பாதுகாப்பாக மறுகரையை அடைந்து சிவபிரானை வணங்கித் தல யாத்திரையைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

18. காவிரித் தென்கரையான "திருத்தெளிச்சேரி" என்ற திருத்தலத்தை நாயனார் அடைந்து ஆங்குற்ற இறைவனைப் பாடிப் போற்றினார். தொடர்ந்து தலயாத்திரை மேற்கொண்டு சாக்கியர் உறையும் "போதிமங்கை" என்ற நகரைச் சாருஞ் சமயம் பௌத்தர்கள் சினங்கொண்டு ஒன்று திரண்டு புத்தநந்தி என்பான் தலைமையில் வந்து அடியார் திருக்கூட்டத்தினருக்கு இடையூறுகள் விளைவித்தனர். அப்போது, நாயனாருடன் இருந்த திருப்பதிகங்களை ஏடுகளில் எழுதிவரும் எழுத்தச்ச அன்பர் ஒருவர், சம்பந்த சுவாமிகளின் திருப்பதிகமொன்றை இசைத்து "புத்தநந்தியின் தலை இடியேறு வீழுதலினால் உருண்டு வீழக்கடவது" என்று சபிக்கவும் இடிவிழுந்து அவன் தலை உருண்டது. மருண்டோடிய பௌத்தர்கள் சாரிபுத்தன் என்பான்

**நீதிபதியைவிட காலம்தான் உண்மையைக் கொண்டுவருகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையின் கீழ் மீண்டுவந்து பரசமய கோளரியோடு வாதம் புரிந்து தோற்றனர். பௌத்தர்கள் சகலரும் தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டதுடன் சைவ சமயத்தின் மேன்மையையும் உணர்ந்துகொண்டு திருஞானசம்பந்த சுவாமிகளின் திருப்பாதங்களைப் பணிந்து மீண்டும் சைவர்களாயினர்.

19. சம்பந்த மூர்த்தி நாயனார் இராமேச்சரம் திருத்தலத்திற்குத் தலயாத்திரை செய்தபொழுது அங்கிருந்தபடியே ஞானக் கண்களால் ஈழத்திரு நாட்டின் பழம் பெரும் பதிகளாம் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம் ஆகிய புண்ணியத் தலங்களைத் தரிசித்து அத்தலங்கள்மீது பதிகங்கள் பாடிப் பெருமைப்படுத்தியுள்ளார்.

20. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களின் செயற்பாடுகளைத் தமது அருட்திறத்தால் தம் ஆணைக்குள் நிலைநிறுத்தியமையை நாயனார் ஆற்றிய அற்புதங்கள்மூலம் தெளிவாகத் தெரிய வருகின்றது.

(தொடரும்...

## மெல்லமாய் அணைத்துவிடு

அப்பப்பா முருகப்பா
ஆதரிப்பார் யாரப்பா
இப்பப்பா எனைத் தேடுவார்
யாருமில்லையப்பா
சொல்லப்பா முருகப்பா
எங்கிருப்பாய் நீயப்பா
பல்லெல்லாம் இல்லையப்பா
வாயெல்லாம் பொக்கையப்பா
சொல் லெல்லாம் இல்லையப்பா
சோதிவடி வானவனே
கை கால் நடுங்குதப்பா
கதைக்க முடியலைப்பா
எப்பப்பா வந்து நீ
என்னருகே இருப்பது
நில்லப்பா முருகப்பா
சொல்லிவிடு உன் முடிவை
வில்லங்க மப்பா முருகப்பா
நானிங் கிருப்பதப்பா
யமதூதன் இங்கு வர
தயங்குவது ஏனப்பா
சந்நிதியானே மெல்லமாய் வந்து
அணைத்து விடப்பா இவ்வுயிரை.

-பொ. பாலேஸ்வரன்-

**நீ யாரை வேண்டுமானாலும் சந்தேகி ஆனால் உன்னையேயல்ல.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

பக்தி என்பது வடமொழி, அன்பு என்பது தென் மொழியாகும். பக்தி என்பது என்ன? உலகங்கள் அனைத்திற்கும் ஆதியான இறைவன் மீது மனிதனுக்கு எழுகின்ற கவர்ச்சி, பிரேமை அன்பு என்பதே பக்தியாகும். இத்தகைய பக்தி அழியாத்தன்மை உடையது. நிபந்தனைகள் எதுவும் இன்றி முழுமையான அன்பை இறைவனிடம் செலுத்துவது நாம் நம் குடும்பம் மேல் வைக்கும் அன்பு பந்தபாசம் அது பக்தி அல்ல, இதனாற்றான் “அன்பே சிவம்” என்றார் திருமூலர்.

எண்ணரிய பிறவிகளில் மானிடப்பிறவி இனிது இனிது காண்; இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? எது வருமோ அறிகிலேன் என்கிறார் பட்டினத்து அடிகளார். அரிது அரிது என்று சொன்னார் ஔவைப்பிராட்டியார்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியதுபோல் நாம் பல பிறவிகளை எடுத்த பின்புதான் மானிடப் பிறவியை எடுக்கின்றோம்.

“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல் மிருகமாகி பறவையாய்ப் பாம்பாகி...” மனிதப் பிறப்பு மிக அற்புதமானது. அதற்கு ஒரு நோக்கம் உண்டு. அது தான் இறைவன் மேல் தீவிர அன்பும் திடமான பக்தியும் செய்து, பிறப்பு, இறப்பு இன்றி இறைவனின் திருவடிகளை அடைவதாகும்.

இறைவனுக்குப் பிடித்த அணிகலன் அன்பு மட்டும்தான்; அன்பைவிட அழகான அணிகலன் வேறு எதையும் அவர் விரும்புவதில்லை. அவர் அன்பின் வலைதனில் அகப்படும் ஆரமுது.

கடவுள் பக்தி எமக்கு எத்தனை அவசியம் என்பதை நாங்கள் முதலில் உணர வேண்டும், கடவுள் பக்தியால் எமக்கு மூன்று அனுகூலங்கள் உள்ளன.

1. கடவுள் எம்மைக் காப்பாற்றுவார், என்னும் நம்பிக்கையில் எவ்வித துன்பங்கள் வந்தாலும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுக்கொள்கின்றோம்.

2. கடவுள் பக்தி காரணமாக புதிய தவறுகளைச் செய்யமாட்டோம்.

3. இப்பிறப்பில் கடவுள் நம்பிக்கை பக்தி உள்ளவரின் பாரங்களை, துன்பங்களை அவரே தாங்கிக் கொள்கிறார். பெரும் ஆபத்துக்களை துன்பங்களைச் சிறிய அளவில் மாற்றிவிடுகின்றார், ஆனபடியால் கடவுள் பக்தி எத்தனை அவசியம் என்பதனை நாம் உணர வேண்டும்.

துன்பம் வரும்போது நாம் தீவிரமாகக் கடவுளை நாடுகின்றோம், பக்தி செய்து வேண்டுகின்றோம். நாட்கள் போகப்போக ஒன்றும் இல்லாமல் போய் விடுகின்றது. இது போலிப் பக்தியாகும்.

**உழைக்க நேரம் ஒதுக்குங்கள். அது வெற்றியின் விலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடத்தில் பலனை எதிர்பார்த்துப் பக்தி செய்தல் - உண்மையான பக்தி ஆகாது. இக்காலத்தில் கடவுள் வழிபாடு ஒரு வியாபாரம் போல் ஆகிவிட்டது. விக்னேஸ்வரா, விநாயகா, கந்தா, முருகா எனது வியாபாரத்தில் இலாபம் கிடைத்துவிட்டால், உனக்குரிய உண்டியலில் பணம் போடுவேன், அல்லது உனக்கு அபிஷேகம் செய்வேன், அல்லது சந்தனக் காப்பு சாத்துவேன், என்று வழிபாடு செய்வது எல்லாம் உண்மையான பக்தி ஆகாது. இறைவனிடம் மனதை அர்ப்பணிக்கும் சரணாகதிப் பக்தி நமக்கு வேண்டும். இதனைப் பிரபக்தி என்பர்.

"அடிமுடி தேடியும் காணமுடியாத எம்பெருமான் தன்னைப் பக்திசெய்யும் அன்பர்களின் மெல்லிய சுருங்கிய சிந்தையில் இறைவன் மெல்ல நுழைந்து வீற்றிருப்பார்" என்கின்றார் திருநாவுக்கரசு சுவாமிகள். நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன் பக்தி வலையில் படுவோன் காண்க" என்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

கடவுளிடம் யாரும் பக்தி கொள்ளலாம், அதற்கு ஆண், பெண், கல்வியில் உயர்ந்தவர், ஏழை, பணக்காரன் என்று வித்தியாசம் கிடையாது. இறைவன் உண்மையான பக்தியைத்தான் எதிர்பார்க்கின்றார். ஏற்றுக்கொள்கின்றார். இதற்கு ஓர் உதாரணம், வேடனான கண்ணப்பர் பக்தியால் பக்த சிரோன்மணி ஆனார். ஆறு நாட்களுக்குள் பூர்வ ஜென்மப் பலனால் முக்தி பெற்றார். இறவாத இன்பநிலை பெற்றார்.

1. தெருவில் நடந்து தேய்ந்த செருப்புக்கால் சிவபெருமானின் புருவத்தில் வைக்கப்பட்டது.
2. கொப்பளித்துத் துப்பிய நீர் பெருமானுக்கு சிறந்த அபிஷேக நீர் ஆகியது.
3. கடித்து எச்சில்பட்ட இறைச்சித்துண்டு உயர்ந்த பிரசாதமாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. இறைவன் கண்ணப்பரின் அன்பின் பெருக்கை அடையாளம் கண்டு அருள் செய்தார்.

நினைப்பவர் மனம் கோவிலாகக் கொண்டவர் இறைவன். ஆகவே பக்தியின் பெருமையை அளவிட முடியாது "காயமே கோவிலாக கடிமனம் அடிமையாக, வாய்மையே தூய்மையாக மனமணிலிங்கமாக" என்றார் அப்பரடிகள்.

இறைவன் நம்மை எவ்வாறு மதிப்பீடு செய்கின்றார் தெரியுமா? நம்முடைய பணம், பொருள் கொண்டோ, நமது புகழைக் கொண்டோ, சாமர்த்தியத்தைக் கொண்டோ அல்ல; நமது உள்ளத்தில் இருக்கும் பக்தியைக் கொண்டு தான் மதிப்பிடுகின்றார்.

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு, என்பு தோல்போர்த்த உடம்பு" என்றார் வள்ளுவர் பெருமான், அன்பு இல்லாதவர் மனிதனாக மாட்டான், அன்பில்லாத மனிதன் வெறும் என்பு தோல் போர்த்த உடம்பு என்றார்.

நாம் கடவுள் பக்தி செய்வதற்கு உண்மையான அன்பு இல்லாமல் துறவு பூணுவது பக்தியாகாது என பட்டினத்தார் பின்வருமாறு பாடியிருக்கின்றார்.

"காடே திரிந்தென்ன, காற்றே புழுத்தென்ன கந்தை சுற்றி ஓடே எடுத்தென்ன, உள்ளன்பு இல்லாதார், ஓங்கு விண்ணோர் நாடேயிடை மருதீசர்க்கு, மெய்யன்பர் நாரியர் பால், வீடேயிருப்பினும் மெஞ்ஞான விட்டின்பம் மேவுவரே" இதனையே "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவதே" என்றார் சுவாமி விபுலானந்தர், அன்பு என்கின்ற பக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியையும், முத்தியையும் தரும், கடவுளும் பக்தருக்கு வாய்த்தவராக இருக்கின்றார். "பக்தி சித்தி காட்டி அத்தர் சித்தமீட்ட பக்தருக்கு வாய்த்த பெருமாளே" என்கிறது திருப்புகழ்.

தன்மீது உண்மையான பக்தியுடைய அடியவர்க்குக் காட்சி கொடுக்கும் அன்பன், மற்றவர்களுக்கு வெளிப்படாத ஆற்றல் உடையவன் என்று நம்மாழ்வார் கூறியிருக்கின்றார். "பற்றுடைய அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்பது அவர் கூற்று. "ஆனா அறிவான் அடியவர்க்கு வானாடர் காணாதமன்" என திருவருட்பயன் நூல் இதனையே கூறும்.

உண்மையான கடவுள் பக்தி "காந்தத்தை நோக்கி ஊசி அசைவதுபோல், கொடிகள் படர்ந்து மரங்களை நோக்கிப் பற்றுவதுபோல், சமுத்திரத்தை நோக்கி நதி செல்வதுபோல் காணப்படும். எம்முடைய மனம் இயற்கையாகவே பிரதிபலன் எதிர்பார்க்காமல் ஆத்மாத்தமாக செய்யக்கூடிய பக்தியே உண்மையான பக்தியாகும்".

இதுவே "செயலில் துறவையும் செயலின்மையில் செயலையும் காட்டும் யோகநிலை" என பகவத்கீதை செப்புகின்றது. இந்த உடம்பு அழியும் தன்மையுள்ளது. இந்த உடம்பை நாம் பெற்றதன் பலனாக உடம்பிற்குள் இருக்கும் உத்தமனைக் கண்டு பக்தி செய்து பிறவியின் பயனை பெற்று உய்வோமாக. உடம்பினுள் உத்தமனாகிய இறைவன் கோயில் கொண்டுள்ளான் என்பதை உணர்ந்து, அவனை பக்தி செய்வோமாக.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே,
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படு பரம் பொருளே,
அன்பெனும் கரந்தமர் அமுதே,
அன்பெனும் கடலினுள் அடங்கிடும் கடலே,
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே,
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரமசிவமே"

எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பவர் எம் பெருமான், அவரது திருவடியை வணங்கி பக்தி செய்து முத்தி இன்பம் பெறுவோமாக.

அன்பே சிவம்.

## ஆன்மீகச் சிந்தனை

மனத்தூய்மை இன்றி செய்யப்படும் பக்தி உரிய பலனை, உயர்ந்த பலனைத் தருவதில்லை. உள்ளத்தில் காமம், கோபம், பொறாமை, கள்ளம், கபடு போன்ற மாசுகளை வைத்துக்கொண்டு செய்யப்படும் பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்க்க மாட்டான். மனிதன் மனந்திருந்தி தூய வாழ்க்கையும், தியான வாழ்க்கையும் மேற்கொண்டால் வீடுபேறு அடையமுடியும். பழிக்குப் பழிவாங்கத் துடிப்பது ஆன்மீகமல்ல, பிறர் குற்றத்தை மன்னிப்பதுதான் ஆன்மீகம். நாமும் நமக்குத் தீமை செய்தவர்களை மன்னித்து நன்மை செய்து வாழவேண்டும். பிறர் குற்றத்தை மன்னித்து வாழ்பவன் மகிழ்ச்சியோடும், மன அமைதியோடும் வாழ்வான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| S. தனராஜா | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| சீ. கமலதாஸ்மூலம் திருமதி சீ. சிவபாக்கியம் நீர்வேலி | | 11000. 00 |
| சி. பிரதீபன் | ஊரெழு கிழக்கு | 2000. 00 |
| வை. சிவநாதன் | கனடா | 1000. 00 |
| ந. யோகேஸ்வரன் | உரும்பராய் | 2000. 00 |
| குகன் ஸ்ருடியோ | பருத்தித்துறை | 2000. 00 |
| மாதினி விநாயகமூர்த்தி | கொழும்பு | 1000. 00 |
| இரட்ணம்மா குடும்பம் | திருகோணமலை | 1000. 00 |
| மா. தங்கவேல் போடிங் றோட் | பருத்தித்துறை | 3000. 00 |
| S.M. ஆறுமுகம் நினைவாக ஆ. புனிதவதி | புன்னாலைக்கட்டுவன் | 3000. 00 |
| வ. தானஜயா தே. சர்வேந்தன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சு. செல்லத்துரை | சங்குவேலி | 15001. 00 |
| கமலநாதன் மயூரன் தும்பளை | பருத்தித்துறை | 4000. 00 |
| மதனசுந்தரம் ஸ்ரீதரன் | லண்டன் | 25000. 00 |
| சோ. குமரன் | பிரான்ஸ் | 5000. 00 |
| ஜெகநாதன் ஜனனி | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| சி. கஜேந்திரநாத் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| முருகனடியார் | சங்கானை | 1000. 00 |
| சி.க. சண்முகசுந்தரம் | சொயிசாபுரம் | 500. 00 |
| ப. தெய்வலதா ப. அர்தனா | பிரான்ஸ் | 16600. 00 |
| ச. ரவிச்சந்திரமோகன் குடும்பம் | ஏழாலை | 2000. 00 |
| V. கார்த்திகா | மடத்தடி | 500. 00 |
| ஸ்ரீதாஸ் அற்புதராணி | கனடா | 5000. 00 |
| S. சுப்பிரமணியம் குடும்பம் | கனடா (நல்லூர்) | 2500. 00 |
| திரு மகராஜா | கனடா | 1000. 00 |
| கண்ணகியம்மா வைரமுத்துமூலம் திலகம் வைரமுத்து நினைவாக | கொழும்பு | 2000. 00 |
| ட. குமுதினி | அல்வாய் | 20000. 00 |
| சொ. செல்லத்துரை | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| கா. சோமசுந்தரம் குடும்பம் சோ. ஸ்ரீஸ்கந்தராசா குடும்பம் | மல்லாகம் | 2000. 00 |
| தவமணி நாயகம் | மல்லாகம் | 500. 00 |
| மகேந்திரம் ஜெயந்தன் | புத்தூர் | 2000. 00 |
| க. அரியரட்ணம்மூலம் திருமதி நவரூபராசா கொத்தங்கலட்டி | வல்வெட்டி | 20000. 00 |

**மூட நம்பிக்கை பலவீனமான மனங்களின் மதம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. அரியரட்ணம்மூலம் திருமதி நிரோசன் | வல்வெட்டி | 40k அரிசி |
| க. அரியரட்ணம்மூலம் திருமதி அரவிந்தன் | வல்வெட்டி | 30k அரிசி |
| அருணாசலம் சாவித்திரியம்மா | பருத்தித்துறை | 6000. 00 |
| நா. குணசிங்கம் குடும்பம் | கோண்டாவில் | 12000. 00 |
| பொ. ஜெயபாலன் | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| ச. ராகுலன் | கொள்ளுப்பிட்டி | 1000. 00 |
| திரு தனபாலசுந்தரம் | கொக்குவில் மேற்கு | 2000. 00 |
| திவ்விய ஜீவன சங்கம் | சாவகச்சேரி | 5000. 00 |
| திருமதி பவானி சித்திரவடிவேலு | சாவகச்சேரி | 2000. 00 |
| த. கேதீஸ்வரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஸ்ரீ. ஆனந்தராசா | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| N. இந்திரகுமார் | அச்சுவேலி | 1000. 00 |
| பொ. நடராசா | சாவகச்சேரி | 1000. 00 |
| திருமதி இ. இராஜேஸ்வரி | லண்டன் | 10000. 00 |
| வை. தம்பிஐயா | கோப்பாய் | 1000. 00 |
| S. சற்குணம் குடும்பம் | கோப்பாய் | 1000. 00 |
| த. நிரோஜன் | புத்தூர் கிழக்கு | 1000. 00 |
| கு. தியாகராஜசர்மா நீர்வேலி | 1புட்டி பருப்பு, 1மூடை அரிசி | 2000. 00 |
| சபேசன் ஜனகன், சபேசன் கிருபன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| P. டிவேஷ் ராசாவின்தோட்டம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வே. பாண்டியர் | கைதடி | 1000. 00 |
| K. சிவயோகநாதன் | நீர்வேலி | 5000. 00 |
| V. சிவசாமி மூலம் A. சண்முகராசா | லண்டன் | 20000. 00 |
| திரு நேரு குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| ஜனனி, சிந்தூரி | கொழும்பு | 5000. 00 |
| அமரர் கந்தையா இரத்தினராசா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சங்கர் குமார் | கொக்குவில் | 20000. 00 |
| ஜெயக்குமார் குடும்பம் | உருத்திரபுரம் | 16000. 00 |
| திரு இராகுலன் | புன்னாலைக்கட்டுவன் | 3200. 00 |
| ம. சதாசிவம் | நாவற்குழி | 1மூடை அரிசி |
| சு. பாஸ்கரன் அக்ஷரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| இராஜமகேஸ்வரி மயில்வாகனம் | சண்டிலிப்பாய் வடக்கு | 50000. 00 |
| சீவரத்தினம் குகனேஸ்வரி | உரும்பராய் | 1000. 00 |
| ச. தனேஸ் | சுதுமலை | 1000. 00 |
| க. ராஜேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| உருத்திரா செட்டியார் புலோலி | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு ரகு மக்கள் வங்கி கச்சேரி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு நடேசன்மூலம் N. வரதீசன் குடும்பம் | லண்டன் (கொழும்பு) | 5000. 00 |

(தொடரும்...

**முட்டாளும் அவன் பணமும் சீக்கிரமாகவே பிரிகின்றன.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவக் கடவுள் வழிபாடு

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

ஞானத்தையும் நன்நெறியையும் கொடுப்பவர் பைரவர் என்று "விஞ்ஞான பைரவம்" என்னும் நூல் குறிப்பிடுகின்றது. பொதுவாக பைரவர் அஷ்டமா சித்திகளைக் கொடுப்பவர். பைரவரை வழிபட நவக்கிரகங்களின் பெயர்ச்சியால் ஏற்படும் துன்பங்கள் மறைகிறது. குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக் கிறது. வறுமை நீங்குகிறது. சனீஸ்வர பகவானால் ஏற்படும் துன்பம், தொல்லைகள் நீங்குகின்றன. பில்லி, சூனியங்கள் மறைகின்றன. வழக்குகளில் வெற்றி கிடைக்கின்றது. வியா பாரத்தில் இலாபம் கிடைக்கின்றது. சொர்ண பைரவர் வழிபாடு செல்வத்தை அள்ளித் தரும். அதாவது பொன்னை இழுத்துத் தருபவர் என்னும் கருத்துப்படி இவர் சுவர்ண ஆகர்ஷண பைரவர் என்று அழைக்கப்பட்டார். இவர் பொன்னிறம் கொண் டவர் என்றும் மஞ்சள் நிறப் பீதாம்பரம் ஆடைகளை அணிந் தவர் என்றும் மூன்று கண்களும் நான்கு கரங்களும் உடையவரென்றும் ஸ்ரீ தத்துவ நீதி என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.



பைரவக் கடவுள், சத்துவகுணத்தில் தாமத குணத் தவர். அவர் "சங்கார ருத்திரர்" எனப்படுவார். சகல தத்துவ சம்பந்தங்களையும் சங்கரித்து ஆன்மாக்களை ஈடேற்றும் கோலமே அவரது வடிவம். அவரது உருவம் சுத்த நிர்வாண மாக இருக்கும். அவ்வுருவத்திற்கு உடை தரிப்பதில்லை. உலகப் பற்றை விடினும் உடல் பற்றினை விடுவது கடினம். அந்தப் பற்றினையும் விடு என்பதையே அவருடைய வடிவம் எமக்குப் போதிக்கிறது. கோர வடிவமே அவரது வடிவம். சிவன் கோர வடிவம் எடுத்து, செருக்குற்ற பிரமனது ஒரு தலையைத் தன் நகத்தினால் கிள்ளியெறிந்தார் பைரவர். பிரம தேவரையும் ஏனைய தேவர்களையும் ஆட்கொண்ட கோலமே பைரவ மூர்த்தம். இவரது வாகனம் வேத வடிவாகிய நாய் ஆகும்.

பைரவர் சைவக் கோயிலின் காப்புக்கடவுள் ஆவார். பள்ளியறைக்கு சுவாமி எழுந்தருளியபின் அவர் பள்ளி கொள்கின்றார். பள்ளியறை மூடியபின் "முத்திரா தண்டம்" பைரவப் பெருமானிடம் ஒப்படைக்கப்படுகிறது. இதுவே கோயிலின் காப்புத் தண்டமாகும். ஆனால் கோயில் திறவுகோல் அல்ல. காலையில் கோயில் திறந்தபின் ஆலயத் திருக்கோயில் பூஜை அருட்பணிகள் தொடங்குமுன் இம் முத்திரைக்கோலைக் கொண்டுள்ள பைரவரின் அனுமதி இன்றியமையாதது ஆகின்றது. அதனால் இதுவே ஆலயங்களில் செய்யப்படும் முதல் கிரியையாகும். அதன் பின்னர்தான் ஆலயங்கள் ஆராதனைகளுக்கு தகுதி பெறும். கோயிலைப் பாதுகாப்பவர் மட்டுமல்ல ஊரினைப் பாதுகாப்பவரும் பைரவப் பெருமானேயாவார். தேய்பிறை அட்டமியில் பைரவரை வழிபட உகந்த நாளாகும். சித்திரைப்

**மௌனம் சில சமயங்களில் உரத்த குரலைக் கொண்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணி, ஐப்பசி மாதத்தில் வரும் பரணி நட்சத்திரம் மற்றும் மங்கள வாரம் (செவ்வாய்க் கிழமை) ஆகிய மூன்றும் பைரவரை நினைத்து விரதம் இருப்பது உகந்த முறையாகும். தை மாதத்து முதல் செவ்வாய் தொடக்கம் ஒவ்வொரு செவ்வாயும் பைரவரை நினைத்து மங்கள வார விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. பைரவருக்கு நிவேதிப்பதற்கு வடை மாலை சாத்துவது வழக்கம். பைரவப் பெருமானுக்கு நந்தியாவர்த்தம் பூவினைத் தவிர ஏனைய மலர்களால் அர்ச்சிக்கலாம்.

சிவபெருமானின் அறுபத்துநான்கு திருமேனிகளுள் பைரவர் திருமேனியும் ஒன்றாகும். பைரவர் கோரைப் பற்களுடன் நான்கு திருக்கரங்கள் விளங்கக் காட்சி கொடுக்கிறார். பைரவர் "ஷேத்திர பாலகர்" (க்ஷேத்திர பாலகர்) என்றும் வணங்கப்படுகிறார். துக்கத்திற்குக் காரணமான பாவத்தைப் போக்குவதால் சிவபெருமான் ருத்திரர் (உருத்திரர்) என்றும் பைரவர் என்றும் வழங்கப்படுகிறார். சிவபெருமானின் 64 சிவமூர்த்தங்களைப் பற்றிக்கூறும் "சிவபராக்கிரமம்" என்ற நூல் பைரவர் பற்றிக்கூறும்போது, அவர் பைரவ மூர்த்தி, ஆயதோத்தாரண மூர்த்தி, வடுக மூர்த்தி, க்ஷேத்திர பாலகமூர்த்தி என்கிற நான்கு வடிவங்களைக் கொண்டவர் என்று கூறுகின்றது. ஆனால், "பராக்யம்" என்ற நூலோ பைரவரை சிறப்பாக அஷ்ட பைரவர்களாகக் கூறி, அவர்களுக்குரிய அஷ்ட பைரவ சக்திகளையும் குறிப்பிடுகின்றது. அவை:-

1. அசிதாங்க பைரவர் - பிராம்ஹி
2. குரு பைரவர் - மாகேஸ்வரி
3. சண்ட பைரவர் - கௌமாரி
4. குரோத பைரவர் - வைஷ்ணவி
5. உன்மத்த பைரவர் - வாராஹி
6. கபால பைரவர் - இந்திராணி
7. பீஷண பைரவர் - சாமுண்டி
8. சம்ஹார பைரவர் - சண்டிகா

இந்த எட்டு பைரவத் திருமேனிகளைக் கொண்டு தனித்தனி ஆலயமாக சீர்காழி பிரமபுரீஸ்வரர் ஆலயத்தில் தென் பிரகாரத்தில் விளங்குகிறது. கபாலிகம் என்ற சைவப் பிரிவினர் கபாலமும், திரிசூலமும் கையிலேந்திய பைரவ மூர்த்தியையே வழிபட்டு வாழ்ந்தார்கள். இது சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவிரதம் என்னும் சைவப்பிரிவினர் (சைவசமயப் பிரிவினர்) பைரவரையே பரம்பொருளாக வழிபடுகிறார்கள். அவர்கள் பைரவரைப்போலக் கோலம் கொண்டு ஊர் ஊராகத் திரிந்து பிச்சை ஏற்று வாழ்கிறார்கள். "பாசுபதம்" என்னும் சைவ சமயப்பிரிவினர் தங்கள் உடல் முழுவதும் சுடுகாட்டுச் சாம்பரைப் பூசி பைரவவழிபாடு செய்கிறார்கள். இன்றும் உஜ்ஜையினி மாகாளேசர் ஆலயத்தில் இவர்கள் நிறைந்துள்ளனர். இந்து சமயத்திலும், ஜைன சமயத்திலும், புத்த சமயத்திலும் பைரவ வழிபாடு உள்ளது. வடநாட்டில் பைரவருக்கென்றே தனித்த ஆலயங்கள் பல உள்ளன. சிவபெருமான் எடுத்த திருக்கோலங்களில் கால பைரவரும் ஒன்று. காலனாகிய யமனும் நடுங்கும் தோற்றம் எடுத்தமையால் காலபைரவர் எனப்படுகிறார். உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளும், வான் மண்டலத்தில் உள்ள கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்கள் ஆகியன அனைத்தும் காலச் சக்கரத்தின் ஆளுகைக்கு உட்பட்டது. கால பைரவரின் உடம்பில் பூமியைத் தாங்கும் எட்டு நாகங்களும் மாலைகளாக

**சாந்தமாகச் செல்பவன் பாதுகாப்பாகச் செல்கிறான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அலங்கரிக்கின்றன. எனவே இவரை வழிபட்டால் எல்லாவித சர்ப்ப தோஷங்களும் நீங்குகின்றன.

காலச் சக்கரத்தை இயக்கும் பரம் பொருளே கால பைரவர். காலத்தின் கட்டுப்பாட்டை மீறி நன்மை செய்பவர் கால பைரவர். காலச் சக்கரத்தினால் துன்பமடையும் பக்தர்களைக் காப்பாற்றுபவரும் இவரே. மார்கழி மாதம் சுக்கிலபட்ச அட்டமியில் கால பைரவருக்கு உபவாசமிருந்து இரவு கண் விழிப்பவரது மகா பாவங்கள் நீங்கும் என கூறப்படுகிறது. காசியில் கால பைரவருக்கு முக்கியத்துவம் அதிகம். ஏனெனில் காசியில் வசிப்பவர்களின் பாவ புண்ணியம் மற்றும் ஜீவமரணக் கணக்குகளை கால பைரவரே எழுதுகிறார். சித்திர குப்தன் எழுதுவதில்லை. எனவே காசியில் யம பயமோ யாதும் கிடையாது. காசியில் யம தர்மனின் பணியைக் காலபைரவர் செய்து கொண்டிருப்பதால் காசிக்குச் செல்பவர்களின் பாவங்களையும் அவரே நீக்குகின்றார். காசியில் காவல் தெய்வம் என்பதால் காசியின் எட்டுத் திசைகளிலும் பைரவருக்குக் கோவில்கள் உள்ளன. கங்கைக் கரையின் அறுபத்துநான்கு கட்டிடங்களிலும் அறுபத்து நான்கு (64) பைரவர்கள் இருக்கின்றார்கள்.

"ப்ருஹத் ஜாதகம்" என்னும் நூல் பன்னிரு ராசிகளும் காலபைரவர் உடம்பின் பகுதிகள் என்கின்றது.

அண்ட சராசரங்களையும் தன்னுள் அடக்கி தன்னிடமிருந்து பிரபஞ்சத்தையும் தோற்றுவிப்பார் பைரவர். ஆனால் படைப்புக் கடவுளாகிய பிரமதேவர் இதை இகழ்கின்றார். மாயானத்துச் சாம்பரை உடலில் பூசி கபாலமும் பாம்பும் அணிந்த சிவன் எப்படி முழுமுதலாக முடியும் என்று கூறுகிறார். தொடர்ந்து ஜோதி ரூபனான இறைவனின் முடியைக் கண்டு வந்ததாக பொய் சொல்லி அப்படிச் சொன்னதை உறுதிப்படுத்த பொய்ச் சாட்சியாக தாழம்பூவையும் முன் நிறுத்துகிறார்.

பிரமனின் சிரம் கொய்வதற்காக இறைவன் மேற்கொண்டது வடுகக் கோலம். இதுவே உக்கிர பைரவரின் கோலம். பைரவர் சனீஸ்வரனுக்கு குருவாக விளங்கி அருள் கொடுத்தார். சனீஸ்வரன் யமதர்மனால் அவமதிக்கப்பட்டார். அலட்சியப்படுத்தப்பட்டார். பல தொல்லைகளுக்கு ஆளானார். அதனால் வருந்திய அவர் தன் தாயாரிடம் முறையிட்டார். தாயார் கூறிய அறிவுரையின்படி சனீஸ்வரர் பைரவரை வழிபட்டு அருள் பெற்றார். அதனால் நவக்கிரக பதவியும், ஈஸ்வர பட்டமும் பெற்றார். இவ்வாறு பைரவர் சனீஸ்வரனுக்கு குருவாக வந்து அருள் கொடுத்தார். ஆகையால் சனியின் பார்வையால் பாதிக்கப்பட்ட பக்தர்கள், அட்டமத்துச்சனி, ஏழரைச் சனியின் பாதிப்புக்களால் பீடிக்கப்பட்டவர்கள் பைரவரை வழிபட தனது குருவின் பத்தர்களுக்குச் சனீஸ்வரன் யாதொரு கெடுதியும் செய்யேன் என்று வாக்களித்துள்ளார்.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் பைரவப் பெருமான் சொர்ண பைரவராகக் காட்சி கொடுக்கிறார். சுவர்ணாகர்ஷண பைரவர் எனவும் வழங்கும். சிதம்பரம் பொன்னம்பலத்திலுள்ள உற்சவ பைரவரே சுவர்ணாகர்ஷண பைரவர் என்று அழைக்கப்படுகிறார். இவரின் கரங்களில் டமருகம், பாசம், சூலம், கபாலம் உள்ளன. இவரது மடிமீது அமர்ந்திருப்பவள் சொர்ணபைரவியாவாள்.

நவக்கிரக பெயர்ச்சியினால் ஏற்படும் துன்பம் நீங்கவும், மனதில் தேவையற்ற பீதி குடிகொண்டிருக்கும்போதும் பைரவருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் அவை நீங்கும். குழந்தை இல்லாத தம்பதியினர் ஆறு தேய்பிறை அஷ்டமியில் பைரவருக்குச் சிவப்பு நிற அரளிப் பூவினால்

**வாதத்திற்கு மருந்து உண்டு. பிடிவாதத்திற்கு மருந்தில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவ சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பைர வரை மஞ்சள் நிற மலர்களால் சகஸ்ர நாமம் சொல்லி வழிபட கல்வி கேள்விகள் பலன் சிறக்கும். நல்ல குருமார் கிடைப்பார் கள். ஞாயிற்றுக்கிழமைகளில் ராகு காலத் தில் விபூதி அபிஷேகம் செய்து, வடை மாலை சாற்றி, சகஸ்ரநாம அர்ச்சனை செய் தால் திருமணமாகாதவருக்கு விரைவில் திருமணம் நடக்கும்.

இழந்த சொத்துக்கள் மற்றும் பொருள்களை திரும்பப் பெறுவதற்கு, பைரவர் முன்பாக மிளகை சிறு துணியில் பொட்டலங்களாகக் கட்டி அகல் விளக்கில் வைத்து நல்லெண்ணெய் விட்டு தீபம் ஏற்றி, சகஸ்ர நாம அர்ச்சனை செய்தால் இழந்த பொருட்கள் திரும்பக் கிடைக்கும்.

வழக்குகளில் வெற்றி பெற எதிரி களிடமிருந்து தப்புவதற்கும் பைரவ சகஸ்ர நாமத்தை ஒன்பது (09) முறைகள் பைர வருக்கு அர்ச்சனை செய்து அவரவர் வசதிப் படி தயிர் சாதம், தேங்காய், தேன் படைத்து வழிபட வேண்டும். அதனால் பில்லி, சூனி யங்கள் அகலும்.

அஷ்டமி, சதுர்த்தி திதிகளில் ஞாயிறு, செவ்வாய்க்கிழமைகளில் கால பைரவரைத் தரிசித்தால் பாவங்கள் அகலும் என காசி காண்டம் கூறுகிறது.

இலங்கையில் பைரவர் வழிபாடு ஆகமநெறி சார்ந்தும் சாராததுமாகவும் நடை பெற்று வருகிறது. மரங்களின் கீழ் சூலத்தை நாட்டி பைரவ வழிபாடு செய்யப்படுகின்றது. இலங்கையின் பல ஊர்களில் பைரவருக்கு தனிக்கோயில்களும் அமைக்கப்பட்டு வழி படப்பட்டு வருகின்றது. வீடுகளிலும் சூலம் நடப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது. வர லாற்றுக் காலத்திலும் இவ்வழிபாடு மக்கள் மத்தியில் நடைமுறையில் இருந்துள்ளது. வட இலங்கையிலுள்ள பைரவர் ஆலயங் களுள் குறிப்பிடத்தக்க ஆலயமாக விளங்கு பவை சில. அவற்றுள் கொக்குவில் தலை யாழி ஸ்ரீ ஞான பைரவர் ஆலயம் சிறப்பு மிக்கது. தெல்லிப்பளை ஞான பைரவர் ஆல யம் பழமைச் சிறப்பு மிக்கது. விழிசிட்டிக் கிராமத்தில் அமைந்துள்ள ஞான பைரவ சுவாமி ஆலயமும் சிறப்பு மிக்க ஆலய மாகும். இவ் ஆலயம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. கொக்குவில் கிழக்கு கோணாவளை பைரவர் ஆலயமும் யாழ்ப் பாணத்திலமைந்துள்ள பைரவ சுவாமி ஆல யங்களுள் சிறப்பிடம் பெற்று விளங்கு கின்றது. இது ஆகமமுறை சாராத வழி பாட்டு முறைகளைப் பின்பற்றிவரும் ஆல யம் என்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கிலங் கையிலும் பல பைரவசுவாமி ஆலயங்கள் விளங்குகின்றன. திருகோணமலையில் பாலையூற்று, உவர்மலை, செக்கடி முதலிய இடங்களில் பைரவ சுவாமிக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் ஸ்ரீ நரசிங்க பைரவர் சுவாமி ஆலயம் பிரசித்தம் பெற்றது.

பொதுவாக உலக மக்கள் தங்கள் சுயநல ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இறைவனை நினைக்கின்றார்கள். அதைப் பக்தி என்று கருதுகின்றார்கள். இது பக்தியல்ல. உலகில் இன்பம் பெறவோ, சொர்க்க வாழ்வு பெறவோ. நரக தண்டனையிலிருந்து தப்புவதற்காகவோ பக்தி செலுத்துபவன் உண்மையான பக்தன் அல்ல. எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் பக்திக்காகவே பக்தி செலுத்துபவனே உண்மையான பக்தன். இந்த பக்தனின் பக்தியே சுத்த பக்தி. இதுவே மேலானது. உயர்வானது, உன்னதமானது, புனிதமானது.

**அவசரத்தில் திருமணம் செய்யின் ஓய்வு நேரத்தில் வருந்தவேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

**337. சிவனடியாரை வழிபடாது சிவலிங்கத்தை மாத்திரம் வழிபடலாகாதா?**

ஒருவன் ஒரு பெண்ணிடத்து அன்புடைமை அவளுடைய சுற்றத்தாரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பினளவு பற்றித்தெளியப்படும். அதுபோல, ஒருவன் சிவபெருமானிடத்து அன்புடைமை அவருடைய அடியாரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பினளவு பற்றித் தெளியப்படும். ஆதலினாலே, சிவனடியாரிடத்து அன்பு செய்யாது அவமானம் செய்துவிட்டுச் சிவபெருமானிடத்தே அன்புடையவர்போல் ஒழுகுதல், வயிறு வளர்ப்பின் பொருட்டும், இடம்பத்தின் பொருட்டும் நடித்துக் காட்டும் நாடக மாத்திரையே அன்றி வேறில்லை.

**338. சிவபக்தர்களோடு இணங்குதலாற் பயன் என்னை?**

காமப் பற்றுடையவர்க்கு, அச்சம்பந்தமுடையவருடைய இணக்கம் அக்காமத்தை வளர்த்தலால் அவ்விணக்கத்தில் விருப்பு மிகுதியும், அவரல்லாத பிறருடைய இணக்கம் அக்காமத்தைக் கெடுத்தலால் அவ்விணக்கத்தில் வெறுப்பு மிகுதியும் உண்டாகும். அதுபோலச் சிவபக்தியுடையவருக்கு, அச்சம்பந்தம் உடையவருடைய இணக்கம் அச்சிவ பக்தியை வளர்த்தலால் அவ் இணக்கத்தில் விருப்பு மிகுதியும், அவரல்லாத பிறருடைய இணக்கம் அச்சிவபக்தியைக் கெடுத்தலால், அவ் இணக்கத்தில் வெறுப்பு மிகுதியும் உண்டாகும்.

**339. சமய தீக்ஷிதர் யாரை வணங்குதற்கு உரியர்?**

ஆசாரியரையும், நிருவாண தீக்ஷிதரையும், விஷேச தீக்ஷிதரையும், சமய தீக்ஷிதர்களுள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியர்.

**340. விசேஷ தீக்ஷிதர் யாரை வணங்குதற்கு உரியர்?**

ஆசாரியரையும், நிருவாணதீக்ஷிதரையும், விசேஷ தீக்ஷிதர்களுள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியர்.

**341. நிருவாண தீக்ஷிதர் யாரை வணங்குதற்கு உரியர்?**

ஆசாரியரையும், நிருவாண தீக்ஷிதருள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியர்.

**342. ஆசாரியர் யாரை வணங்குதற்கு உரியர்?**

ஆசாரியர்களுள்ளே தம்மின் மூத்தோரை வணங்குதற்கு உரியர்.

**ஒரு வசீகரமான கடுஞ்சொல் ஆயிரம் கேவலங்களுக்குச் சமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**343. வருணத்தாலாவது ஆச்சிரமத்தாலாவது வருணம் ஆச்சிரமம் என்னும் இரண்டினாலு மாவது தம்மில் தாழ்ந்தவர் தீக்ஷை முதலியவற்றினாலே தம்மின் உயர்ந்தவராயின், அவரை யாது செய்தல் வேண்டும்?**

அவமதித்தலும் செய்யாது, புறத்து வணங்குதலும் செய்யாது, மனத்தால் வணங்கல் வேண்டும். அப்படிச் செய்யாது, அவமதித்தவர் தப்பாது நரகத்தில் வீழ்வர். சிவஞானிகளேயாயின், அவரை, வருணம், ஆச்சிரமம் முதலியுவை சற்றுங் குறியாது. எல்லோரும் வணங்கல் வேண்டும். எல்லை கடந்து முறுகி வளரும் மெய்யன்பினால் விழுங்கப்பட்ட மனத்தையுடையவர், திருவேடம் மாத்திரம் உடையவர் காணினும், வருணம் ஆச்சிரமம் முதலியன குறித்துக் கூசித் தடைப்படாது, உடனே அத்திரு வேடத்தால் வசீகரிக்கப்பட்டு, அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்குவர்; அவ்வுண்மை திருத்தொண்டர் புராணத்தினாலே தெளியப்படும்.

**344. குருவையும், சிவனடியாரையும் எப்படிப் போய்த் தரிசித்தல் வேண்டும்?**

வெறுங்கையுடனே போகாது, தம்மால் இயன்ற பதார்த்தத்தைக் கொண்டுபோய், அவர் சந்நிதியில் வைத்து, அவரை நமஸ்கரித்து, எழுந்து, கும்பிட்டு, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, மீட்டும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, அவர் இரு என்றபின் இருத்தல் வேண்டும்.

**345. குருவாயினும் சிவனடியாராயினும் தம் வீட்டுக்கு வரின், யாது செய்தல் வேண்டும்?**

விரைந்து எழுந்து, குவித்த கையோடு எதிர்கொண்டு, இன்சொற்களைச் சொல்லி, அழைத்துக் கொண்டு வந்து ஆசனத்து இருத்தி, அவர் திருமுன்னே இயன்றது யாதாயினும் வைத்து, அவர் திருவடிகளைப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, மீட்டும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, அவர் இரு என்றபின் இருத்தல் வேண்டும். அவர் போம்பொழுது அவருக்குப்பின் பதினான்கடி போய் வழிவிடல் வேண்டும். இராக்காலத்திலும், பயமுள்ள இடத்திலும், அவருக்கு முன் போதல் வேண்டும்.

**346. ஒருவர் தாம் பிறரை வணங்கும் வணக்கத்தை எப்படிப் புத்தி பண்ணல் வேண்டும்?**

"இவ்வணக்கம்; இவருக்கன்று; இவரிடத்து வேறற நிற்கும் சிவபெருமானுக்கேயாம்", என்று புத்தி பண்ணல் வேண்டும். அப்படிச் செய்யாதவர் அவ்வணக்கத்தாலாகிய பயனை இழப்பர்.

**347. ஒருவர் தம்மைப் பிறர் வணங்கும் வணக்கத்தை எப்படிப் புத்தி பண்ணல் வேண்டும்?**

"இவ்வணக்கம்; நமக்கன்று; நம்மிடத்து வேறற நிற்கும் சிவபெருமானுக்கேயாம்", என்று புத்தி பண்ணல் வேண்டும். அப்படிச் செய்யாதவர் சிவத் திரவியத்தைக் கவர்ந்தவராவர்.

(தொடரும்...

**பெண்ணுக்கு மௌனத்தைவிட சிறந்த அணிகலன் வேறில்லை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி விரதமும் சூரன்போரும்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

கந்தசஷ்டி விரதம் பெரும்பாலான பக்தர்களால் அனுஷ்டிக்கப்படும் பிரசித்தமான நோன்பாகும். நினைத்த காரியம் ஈடேற, வேண்டியதைப் பெற முருகனை வேண்டி நோற்கும் நோன்பாகும். இது ஐப்பசி மாத வளர்பிறைப் பிரதமைத் திதியில் தொடங்கி சஷ்டித்திதி வரை ஆறு நாட்கள் நோற்கும் நோன்பாகும். ஒவ்வொருவரும் தத்தம் இயல்புக்கேற்ப ஒரு பொழுது உணவு உண்டேனும் அல்லது பால்பழம் உண்டேனும் அல்லது தீர்த்தம் மட்டும் அருந்தியும் இந்நோன்பினை நோற்பர். பெரும்பாலான பக்தர்கள் முருகன் தலத்தில் தங்கியிருந்து இந்நோன்பினை நோற்பர்.

ஆறாம் நாள் சஷ்டித் திதியன்று சூரன்போர் நடைபெறும். இந்நோன்புக் காலத்தில் கந்தபுராணம் படிக்கப்படும். தாரகாசுரன், சிங்கமுகாசுரன், சூரன் என்ற மூன்று சகோதரர்களான அசுரர்களை வென்று சூரனைச் சேவலும் மயிலுமாக்கித் தன் கொடியாகவும் வாகனமாகவும் ஏற்றுக்கொண்டான் என்பது கந்தபுராண வரலாறு.



இதை நாம் மேலோட்டமாகப் பார்க்கும்போது தேவர்களை அசுரர்கள் வதைப்பதும் சிறையில் அடைப்பதும் அவர்கள் முருகனைத் தஞ்சமடைந்து தம்மைக் காப்பாற்ற வேண்டுவதும், முருகன் தேவர்களைச் சிறை மீட்க அசுரர்களோடு போரிட்டு வெற்றி பெற்றதும் வெளித்தோற்றத்தில் தேவர்களாக அசுரர்களாக சித்தரித்துப் போரிட்டு தேவர்களைச் சிறைமீட்ட முருகனைக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

ஆனால் நம்மில் நம் ஒவ்வொருவரிலும் தெய்வீக சக்தியும் அசுர சக்தியும் இருக்கின்றது. தாரகாசுரன், சிங்கமுகாசுரன், சூரன் மூவரும் சகோதரர்கள். இது எம்முள் இருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கும். இவை நம்முள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தெய்வீக சக்தியை மறைத்து நான், எனது, எனக்கு என்று அவாக்கொண்டு நம்மை ஆட்டுவிக்கின்றது. இந்த அவாவினால் சுயநலம் உண்டாகின்றது. இதற்கு அடிமைப்பட்ட நாம் வாழ்வில் எதிலும் திருப்தியுறாது துன்பத்தில் உழல்கின்றோம். இவற்றை வென்று உள்ளே உறங்கிக் கிடக்கும் தெய்வீக சக்தியை வெளிக்கொண்டுவந்து சாந்தமும் அமைதியும் நிரம்பிய ஆனந்தமயமான வாழ்வை அனுபவிக்க நாம் விளைகின்றோம்.

நம் இயல்பிற்கேற்ப உணவைச் சுருக்கியோ அல்லது விடுத்தோ இருந்து மனத்தை ஒருமுகப்படுத்தி இறை சிந்தனையில் திளைத்திருந்து அவன் புகழ்பாடியும், அவனது லீலா விநோதங்களைக் கூறும் புராணக் கதைகளைப் படித்தும், கேட்டும் இருந்து

**அறிவு நம்மைக் கைவிடும்போது நம்பிக்கையே உதவுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைப் பற்றியுள்ள அசுர சக்தியை வென்று தெய்வீக சக்தியாகிய பேரானந்தப் பெருவாழ்வை அடைவதே இக் கந்தசஷ்டி நோன்பின் நோக்கமாகும்.

நாம் எப்போதும் வெளியே அசுரர்களை பார்க்கின்றோமேயன்றி நமக்குள்ளே இருக்கும் அசுர சக்தியை அறிவதில்லை. ஏனெனில் நாம் இந்த அசுர சக்தியாகிய மும்மலங்களால் பிணைக்கப்பட்டுள்ளோம். மலங்களால் பிணிக்கப்பட்டுள்ளவரை இந்த உண்மையை அறிய முடியாது. நமது புலன்களை ஒடுக்கி முருகனை நினைத்து நமக்கு வேண்டிய அமைதியான ஆனந்தப் பெருவாழ்வு கிடைக்க வேண்டுமென எண்ணி நோன்பிருந்தால் நிச்சயம் அது நமக்குக் கிடைக்கும். ஐம்பூதங்களாலான இவ்வுடம்பு மலபரிபாகம் பெற்றபின் இறையருளால் இயங்குகின்றதை நாம் உணர்வோம். அதுவே முருகனைத் தாங்கும் மயில் வாகனமாகின்றது. அவனது புகழை என்றும் பாடியும் பேசியும் வருவதால் நமது குரலே சேவற்கொடியாகின்றது. இதுவே கந்தசஷ்டி நோன்பின் அதி உன்னத பலனாகும்.

## குத்துவிளக்கில் எத்தனை திரிகள் பொருத்திப் பற்றவைக்க வேண்டும்?

“ஏகவர்த்திம் மஹா வியாதிர்
துவிவர்திஸ்து மஹாத்தனம்
த்ரிவர்த்திர் தரித்ரதா,
பஞ்சவர்த்திஸ்து பத்திரம் ஸ்யா
துவி வர்த்திஸ்து சுசோபனம்”
வர்த்தி என்றால் திரி என்று பொருள்.

மாலைநேரம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதற்காகப் பற்றவைக்கும் குத்துவிளக்கின் திரியைப்பற்றியே மேலே கொடுத்திருக்கும் மந்திரத்தில் குறிப்பீட்டுள்ளது.

விளக்கில் எத்தனை திரிகள் இருந்தால் என்னவென்று புதிய தலைமுறை வினவலாம். ஆனால் இதற்கு பதில்கூறுமுன் பல விசயங்களை விபரிக்க வேண்டிய தாயிருக்கும். ஒரு திரி மட்டும் பொருத்தி விளக்கேற்றினால் வயதானவர்கள் கோபப் படுவார்கள் ஒற்றைத்திரி நோயின் அடையாளம் என்பார்கள். மூன்று திரியில் விளக்கேற்றினால் அது அலட்சியத்தின் லட்சணம் என்றும், நான்கு திரியானால் தரித்திரம் என்றும் அறிவுள்ளவர்கள் கூறுவார்கள். இரண்டு திரியைப் பொருத்தி விளக்கேற்றினால் மிகநன்று. கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியுமானால் உத்தமம். இதைவிட ஐந்து திரிகள் இடுவது மிக உசிதமானது என்றெல்லாம் ஆசாரியார்கள் விதித்துள்ளனர்.

திரிகள் எத்தனையானாலும் ஒளியில் வேறுபாடு உண்டாகும் என்பதல்லாமல் வேறென்ன உண்டு என்ற கேள்விக்கு பதில் கூறுவது மிகவும் சிக்கலானது. “டௌசிங்ராட்” என்ற சிறு கருவியால் சோதனைகள் செய்து இந்து சம்பந்தமான சில உண்மைகள் விஞ்ஞானம் வெளிப்படுத்தியுள்ளது.

ஒருதிரிமட்டும் பொருத்தி எரியவிட்ட விளக்கிலிருந்து எதிர்மறை சக்தி பரவுகின்றது என்று தெரிகின்றது. இரு திரிகளால் எரியும் விளக்கில் கண்டது அனுகூலமான சக்தி. மூன்று, நான்கு திரிகளால் எரியும் விளக்கிலிருந்தும் எதிர்மறை சக்தியே வெளிப்பட்டது. ஐந்து திரிகள் பொருந்திய விளக்கிலும் அனுகூல சக்தி காணப்பட்டது. இந்த விஞ்ஞான ரகசியத்தைப் புரிந்துகொண்டுதான் இரண்டு அல்லது ஐந்து திரிகள் இட்டு விளக்கேற்ற வேண்டுமென்று ஆசாரியர்கள் விதித்தனர்.

*– ஓலைச்சுவடி –*

**ஒரு பாவம் நூறு பாவங்களை அதன்பின்னே இழுத்துச் செல்லும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள் கதை

# சிறுவர் கதைகள்

## உய்வு இல்லை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள்: 110)

எந்த நல்லதை மறந்தவருக்கும் வாழ்வுண்டு. பிறர் செய்த நல்லதை மறந்தவருக்கு வாழ்வே இல்லை. அதாவது நன்றி மறக்கும் குற்றத்திற்குப் பிராயச்சித்தமே இல்லை; இந்தக் குறள் கருத்தை மகாபாரதமும் நன்கு விளக்கியுள்ளது.

நாம் ஒருதவியும் செய்யாமலேயே நமக்கு ஒருவர் செய்த உதவிக்கு எவ்வுலகைத் தந்தாலும் ஈடாகாது. ஏனெனில் ஒருவர் நமக்குத் தக்க சமயத்தில் செய்யும் உதவி சின்னதானாலும் உலகைவிடப் பெரிதான மதிப்புடையது. இதேபோல நம்மிடமிருந்து ஒரு பயனையும் எதிர்பாராமல் ஒருவர் செய்யும் உதவி கடலினும் பெரியதாகும். இதனால்த்தான் ஒருவர் செய்த நல்லதை மறப்பது நல்லதில்லை. ஆனால் அவர் செய்த நல்லவற்றதை உடனே மறந்து விடுவது நன்று. அதெப்படி ஒருவர் செய்த தீமையை உடனே மறக்க முடியும்? என்றால், அவர் முன்னெப்போதாவது செய்த நன்மையை நினைத்துக் கொண்டால் முடியும் என்கிறார் திருவள்ளுவர்.

இதனால்த்தான் நன்றியை மறந்து அதை அழித்தவருக்கு, பிராயச்சித்தமே இல்லை என்கிறது சாத்திரம்.

ஒரு பிராமணன் இருந்தான். அவன் மட்டமானவன். அவன் பெயர் கௌதமன். இவன் பணம் தேடிப் பயணம் போனான். ஒரு கிராமத்தில் திருடுவதும் வேட்டையில் கொலை புரிதலுமாக இருந்தோரிடை போய்ச் சேர்ந்தான். அவனுக்கு ஒரு திருடன் தங்க இடமும் தந்து தன் தங்கையை மணம் செய்து கொடுத்து விட்டான். மட்ட பிராமணனும் குடித்து மாமிசம் தின்று, மனைவியுடன் குடும்பம் நடத்திக்கொண்டு அங்கேயே வசித்தான்.

சில காலம் சென்றது. ஓர் அந்தணர் அந்தக் கிராமத்திற்குத் தம் வழியில் வந்துவிட்டார். இரவு தங்கி இளைப்பாறிச் செல்ல ஒரு பிராமணனின் வீட்டை அவர் தேடினார். அவருக்குச் சிலர் கௌதமனின் வீட்டைக் காட்டினர். அங்கே கொல்லப்பட்ட மிருகங்கள், பட்சிகளின் உடல்கள் தொங்கின. வில்லும் அம்புகளும் இருந்தன. ஒரே அசுத்தமாக இரத்தக் கறையுடன் வீடிருந்ததால் நாற்றமும் அடித்தது. கௌதமனிடம் வந்தவர், "உன் குலமென்ன கோத்திரமென்ன? நீ இப்படி அதமனாக இருக்கலாமா?" என்று கேட்டுப் புத்தி கூறினார். அங்கே எதுவும் உண்ணாது கிளம்பிப் போய்விட்டார்.

அக்கிராமத்திலிருந்தும் பொருள் தேடி கௌதமனும் காலையில் புறப்பட்டு விட்டான். வெகுதூரம் நடந்து ஒரு சோலையில், பெரிய ஆலமரத்தை அடைந்தான். அங்கே ராஜதருமர் என்ற கொக்கு அவனை வரவேற்று உபசரித்தது. மலர்கள், மென்மையான இலைகள் வைத்தே நல்ல படுக்கையைப் போட்டும், சுவையான பழங்கள், மீன்களை அளித்தும் விருந்தோம்பியது.

**துரதிர்ஷ்டங்கள் எப்பொழுதும் தனிமையில் வருவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா, தாங்கள் இங்கே வந்த நோக்கமென்ன?" என்றது. "ராஜதர்மரே, நான் ஓர் ஏழை. பணம்தேடி வந்தேன்" என்றான் கௌதமன்.

"பிராமணரே, அறிவு, கல்வி, பணம் நண்பராலும் கிடைக்கும். இரவு நன்கு தூங்கும். காலையில் உம்மை விருபாக்கன் என்ற என் நண்பனிடம் அனுப்புகிறேன். அடுத்த கிராமத்திலுள்ள அரசன் அவன். உமக்கு வேண்டிய பொருள் தருவான்" என்றது கொக்கு.

மனுவிரஜத்தை ஆண்ட விருபாக்கனிடம் போய் கௌதமன் "ராஜதர்மா ஆகிய கொக்கு அனுப்பியது" என்றான். நிறையப் பொருளைக் கொடுத்து அவன் மகிழ்ச்சியாக அனுப்பி வைத்தான்.

திரும்பி ஆலமரத்தடிக்கு வந்த கௌதமன், "நெடுந் தொலைவு நடந்து போகும்போது வழியில் உணவாகட்டும் என்று தூங்கும்போது கொக்கைக் கொன்று இறகுகளைப் பிய்த்துத் தீயில் வாட்டிக் கம்பியில் கோர்த்துக்கொண்டு கிளம்பிவிட்டான்.

விருபாக்கனுக்கு ஏதோ ஐயம் ஏற்பட, ஆட்களை அனுப்பி ராஜதர்மரைப் பார்த்து வரச் சொன்னான். கொக்கு கொல்லப்பட்டதை பிய்த்திருந்த இறகுகளால் அறிந்த அவன் ஆட்களை அனுப்பி கௌதமனைக் கொல்லச் சொன்னான்.

அடுத்த கிராமத்தில் கௌதமனைப் பிடித்த விருபாக்கனின் ஆட்கள் அவனின் நன்றி கெட்ட செயலுக்காகக் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டனர்.

எக்குற்றத்திற்கும் பிராயச்சித்தம் உண்டு. ஆனால், செய்த நன்றியை மறந்த துரோகிக்கு வாழ வழியே இல்லை.

ஒருவர் செய்த உதவியின் அளவு, உதவி பெற்றவரின் பண்பைப் பொறுத்தே உயர்வாக உள்ளது. நல்லவரின் உறவை மறக்கக்கூடாது. துன்ப காலத்தில் துணையாயிருந்தவரின் நட்பை விடலாகாது.

துன்ப காலத்தில் உதவியவரின் நன்றியை எடுக்கின்ற பிறவிகளிலெல்லாம் உயர்ந்தவர் நினைத்துப் போற்றுவார்.

அதனால், கௌதமனைப் போல கொக்கைக் கொன்று நன்றி கொன்ற குற்றத்திற்கு ஆளாகாமல் உதவியவரை உள்ள அளவும் போற்ற வேண்டும்.

## சந்நிதியான் காத்திடுவான்

நம்பிக்கை நம்பிக்கை நம்பிக்கை
சந்நிதியான் மீதுபூரண நம்பிக்கை
சகலஅடியார் உறுதியுடன் நம்பிக்கை
வந்திடும் எத் துன்பங்களை நீக்கியவன்
வாழ வைப்பான் என்கின்ற நம்பிக்கை
சிந்தையிலே அவனையன்றி வேறெண்ணம்
சிறிதுமின்றி அவனைத்தான் சிந்திப்பர்
வந்தனைசெய் தவன்திருவடி வணங்கியே
வாழ்நாளைக் கழிப்பதேயவர் கடனாகும்.

-வ. யோகானந்தசிவம்-

**சிறுசிறு வெட்டுக்கள்தான் பெரிய மரங்களை வீழ்த்துகின்றன.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 14. மகாபிரபு ரமணன்

ஆச்ரமத்தினருகே அமைதியாகப் பகவான் வழியில் வாழ்ந்து வரும் கனகம்மா அளித்த மிகச் சுவையான தகவல்கள் இவை:

ஸ்ரீ மாத்ருபூதேச்வரர் ஆலயத்துக்கு முன்புள்ள, புது ஹாலுக்கு பகவான் எழுந்தருளியதும் சின்ன சுவாமி சில கடுமையான நியமங்களை விதித்தார். நிச்சயிக்கப்பட்ட ஊழியரைத் தவிர வேறு யாரும் ஹாலில் படுத்துறங்கக்கூடாது. இவர்களும் இரவில் குறிப்பிட்ட நேரங்களில் படுத்துறங்க வேண்டும். இந்த நியமமெல்லாம் பகவானுக்கு மிக அவசியமான ஓய்வு அளிப்பதற்காகவே. அதனால் பகவானுடைய சமீபத்தில் இருப்பதற்காகவே வேங்கடரத்தினம், சப்- ரெஜிஸ்திரார் நாராயணய்யர், T.P. ராமச்சந்திரய்யர் முதலானோர் இரவு நேரப் பணிவிடையை ஏற்றுக்கொள்ள முன் வந்தனர். அந்நாட்களில் இரவானாலும், பகலானாலும் பகவான் நிறையப் பேசியது. முக்கியமாகக் கதை சொல்வதென்றால், முழுவதையும் நாடகம்போல் உற்சாகமாகப் பொருத்தமான முகபாவங்கள், சைகைகளுடன் கண் முன்னே நிகழ வைத்துவிடும். சின்னசுவாமியோ, தொண்டர்கள் அமைதியாகப் படுத்திருக்க வேண்டுமே தவிர, பகவானைப் பேச்சுக்கு இழுக்கக்கூடாது என்று மிக உறுதியாகக் கட்டளை பிறப்பித்திருந்தார். அதனால் அவர் இடையிடையே ஹாலைச் சுற்றி வந்தும் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தும் முறையாகக் கண்காணித்து வந்தார். பகவான் கதையை நாடகம்போல் நடித்துக் காண்பிப்பதை வேங்கடரத்தினமும், நாராயணய்யரும் வாய் திறந்து மெய்மறந்து இமைக்கவும் மறந்து பார்த்துக்கொண்டிருப்பார்கள். சூழ்நிலை அடியோடு மனதை விட்டு அகன்று விடும். ஆனால் பகவானுக்கு, "ஆபத்து" நெருங்குவது தெரியும். அதனால் சட்டென்று பேச்சையோ, கதையையோ, (எது அச்சமயம் நடந்து கொண்டிருந்ததோ அதை) நிறுத்திவிட்டு, அவர்களைப் படுத்துக்கொள்ளும்படி சைகை செய்யும். அவர்களும் உடனே படுத்துவிடுவார்கள், சற்றுப் பொறுத்து சர்வாதிகாரி போனபின்பு, பகவான் சப்தமின்றி சைகை செய்யவே, காத்துக்கொண்டிருந்த அவர்கள் ஆவலுடன் எழுவார்கள்; மீண்டும் கதை தொடரும். என்ன இனிமையான குழந்தைக் குறும்பு!



"இத்தகைய ஒரு இரவில் பகவான் ஒரு சாதுவின் கதையை மிக அழகாக சித்தரித்துக் கொண்டிருந்தது. வேங்கடரத்னம் பகவான் காலைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தார். பகவானின் கால்களில் வலி இருந்ததால், பிடித்துவிடுவது வழக்கம். அன்று வேங்கடரத்தினத்தின் முறை. பகவான் சொல்லும் கதையில் லயித்துப்போய், தன்னை மறந்த நிலையில் அதன் காலை ஒரே இடத்தில் பிடித்துக்கொண்டே இருந்தார்.

**ஒரு பொய் ஈட்டியைவிட ஆழமான காயத்தை உண்டாக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் சென்றதும் பகவான் கதையை சற்று நிறுத்தி, வேங்கடரத்னத்தைப் பார்த்தது. பகவானுக்கு அதிக அழுத்தம் தேவை என்று நினைத்து அவர் இன்னும் பலமாகப் பிடிக்கத் தொடங்கினார். பகவான் மறுபடி அவரைப் பார்த்தது. அப்போதும் அதே போல் நினைத்து வெகு பலமாகப் பிடிக்கத் தொடங்கினார். மற்றுமொரு முறை அதே போல் ஆனதும் பகவான் திடீரென்று, "என்ன ஓய்! உமக்கு எதையாவது பிடித்து விட வேண்டும் என்றிருந்தால் அதோ அந்தக் கல் தூணைப் போய்ப் பிடித்துவிடும்" என்றது. பாவம் வேங்கடரத்தினம்! வெலவெலத்துப்போய் விட்டார். அப்பொழுதுதான் தன் தவற்றை உணர்ந்தார். பகவான் கால் முழுவதையும் இதமாகப் பிடித்துவிடுவதற்குப் பதில், கதையின் சுவாரஸ்யத்தில் மூழ்கி, ஒரே இடத்தில் திரும்பத் திரும்ப அமுக்கிக் கொண்டிருந்தோமே என்று. பகவான் அவரது தவறை உணர்த்துவதற்காக அவரைப் பார்க்கும்போதெல்லாம் இன்னும் பலமாக அழுத்தவே அந்த இடம் வீங்கிவிட்டது. பாவம் பகவானுக்கு எப்படி வலித்திருக்கும்? மறுநாள் காலை வேங்கடரத்னத்துக்கு பகவானைப் பார்க்கத் துணிவு வரவில்லை. குற்ற உணர்வாலும், அவமானத்தாலும் பகவான் சந்நிதிக்கு வருவதையே தவிர்த்தார். மறுநாள் பகவான் அவரைக் கூப்பிட்டு, "உன் ஸ்தானத்தில் யாராயிருந்தாலும் அப்படித்தான் செய்திருப்பார்கள். நீ அவ்வளவு தூரம் கதையில் லயித்திருந்தாய். பரவாயில்லை, எதற்காக என்னைத் தவிர்க்க வேண்டும்?" என்றது மென்மையாக. பகவானின் இந்தப் பரிவில் வேங்கடரத்னத்தின் மனம் நிம்மதியடைந்தது. இதில் பகவத் குணங்களான எளிதில் மன்னிக்கும் சௌலப்யமும், அடியாரின் மனத்துயரை மாற்ற விரையும் காருண்யமும், மகிமையும் வெளிப்படுகின்றன.

பழைய ஹாலின் வடப்புறம் அதிகம் ஜனங்கள் உட்கார வசதியாகவும், பகவானுக்கு அதிகக் காற்றோட்டம் - முக்கியமாக, வெயில் காலத்தில் - வேண்டுமென்பதற்காக பொன்விழாப் பந்தல் (ஜூபிலி ஹால்) அழகாக அமைக்கப்பட்டது.

அன்று பகவானின் ஜெயந்தி தினம். கோசாலையிலிருந்து பகவான் ஜூபிலி ஹாலுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில், உக்ராண அறைக்குப் பக்கத்தில் ஆண்கள் ஓய்வறைக்கு எதிரில் மிக அழகாக மயில் கோலம் போட்டிருந்தார்கள். மயில் எழுந்து ஆட ஆரம்பித்துவிடும்போல் அத்தனை தத்ரூபமாக இருந்தது. எதேச்சையாக அங்கு வந்த மயில், கோல மயிலை உயிருள்ளதாக எண்ணித் திகைத்துப் பார்த்துக்கொண்டு நின்றது. அப்பொழுது அங்கு வந்து சேர்ந்த பகவான் சற்று நின்று, இந்த அபூர்வக் காட்சியைக் கவனித்தது. திறந்த டின்னில் தானியங்கள் நிரப்பி மயில் முன் வைத்தனர். ஆனால் அது தானியங்களை திரும்பிக்கூடப் பார்க்காமல் கோலத்து மயிலையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. பகவான் கொஞ்சலாக மயிலிடம், "என்னடா! உனக்கு ஒரு போட்டி வந்துவிட்டதுன்னு பார்க்கிறாயா?" என்றதும் மயில் ஏதோ புரிந்த மாதிரி உற்றுப் பார்ப்பதை நிறுத்தி, தானியங்களைக் கொத்தித் தின்ன ஆரம்பித்தது. ஒரு கலைஞனின் படைப்பு, அதே நிலையிலுள்ள மற்றொரு கலைஞனின் மனம் திறந்த பாராட்டினால்த்தான் பெருமை பெறுகிறது. ஒரு செருப்புத் தைப்பவர் மற்றொருவர் தைத்த காலணியைப் பாராட்டினால் அது உண்மையிலேயே உயர்ந்தது என்று கொள்ளலாம். ஒரு துணி தைத்து, அது ஒரு தையல்காரரால் பாராட்டப்பட்டால் அது முதல் தரமானதாகத்தான் இருக்கும். அதுபோலவே, கோலத்திலிருக்கும் சித்திரத்தை உண்மையென நம்பி ஒரு

**உன் அயலானை நேசி - ஆனால் வேலியை எடுத்துவிடாதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில் மயங்கினால் அது அந்தக் கோலத்தின் கலை உயர்வை நிரூபிக்கிறது. அந்தக் கலைஞரைப் பாராட்டலாம்!" என்று சொல்லி பகவான் சற்று நிதானித்து, "இத்தகைய வரம்பெற்ற கலைஞர்களுக்கு பிரம்ம வித்தை மிக எளிது. ஆனால் அவர்கள் ஆன்மீக உயர்வைத் தேடுவதில்லையே! அவர்கள் எண்ணங்களெல்லாம் மேலும் புகழ் சேர்ப் பதிலேயே செல்லும்" என்றது சற்று மெல்லிய வருத்தத்துடன். பகவானின் இந்தக் கணிப்பு எல்லாத் திறமைசாலிகளுக்கும் பொருந்தும். ஏன், திறமையற்ற நமக்கும்தான். நாமும் அதைத்தானே செய்கிறோம்.

(தொடரும்...

## விரத மகிமை

உலகில் மக்கள் வாழ்வாங்கு வாழும் வகைதனைச் சமயங்கள் சிறப்பாக நெறிப்படுத்துகின்றன. இந்த விதத்திலே எல்லாச் சமயங்களும் மாதந்தோறும் விசேட தினங்களை வகுத்துள்ளன.

ஆதி அந்தமில்லாத பரந்த விரிந்த ஆழமான தத்துவங்கள் நிறைந்த இந்துமதமானது மாத. வார. திதி. நட்சத்திரங்கள்மூலம் விரதங்களையும். வழிபாடுகளையும் வகுத்து மக்களை இறை வழிபாட்டின்மூலம் மனப்பக்குவப்படுத்தி நல்வாழ்வு வாழ வழிப்படுத்தியிருக்கின்றது.

இந்த விதத்திலே விரத வழிபாட்டினைப்பற்றி நாவலர் பெருமான். மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம். வாக்கு. காயம் எனும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி உள்ளன்போடு வழிபடுதல் விரதமாகும் என எடுத்துக்கூறியிருப்பது கவனத்திற்குரிய தாகும். இந்தவிதமாக மக்கள் விரதம் அநுட்டித்து வழிபாடுகள் செய்வதென்பது எமது பாரம்பரியமாக பண்டைய புராண இதிகாச காலங்களிலிருந்து அறியக்கிடக்கின்றது.

மேலும் விரத வழிபாடுகள் மக்கள் தத்தம் இயல்புக்கேற்ப உடல். உள நிலைக்கு உகந்தவாறு மனத்தூய்மையுடன் அனுஷ்டித்தலே ஏற்றதாகும். இந்த முறைகளைப் பற்றி ஆன்றோர் வகுத்துத் தந்திருக்கும் வழிகளாக. யாசிதம். பாதக்கிரிச்சனம். பன்னக்கிரிச்சனம். சௌமியக்கிரிச்சனம். அதிகரிச்சனம். கிரிச்சன்னதி கிரிச்சனம். பிரசாபத்திபகிரிச்சனம். பார்க்க கிரிச்சனம். சாந்தாபான கிரிச்சனம். மகாசாந்தபான கிரிச்சனம். சாந்திராயணம். வால சாந்திராயணம் எனும்படி விரதமனுட்டிக்க வழிப்படுத்தியுள்ளனர்.

இவ்விரத வழிபாட்டு முறைகளில் மக்கள் தத்தம் இயல்புக்கேற்ப உணவைச் சுருக்கியும். பால். மோர். பழம். துளசி. வில்வ தீர்த்தம் போன்றவற்றை உட்கொண்டும் மனதை ஒருவழிப்படுத்தி இறைவழிபாடுகள் செய்து நற்பேறடையவும். இவ்வுலக வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சுபீட்சமுடன் வாழவும் வழிகாண்பதாகும். மக்களுடைய நல்வாழ்விற்கு வழிகாட்டும் எமது சமயம் வருடந்தோறும் வரும் தை முதல் ஆடி வரையான காலத்தை உத்தராயணமாகவும். ஆடி முதல் மார்கழி வரையான காலத்தைத் தெட்சணாயணமாகவும் வகுத்துள்ளனர். உத்தராயண காலமான தைமுதல் ஆறுமாதம் தேவர்களுக்கு உதயகாலம். வைகறைப் பொழுது எனப்படும்.

இந்த உத்தராயண காலத்தில் தை முதல் பங்குனி வரையான முதல் மூன்று மாதங்களிலும் தை மாதத்திற் சூரிய பகவான் மகரராசியிற் பிரவேசிக்கும் நாளில் மகர சங்கிராந்தி. தைப்பொங்கல். சூரிய வழிபாடு. கோமாதா வழிபாடு விரதங்கள் அனுட்டிக்கப்படும்.

மேலும் தை அமாவாசை. தைப்பூசம். தைப்பூரணை விரதங்கள் இம்மாதச் சிறப்பு விரத நாட்களாக பிதிர்வழிபாடு இறைவழிபாடுகளுடன் கொண்டாடப்படும். உத்தராயண மாசிமாதத்தில் மாசிமகம். மாசிஅமாவாசை. மகாசிவராத்திரி. காரடையா நோன்பு என்பனவும். பங்குனி மாதத்திற் பங்குனித் திங்கள். பங்குனி உத்தரம். அமாவாசை. பௌர்ணமி தினங்களும் சிறப்பான விரதநாட்களாகக் கொண்டாடப்படும்.

-நீர்வைமணி-

**தெளிவான குறிக்கோளை நோக்கி முயற்சி செய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதமும் அக்கினியும்

– திரு வீ. செல்வரத்தினம் அவர்கள் –

அக்கினியை நாம் உருவமாகப் பார்க்க முடிகிறது. ஓம குண்டத்தில் உரு வாக்கி வளர்க்க முடிகிறது. அக்கினியின் மூலமாக நாம் மூதாதையருக்கும், தேவர் களுக்கும் சேர வேண்டியதைக் கொடுத்து அனுப்பி வைக்கலாம் என்று சாஸ்திர நூல் கள் கூறுகின்றன. ஆகையால்தான் அக்கினி யைத் தனியாகச் சிறப்பு வழிபாடு செய் கிறோம்.

அக்கினி தூய்மையின் வடிவம். அது எல்லா அழுக்குகளையும் எரித்துப் பொசுக்கி விடுகிறது. அது எல்லா சக்தி களுக்கும் ஆதாரமாக அமைந்து இருக் கிறது. சூடு இல்லை என்றால் உலகமோ, அதில் உள்ள பொருட்களோ இயங்க முடி யாது. அது தன்னுடைய தனித் தன்மை யான ஒளி, சூடு இரண்டையும் கைவிடு வதும் இல்லை. அக்கினி பிறவற்றுடன் சேரு வதில்லை. அப்படிச் சேர்ந்தால் அவை அக்கினியில் ஐக்கியம் ஆகிவிடுகின்றன. இப்படித் தனிச்சிறப்புக் கொண்ட அக்கினியை நாம் தெய்வத்தின் அடிப்படையாகக் கருது கின்றோம்.

தேவதைகளுக்கு அர்ப்பணமாகச் செய்பவைகளை எடுத்துச்செல்லும் சாதன மாக அக்கினியைக் கருதி அதையும் வழி படுகின்றோம்.

நமது இந்து மதச் சடங்குகளில் முக்கியமாக இடம்பெறுவது அக்கினி. அக்கினியை வழிபடுவதற்குத் தனியான முக்கியத்துவம் உண்டு. உலகத்தின் உண் மையை நாம் உணர ஓர் அடையாளத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது அக்கினி யாகும். இந்தத் தூய்மையான அடையாளத் தைக் கொண்டு நாம் பார்க்கமுடியாத பரம் பொருளை உணர முடியும் என்று நமது இந்துமதம் கூறுகிறது.

அக்கினியை ஹோமத்தில் வளர்த்து அதன்மூலம் தெய்வத்தை வழிபடுவது இந்து மதத்துக்கே உரிய ஒரு தனிச்சிறப் பாகும்.

## ஹோமம்

ஹோமங்கள் பொதுவாக இரண்டு வகைப்படும். முதலாவது ஆத்மார்த்த ஹோமம். இரண்டாவது காம்யார்த்த ஹோமம். ஆத்மார்த்த ஹோமம், தன் னுடைய பக்தியை வெளிப்படுத்தி இறை வனுக்கு அக்கினி மூலமாக சமர்ப்பிக்கும் ஹோமமே ஆகும். காம்யார்த்த ஹோமம் என்பது குறிப்பிட்ட காரிய அனுகூலத்தை பெறச் செய்யப்படும் ஹோமமாகும்.

இந்த ஹோமங்கள்மூலம் பலவித மான கஷ்டங்களை நீக்கலாம். அதாவது காரியத்தடை அகல நிறைவான செல்வம் பெற, உடல் ஆரோக்கியம் பெற, நீண்ட ஆயுளைப் பெற இன்னும் பல கஷ்டங் களை நீக்கலாம்.

உலக நலனுக்காகவும், இவ்வுலகத் தில் வாழ்கின்ற மக்களின் நல்ல வாழ்விற் காகவும் செய்யப்படுவதுதான் ஹோமம். ஹோமத்தில் இடப்படும் மூலிகைகளோ, திரவியங்களோ, பட்டு போன்ற வஸ்துக் களோ கௌரவத்திற்காகவோ சுயநலத்திற் காகவோ செய்யப்படுவதில்லை. பக்தர் களுடைய ஆயுள்விருத்தி, ஆரோக்கியம் போன்றவைகளுக்காகப் பொது நலமுடன் செய்வதாகும். ஹோமப்புகை உடலிலுள்ள

**கடந்துபோன நேரம் ஒருபோதும் திரும்பி வருவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்களைக் குணப்படுத்தும். ஆம் இது விஞ்ஞானபூர்வமான உண்மை.

ஹோமம் செய்யப்படும்போது அங்கே சொல்லப்படும் மந்திரத்தின் ஒலி பரப்பும், புகை நோய்களை நீக்கவல்லது. இதை மேலைநாட்டு விஞ்ஞானிகளே ஆராய்ச் சிகளின் மூலம் உணர்ந்திருக்கிறார்கள். அதேபோல் ஹோமம் குண்டத்திலிருந்து பிரசாதமாகக் கிடைக்கும் ஹோம விபூதி நோய்களைத் தீர்க்கும்.

ஹோமம் என்பது சாதாரண நெருப் பல்ல, இயற்கையில் உள்ள விஞ்ஞானவழி வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு அது உரு வாக்கப்படுகிறது. விதிப்படி அதைத் தயார் செய்ய குறிப்பிட்ட பொருட்களை உப யோகிக்க வேண்டும். பிறகு அதிலிருந்து சக்தியைப் பெற குறிக்கப்பட்ட மந்திரங் களை உச்சரிக்க வேண்டும். (சொல்ல வேண்டும்)

ஹோமங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறியதும் எளியதுமான ஒன்று அக்கினி ஹோத்ரம் நிகழ்த்தின இடத்தில் பெற்ற சாம்பல்மூலம் சரும நோய்கள், மூச்சு வியா திகள், இதயப் பாதிப்புகள், தொண்டை வியாதிகள், சூதக நோய்கள் ஆகிய யாவும் குணப்படுத்தலாம் என மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல மருத்துவ நிபுணர் மோனிக்கா ஜெஹரே கூறியிருக்கிறார்.

ஹோம நெருப்பின்மூலம் உடலில் எதிர்ப்புத் திறன் அதிகரித்திருக்கிறது. மனம் அமைதிப்படுவதால் இதயத்தின் பண்பும், துடிப்பும் மேம்படுகின்றன. வியாதிகளால் வரும் பாதிப்பு குறைகிறது. மனதைத் தூய்மைப்படுத்தித் தன்னம்பிக்கையையும் செயற்திறனையும் வளப்படுத்தவும் இது உதவுகிறது. அக்கினியின்மூலம் வான மண்டலத்தையும், தூய்மைப்படுத்துகிறார் கள். அதனால் இயற்கையின் இயக்கத்துக்கு ஏற்ற அளவில் மனமும் இயங்கி, நெகிழ்ந்து படிந்து அமைதியைப் பெறுகிறது. இது ஒரு மிகச்சிறந்த மனோ தத்துவச் சிகிச்சை முறையாகும்.

உடல் நோய்களையும், மனோவியா திகளையும் ஹோமங்களின்மூலம் நீக்க முடியும் என்பது நாம் இன்று கண்டுபிடித் துள்ள உண்மை. இதை அன்றே வேதங் களை உருவாக்கிய மகரிஷிகள் கூறி இருக் கிறார்கள்.






உழைக்கும் மனிதனே உயிர்வாழும் உரிமை உடையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# சைவசித்தாந்தம்

– திரு இரா. சாந்தன் அவர்கள் –

## ஆன்மா

சைவசித்தாந்தப்படி ஆன்மா பகுக்கப்படக்கூடாத தனிப்பொருள் ஆகும். அதற்கு இச்சை, ஞானம், கிரியை என்று மூன்று சக்திகளுமே உண்டு. அது வினைகளைச் செய்வதற்கு வேண்டிய சக்தியும் உபகரணங்களும் அதனில் வேறாய் மாயையிலிருந்து வருவன. ஆன்மா ஒரு வெற்று நீராவி இயந்திரத்தைப் போல்வது. அதற்கு நீராவியும் சக்கரங்களும் ஏற்கப் பட்டால்தான் அது இயங்கும். அதன் சக்திகளை ஆணவம் தடுத்துக் கொண்டிருக்கிறது. பஞ்சகிருத்தியத்தின் நோக்கம் அத்தடைகளை நீக்கி ஆன்மாவுக்கு முற்றறிவையும், முழு வலிமையையும் கொடுப்பதே. ஆன்மாவுடைய முயற்சிகள் அதற்குக் கிடைக்கும் உடம்பைப் பொறுத்தன. மிருக உடம்பிலும் பார்க்க மானிட தேகத்தில் அதன் முயற்சிகள் மிகப்பல. மரவுடம்பினுள் அதன் முயற்சிகள் மிகச் சில.

மனிதனுக்கு இரண்டு முக்கிய நாட்டமுண்டு. ஒன்று சீவனோபாயம், மற்றயது செம்பொருள்களையடைதல். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு செம்பொருள் உண்டு. சிலருக்கு நல்லவை பொருந்திய உணவே செம்பொருளாகும். சிலருக்கு நல்ல உடைகள் நல்ல காட்சிகள். சிலர் இவை ஒவ்வொன்றையும் பொருளென்று கொள்ளாது மற்றவர்களுக்குத் தொண்டு செய்வதையும் உயர்ந்த கல்விப் பயிற்சியையும் செம்பொருளெனக் கொள்வார்கள். ஒவ்வொருவரும் தான் விரும்பியதை தேட முயல்வர். இம்முயற்சியில் மக்கள் பொதுவாக உலகத்தால் அங்கீகரிக்கப்பட்டவற்றைச் செய்வர். அல்லது அவற்றிற்கு விரோதமாகச் செய்வார். முந்தியவை நற்செயல்கள், பிந்தியவை தீய செயல்கள். ஒவ்வொரு செயலின் இயல்பும் அதனோடு தொடர்புள்ள பிறபலவற்றால் தீர மானிக்கப்படும். உதாரணமாக ஒருவன் மற்றொருவனுடைய மணிக்கூட்டைக் களவாடுகின்றான். இதற்குத் துணையான காரியம் மணிக்கூடிருந்தமையும், களவாடுதலில் அவனுக்குள்ள திறமையும். உண்மைகளை உணரவிடாமல் ஆணவம் தடுப்பதால்த்தான் அவன் களவாடுகிறான். ஆகவே, களவாடுதலைத் தீர்மானிக்கும் இரு துணைப் பொருள்கள் ஆணவமும், மாயையுமே. இவ்விரண்டும் ஓர் குறித்த விதமாகக் கலக்கும்போதெல்லாம் அவற்றின் பேறு ஒன்றேயாதல் வேண்டும்.

ஆகவே ஆன்மா தன்னால் தடுக்கச் சக்தியற்றதாய் பிழையைச் செய்கின்றது. ஒருவன் ஒருவிதமாக ஒரு கருமத்தைச் செய்தான் என்றால் வேறுவிதமாகச் செய்ய அவனுக்கு முடிந்திராது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அவன் நன்மை செய்வதும், அவனுடைய குணத்தால், அவன் தீமை செய்வதும், அவனுடைய குற்றத்தால். ஆகவே முந்தியவனை ஒரு பரிசுத்தனென்றும் நாம் கூறக்கூடாது. அவர்களை ஊக்கிவிடுதற்காக அல்லது திருத்துதற்காகக் கூறலாமன்றி, பழிப்பாக எவரையேனும் போக்கிரி அல்லது சண்டாளனென்றும் கூறக்கூடாது. சுகாதார விதிகளை மீறி நோய்வாய்ப்பட்ட ஒருவர்மீது எவ்வளவு தயைகாட்டி நடப்போமோ, அவ்வாறே ஒழுக்

**அழகிய மலர்கள் வயலோரத்தில் நீண்டகாலம் நிலைத்திருக்காது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தை மீறி நடந்தவர்கள்மீதும் தயவாக நடக்கவேண்டும். ஒருவர் பிழைசெய்து விட்டால் ஏன் அப்படிச் செய்தார் என்பதை ஊகித்து அறியவேண்டும். அறிந்து அதற்குக் காரணமாயிருந்த ஆணவத்திற்கு அல்லது மாயைக்குத் தக்க வைத்தியம் செய்ய வேண்டும். சைவசித்தாந்தம் இறைவனை வைத்தியநாதன் என்ற அரிய பெயரிட்டழைக்கின்றது. அவர் எமது பிழைகளுக்காக இரங்கி வைத்தியம் செய்வாரன்றி, எம்மைக் கடிந்து தண்டிக்கமாட்டாரென்பது பொருள்.

நற்செயல் என்பது ஆன்மாக்களுக்கு உறுதி பயப்பது. அதாவது நிலையான நன்மையைச் செய்வது, தீச் செயலென்பது ஆன்மாக்களுக்கு நிலையான தீமையைச் செய்வது. மனிதன் எல்லாச் செயல்களையும் ஊக்கிவிடப்பட்டபடியே செய்பவனாதலால் தானாகவே பிழை செய்யமாட்டான். இனி தர்மசாஸ்திரங்கள் நற்செயல்கள் யாவை - தீச் செயல்கள் யாவை என்று வகுத்து கூறியிருக்கின்றன. அவை ஒவ்வோர் படியிலுள்ளவர்களுக்கும் அவ்வப் படிக்கிசைந்த விதிகளை வகுத்துக்கூறும். உதாரணமாக அதிகங்குறைந்த நிலையில் உள்ள மனிதர்களுக்கு மிருகங்களைக் கொன்று தின்பது விலக்கப்படவில்லை. ஆனால் ஒரு சந்நியாசிக்கு சுவாமி காரியத்துக்குத் தானும் ஒரு பூவைப் பறித்தலும் விலக்கப்பட்டிருக்கின்றது.

தீவினைகளால் துன்பம் வரும் அது போலவே நல்வினைகளாலின்பமும் வரும். இதைக் கர்மவிதி என்பார்கள். கர்மம் தானாகவே பலனை நுகர்விக்கும் என்பது ஒரு கொள்கை கழிந்து போன கர்மத்துக்குப் பலனினிமேல் வருதல் சாலாது. ஆனபடியால் கடவுளே நுகர்விப்பாரென்பது மற்றொரு கொள்கை. பிந்தியதே சைவக் கொள்கை. சைவசமயம் குறிக்கும் பேறுகள் இரண்டு. ஒன்று ஆணவத்தினின்று விடப்படுதல் (வீடடைதல்) மற்றது கடவுளோடொன்றாதல். சைவசமயத்தில் பலகிளைகளை உடைய ஒரே மார்க்கமே இந்தப் பேற்றையடைவதற்குரிய விதியாகும். ஒவ்வோர்க் கிளையும் ஓர் சமயமாகும். சைவசமயமே கடைசிப்படி. இது ஆன்மா பசுவினை ஒப்புப் பெற்றுச் சிவபெருமானையடைவதற்கு விரும்பும் நிலை. இந்நிலையில் ஆன்மா கடவுள் தியானத்தையும், கடவுள் பற்றையும், கடவுளோடு கலத்தலையும் விரும்பும். அன்றியும் ஆன்மாவுக்கு எல்லாம் சிவரூபமாகவே தோன்றும். எல்லா உடம்புகளும் சிவனுறையும் ஆலயங்களாகவே தோன்றும். இம்மார்க்கம் நான்கு படிகளாக பகுக்கப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சரியா மார்க்கத்தில் ஆன்மா தன்னைக் கடவுளின் அடிமையாக எண்ணி வழிபடுகின்றது. கடவுளை நாடிச்செல்லும்போது அங்ஙனம் செலுத்துதற்குத் துணைகளாக விபூதி, உருத்திராக்கம், அருட்பாக்கள் முதலிய சாதனங்களை ஆன்மா உபயோகிக்கலாம். கிரியாமார்க்கத்தில் சிவபூசையால் ஆன்மா சித்தத்தைச் சுத்தி செய்து இறைவனுக்கு அன்பு செய்யும். இது புத்திர மார்க்கம் எனப்படும். யோகமார்க்கத்தில் புலன்கள் சேட்டிப்பின்றி யோகத்தடங்கி சிவத்தியானம் செய்யும். இது சகமார்க்கம் எனவும் கூறப்படும். ஞானமார்க்கம், சன்மார்க்கம் என்றும் அழைக்கப்படும். இதுவே உண்மையான நிலை. இந்நிலையில் ஆன்மா சிவத்தோடு ஒன்றாகின்றது. இதனை மாணிக்கவாசக சுவாமிகள், "சிவமாக்கி யெனையாண்ட அத்தன்" எனப் பாடியருளினார். சைவசித்தாந்த கொள்கைகள் இவைகளாம். சைவ சமயத்தவர் எல்லா உயிர்களையும் சிவமென்று பாவிப்பர். சீவன் சிவனென்பவர். திரிகரண சுத்தி உள்ளவர்கள் சைவ சமயத்தை அடைவதற்கு விரும்புவதும், முயலுவதுமே எங்கள் பரம நோக்கமாதல் வேண்டும். *(முற்றும்)*

**செயலற்ற தன்மை உன்னை மாற்றாது செயற்படும் வேகமே மாற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயணம் காட்டும் ஆடவர்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

நாம் கம்பராமாயண காவியத்தை நினைவு கூரும்போது தசரதன் ராமன், லட்சுமணன், பரதன், சத்துருக்கினன், குகன், அனுமான், சுக்கிரீவன், வாலி, இராவணன், மாரீசன், கும்பகர்ணன், விபீசணன் எனப் பல கதாபாத்திரங்கள் தோன்றுகின்றனர். ஆனால் ராமகாதையின் பாத்திரமாக ஒருவன் வருகிறான். ஏழையான அவன் வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தில் எடுபிடிவேலைகள் செய்து வந்தவன். அங்கு குருகுலக் கல்விக்காக ராமனும் தம்பிமாரும் குலகுருவிடம் வந்தனர். அவர்களது ஊழியனாகவும் தோழனாகவும் இருந்த அனந்தன் எனும் பாத்திரம் பற்றி அனேகர் அறியார்.

ராமாயண காவியத்தில் வருகிற ஏனைய பாத்திரங்களின் வரலாறுகள் யாவரும் அறிந்த ஒன்றாகலில் அவற்றை விடுத்து அனைவராலும் அறியப்படாத அனந்தனது சரிதையை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குலகுருவாய வசிட்டரின் ஆச்சிரமத்துப் பணியாளனாகப் பரம ஏழையான அனந்தன் நியமிக்கப்பட்டிருந்தான். வேலையோடு மாதமொருமுறை வனத்திடையேகித் தர்ப்பைப் புல் பறித்து வருவதும் கட்டாய கடமையாகவும் இருந்தது. அத்தருணத்திலேயே அங்கு வித்தை பயின்ற ராகவ சகோதரர்களின் அன்புக்கும் தோழமைக்கும் அனந்தன் ஆட்பட்டான். இராமன் படிப்பதற்கு ஏடுகளை எடுத்து வைத்தல், எழுத்தாணியைக் கூராக்கல், வில்லினைத் துடைத்தல், அம்புகளைத் தெரிந்தெடுத்து வைத்தல், உணவு பரிமாறுதல் ஆகிய பணிகளையும் அனந்தன் பெருவிருப்போடு செய்து வந்தான்.

ஒருமுறை அனந்தன் தர்ப்பைப் புல் பறிக்கும் கடமைக்காகக் காட்டுக்கேகி இருந்தான். அப்போது ராம சகோதரர்களின் பயிற்சி முடிந்து குலகுருவாய வசிட்டரிடம் ஆசியும் விடையும் பெற்றுக்கொண்டு அயோத்தியை அடைந்தனர். காட்டில் இருந்து தர்ப்பைப் புல்லுடன் வந்த அனந்தன் விபரமறிந்து தாங்கமுடியாத துயரமடைந்தான். எப்படியாவது ராமனைக் காண வேண்டுமெனும் பேராசையினால் ஆச்சிரமத்தை விட்டு அயோத்திக்கு ஓடினான். அங்கு அனந்தன் ராம லட்சுமணர்களை வேள்வி காக்கும்பொருட்டு விசுவாமித்திர முனிவர் கூட்டிச் சென்றதனால் அதிர்ச்சியும் ஆத்திரமுமான செய்தி கிடைக்கப் பருவமறியாத பிஞ்சுக் குழந்தைகளைக் கூட்டிச் சென்ற முனிவரையும் அனுப்பிய தசரதனையும் மனதாரத் திட்டியபடி பாவம் சிறிசுகள். காட்டிலே உணவூட்டுவார் யார்? சேவை செய்வார் யார்? கொடிய அரக்கரிடம் அகப்பட்டால் காப்பாற்றுவார் யார்? எவ்வாறேனும் குழந்தைகளைக் காப்பாற்றியே ஆக வேண்டும் என்ற வைராக்கிய மனத்தனாய் ராமனைக் காணவேண்டும் என்ற ஆசையால் ராமா! ராமா! என்று அலறியபடி காடு மேடெல்லாம் தேடி அலைந்து திரிந்தவன் இறுதியாக யாரும் புகமுடியாத நடுக்காட்டில் நுழைந்து வெளியேற முடியாது அங்கேயே தங்கி ராமநாமம் சொல்லியபடி தவமியற்றலானான். நாளடைவில் அனந்தனை மூடி மண் புதர் வளர்ந்தது. ஆண்டுகளும் பல கடந்தன.

**சிறு குடும்பமானால், வேண்டியவை விரைவில் கிடைக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் விசுவாமித்திர முனிவருடன் சென்ற இராமனும் இளவலும் அடைந்தவை அனைத்தும் யாவருமறிவர். ராவண வதம் முடித்துச் சீதையை மீட்டு அயோத்தி நகரம் வந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு மணிமகுடம் சூட்டுவிழாவுக்கான ஏற்பாடுகள் விமரிசையாக நடைபெற்று வருகின்றன. விழா ஏற்பாடுகள் யாவும் குல குருவாகிய வஷிட்ட முனிவரதும் விசுவாமித்திர முனிவரதும் மேற்பார்வையில் அரங்கேறிக் கொண்டிருந்தன. நகர மக்கள் யாவரும் தத்தம் இல்லத்து விழாவாகக் கருதி ஆடிப் பாடி மகிழ்ந்து நகரெங்கும் அலங்கரித்தனர். வாழை, கமுகு, தோரண வளைவுகள் அமைத்தனர். மங்கல ஒலி எங்கும் முழங்கின. வான வேடிக்கைகளும் இடம்பெற்றன.

இராமச்சந்திர மூர்த்தியின் பட்டாபிஷேகச் செய்தி கேள்விப்பட்ட முனிவர்கள் பலர் ஒன்று சேர்ந்து ராம! ராம! என்று உச்சரித்தபடி காட்டுவழியாக வந்துகொண்டிருந்தனர். அவர்களது ராம நாம அதிர்வு எதிரொலிப்பதுபோல் அனந்தன் தவமிருந்த புதரில் ராமநாமம் ஒலிப்பது கேட்ட முனிவர்கள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர். அப்போது ராமநாம அதிர்வால் புற்றின் ஒருபுறம் உடைய அதனுள் வயது போன சடைமுடி தாடி மீசை யாவும் நரைத்த அனந்தன் தவம் கலைந்தான். முனிவர்கள் ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கவிருப்பதையும் அதற்காகவே தாம் செல்வதாகவும் கூறக்கேட்ட அனந்தன் புளகாங்கிதமடைந்து ராமனாம் தோழனைக் காணும் ஆவலில் ராமா! ராமா! எனக் கூவிக்கொண்டு அயோத்திநகர் நோக்கி ஓடினான்.

நகரிலே ஸ்ரீராமன் அதிகாலை மங்கல நீராடி பட்டாடை புனைந்து அணிகலன்கள் பூண்டு சூரிய நமஸ்காரம் செய்து அன்னையர் மூவரையும் வணங்கிக் கம்பீரமாக அரண்மனைக்கு வந்தான். அப்போது சபையோரும் காவலரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஆத்திரமும் அடையும் வகையில் உரத்த குரலில் கந்தல் உடையும் நரைத்த தலையும் குழி விழுந்த கண்களுமாக "அடே ராமா! இவ்வளவு நாள் எங்கிருந்தாயடா? உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமாடா? உனக்கு உணவு பரிமாறியோர் யாரடா?" என்று ராமனை நோக்கி அனந்தன் ஓடிவந்தான்.

அதுகண்ட சபையோர் "இதேதடா? சிவபூசையில் கரடி புகுந்ததுபோல பஞ்சப் பரதேசியான பைத்தியம் மணிமுடி சூடக் காத்து நிற்கும் ராகவ மூர்த்தியை அடே ராமா'' என்கிறானேயென்று அதிர்ச்சியடைந்து வெகுண்டெழுந்தோரும் காவலர்களும் வந்தவனை அடித்து விரட்டி வெளியேற்ற முற்பட்டனர்.

இதனிடையே அனந்தனாய தோழனது குரலடையாளம் கண்டு கொண்ட ராகவன் தான் பட்டுப்பீதாம்பர தாரியாய் நிற்பதையும் மறந்து மண்ணுடலும் கந்தலுடையும் பாராது கட்டியணைத்து நெஞ்சாரத் தழுவி அவனது கண்களில் இருந்து பெருகிய கண்ணீரைத் துடைத்து உன்னிடம் சொல்லிக்கொள்ளாமல் வந்த என்னை மன்னித்துவிடு அனந்தா; என்னைக் காணாது உன் மனம் எவ்வளவு தூரம் நொந்து துயரப்பட்டு அழுதிருக்கும் என்பதை நான் உணர்வேன். எனவே மீண்டும் உன்னிடம் மன்னிப்பு வேண்டுகிறேன்" என்று கூறுவது கேட்டு யாவரும் திடுக்குற்றனர். அத்தருணம் "என்னைப் போலவே எனது பிரபுவிடம் அன்பு செலுத்த இன்னொரு பக்தனும் இருக்கிறான்" என்று அனுமன் கண்ணீர் வடித்து நின்றான். யாவரும் இந்த அனாதைக்கும்

**தன்னம்பிக்கை பெரிய பிரயத்தனங்களுக்கு முதல் தேவை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமச்சந்திர மூர்த்திக்கும் இடையே உள்ள தொடர்பு யாதென ஆராயலாயினர்.

அப்போது குலகுருவாகிய வசிட்டர் ராமனை நோக்கி "இவன் யார்? ராமா" என்று கேட்டார். அதற்கு ராமச்சந்திரன் "குருதேவா! இவனைத் தெரியவில்லையா? எனது பள்ளித் தோழன். தாங்கள் நடத்திய குருகுலத்தின் ஆச்சிரமப் பணியாளனாக இருந்த ஏழைச் சிறுவனாய அனந்தன் என் றார். அதுகேட்ட வசிட்டர் அனந்தனைக் கட்டித்தழுவி ஆசீர்வதித்து நின்றார்.

குருதேவா! இவ்விடத்தில் எல் லோரும் "பிரபு" என்றும் "மகாராஜா" என்றும் அழைக்கிறார்கள். ஆனால் என்னை "அடே ராமா" என்றழைக்கத் தந்தையாகிய தசர தன் இல்லையே என்பதன் குறையைத் தீர்த்து அனந்தன் தந்தைக்கு நிகரானவன் ஆகிவிட்டான். எனக்காகத் தவமிருந்து எனது பெயரையே உச்சரித்து வாழ்வின் இறுதியிலாவது யான் செய்த பூர்வ புண் ணியப் பயன் காரணமாக அன்பு பாராட்டி வந்தவனுக்குக் கௌரவ மரியாதை வழங் கும் கடப்பாடுடையேன்.

கிருஷ்ண அவதாரத்தில் சாந்தீப முனிவரிடம் சுதாமாவும் கண்ணனும் குரு குல வாசம் செய்து கல்விகற்றவர்கள். முடி வில் கண்ணன் துவாரகையின் அதிபதி யாகவும் சுதாமா குடும்பச்சுமை தாங்கமுடி யாத வறியவராகவும் குசேலர் எனும் பெயரில் நடமாடுகிறார். கந்தல் உடையில் கட்டிப்போன அவலை உண்டு கண்ணன் குசேலரைக் குபேரன் ஆக்குகிறார். ஆனால் அனந்தனுக்கு அது பொருத்தமற்றது மாத் திரமற்றதோடு தேவையற்றதுமாகும். ஏனெ னில் அனந்தன் வாழ்வின் எல்லை கடந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான். என்னை ஒருமுறையாவது கண்டுவிட வேண்டும் என்ற ஆசையில் நெடுங்காலம் தவம் இருந்தவன் அனந்தனைக் காணக் கிடைத்தது பேரதிஷ் டம். பெரும் பாக்கியம் ஆகவே அதற்கேற்ற தான கௌரவம் யாதெனக் கூறும்படி அருகு நின்ற அனுமனை நோக்கி ராமன் கேட்டான். அது கேட்ட அனுமன் "மகாபிரபுவே! இவர் தங்கள் தந்தைக்கு நிகரானவர்" என்று கூறினீர்கள். எனவே தாங்கள் சிம்மாசனத் தமருமுன் இவரை அதில் இருத்தி ஒரு தகப்பனாருக்குச் செய்யும் மரியாதையைச் செய்து கௌரவிப்பது இவருக்கு மாத்திர மன்றி நம்மனைவருக்கும் பெருமை தருவ தாகும்" என்றான். அனுமன் கூறியதைச் சபையில் கூடியிருந்த அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக்கொண்டனர்.

இவ்வளவு பெரிய கௌரவத்துக்கும் மரியாதைக்கும் நான் தகுதியானவன் இல்லை என்று கூனிக்குறுகிய அனந்தனை அரியணைமீது வலுக்கட்டாயமாக அமர்த்தி வேண்டாம்; வேண்டாம் என்று கதறப் பாத பூசை செய்து மாலையணிந்து மரியாதை செய்த பின்பு ராமன் மணிமுடி சூடிக் கொண் டான். பின்பு யாவருக்கும் தான தர்மம் செய்து ஆசிபெற்றான்.

ராமாவதாரத்தில் ராமபிரானது அன் பினால் கட்டுண்டு பேரானந்தம் பெற்ற அனந் தனே அடுத்த கிருஷ்ண அவதாரத்தில் குசேலராக வந்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாழ்"

"அவதார மகிமையே மகிமை"

"ராமக் கிருஷ்ணாய நமக"

பணம் பேசத் தொடங்கினால் உலகம் வாயை மூடிக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

அங்கே உயரமான செங்குத்தான படிகளில் ஏறவேண்டிய நிலை தென்பட்டது. தூரத்தில் இருந்து பார்த்தபொழுது செங்குத்தான ஏற்றம் தெரியவில்லை. அடியில் நின்று மேலே பார்க்க வீட்டுக்காரரும் ஏனையோரும் பயப்படுத்திய வார்த்தைகள் நெஞ்சை நெருடின. வந்துவிட்டேன் தொடரவேண்டிய கட்டாயநிலை ஏனையவரோடு பகிரவும் மனம் இடம்தரவில்லை. மீண்டும் முருகனையே அழைக்கவேண்டியிருந்தது. முருகா முருகா என அழைத்தவாறு மேலேயும் பார்க்கவில்லை கீழேயும் பார்க்கவில்லை ஏறும் படிக்கட்டு களிலேயே கவனம் வைத்து ஏறிவிட்டேன். அப்பாடா சற்றுப் பயம் தெளிந்தது. இப்பொழுது கீழே பார்க்கப் பயமாக இருந்தது. மேலே பார்க்கப் பெரிதான செங்குத்தான அமைப்புக்கள் ஒன்றும் தெரியவில்லை. சாதாரணமாக மலையில் ஏறுவதுபோல ஏறிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது நாங்கள் குழு குழுவாகப் பிரிந்து விட்டதை உணரமுடிந்தது. விரைவான இளசுகள் எல்லாம் அண்ணாந்து பார்க்கும் தூரத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள். பழசுகளும் சில இளசுகளும் சாமியுடன் நிற்கிறார்கள். அந்த முதிய பாட்டியும் சற்று நடக்க முடியாதவர்களும் எங்களுக்குக் கீழே வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் முருகா முருகா என்று கோஷமிட்டவாறே ஏறிக்கொண்டிருந்தனர். கொண்டு செல்கின்ற கைப்பைகளையும் நிவேதனப் பொருட்களையும் கவருவதற்காக



செல்வன் சொல்லுக்கு அஞ்சான், வீரன் போருக்கு அஞ்சான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திக்கூட்டங்களும் பாய்ந்து பாய்ந்து எம்மைத் தொடர்ந்தவண்ணம் இருந்தன. சிலர் கையில் அகப்பட்ட தடிகளை எடுத்து விரட்டிக்கொண்டிருந்தனர். தனியாக வந்தால் குரங்குக் கூட்டத்திடமிருந்து தப்ப முடியாது போலிருக்கிறது. அவ்வளவு தொல்லை நிறைந்ததாகக் குரங்குகளின் அட்டகாசம் இருந்தது.

காலை இளம்பொழுது ஆனபடியாலும் மலைச்சூழல் என்றபடியாலும் எந்தவிதக் களைப்பும் தெரியவில்லை. ஒரு சிறு தண்ணீர் போத்தலையும் தாளத்தையும் எப்பொழுதும் என்னுடனேயே எடுத்துச் செல்வது வழக்கம். அந்தவகையில் தண்ணி குடிக்கட்டுமோ என்று எண்ணிய என் மனம் இல்லை முருகனைத் தரிசித்து அதன் பூசைகளைப் பார்த்த பின்னரே குடிப்பது என்று எண்ணி ஒரு சிறு வைராக்கியத்துடன் ஏறத் தொடங்கினேன். அப்பால் ஒரு இடத்தில் ஏறியதிலும் பார்க்க சற்றுக் குறைந்த செங்குத்தான படி ஏற்றம் வந்தது. அதனையும் கடந்து மிக இலகுவாகச் சென்று கொண்டிருக்கிறோம். எம்முன்னே சென்றவர்கள் கதிரமலையானுக்கு அரோகரா எனக் கோஷமெழுப்பினர். அப்பொழுதுதான் அந்த மலை உச்சியில் அமைந்த ஆலயம் தெரிந்தது. ஆம் எம் முன்னோர்கள் அன்று விரதமிருந்து ஆசாரத்துடன் அவன் அருள் இல்லை என்றால் அவனிடம் வரவே முடியாது என்று எண்ணிய அப்பொழுதைய சூழலைக் கொண்டதாகக் கதிரமலையானின் மலைஏற்றம் இன்று இல்லை என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். கடினமான ஏற்றங்களில் கம்பிக் குழாய்களினால் அமைக்கப்பட்ட பிடித்து ஏற இறங்க வசதியான கிறாதி அமைப்புக்களுடன் கருங்கல் சீமெந்திலான படிக்கட்டுக்களும் வசதியாக அமைக்கப்பட்டுள்ளன. நடமாடும் தகுதி உள்ள அனைவரும் வாருங்கள். அவன் அருளைப் பெறுங்கள். வீணான கற்பனைப் பயத்தைக் கொள்ளாதீர்கள். நம்பிக்கை ஒன்றே வாழ்க்கை அல்லவா!

ஆலய வாசலை அடைந்துவிட்டோம். காலை 6.00 மணிக்கு ஏறத்தொடங்கிய நான் 7.15 மணிக்கு வாசலில் நிற்கிறேன். எம்மிலும் பார்க்க முந்திச் சிலர் வந்திருந்தனர். நான் நினைக்கின்றேன் சராசரியாக மலை ஏற்றத்திற்கு ஒருவருக்கு 45-50 நிமிடங்கள் காணும். அங்கே ஓர் விசாலமான மண்டபம் மூலவர் முருகன் அருகில் பிள்ளையார் படங்கள்தான். பித்தளை விளக்குகள் மிக அலங்காரமாகத் தங்கம்போல பளபளக்க அதன் தீப ஒளி எம்மை ஓர் பக்திச்சூழலுக்கு இட்டுச் சென்றது. எனது யோசனை, இதுதான் கதிரமலை முருகன் மூலஸ்தானம் என்று. இல்லை இல்லை வேலவன் அங்கு இருக்கிறான் என்று ஒரு அடியவர் உரைத்தார். பாருங்கள் அவரின் கூற்று "வேலவன் அங்கு" இருக்கிறான். அந்த இடத்திலிருந்து சற்றுமேல். அந்தப் பிரகாரத்தைத் தரிசித்தபின் படிக்கட்டுகளூடாக ஏறி மேலே சென்றால் மிகப் பிரமாண்டமான ஓர் டகோபா. ஆம் வெள்ளை வெளேரென்ற பௌத்த விகாரை எம்மை வரவேற்றது. அதனையும் தொழுது செல்ல அதன் பின்னே ஏறக்குறைய 1சதுர கிலோமீற்றர் இருக்கும் என நினைக்கிறேன் சமதரைப்பாறை டகோபாவின் பின்புறத்தில் ஒரு 3-4 அடி உயரத்தில் சீமெந்தினால் அமைக்கப்பட்ட சதுர வடிவப் பீடத்தின்மேல் ஓர் பெரிய வேல்..... ஆம் இவன்தான் நாம் நாடித் தேடித்தொழும் தெய்வம். அந்தக் கதிரமலையான், உச்சிமலையான்.

கதிர்வேலன், கதிர்காமக்கந்தன். அவனைக்கண்ட அந்தக் கணங்கள்.....

எவனைக் காணாது இந்த அறுபத்துமூன்று வருடங்களையும் ஓட்டினேனோ அவனைத் தரிசிக்கின்ற ஓர் அற்புதக் கணங்கள்..... அதனை எப்படி எழுதுவது என வார்த்தைகளைத் தேடுகின்றேன். உண்மையில் அந்தக் கணங்களில் இந்த உலகையே மறந்திருந்தேன்

**இரக்கமில்லாதவன் நெஞ்சம் இரும்பினும் கொடிது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைச் சூழ நின்றவர்கள் எவரையுமே காணவில்லை. கண்களை மூடியபடி முருகா முருகா என்று ஒரு சில நிமிடங்கள் அவன் அழகில் அருளில் திளைத்தேன். அவ்வளவுதான் பின் கண் விழித்தபொழுது சுவாமிகளும் ஏனையோரும் அவல் குழைப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அவல் குழைப்பதற்கு வேண்டிய அனைத்துச் சாமான்களையும் வாகனத் தின்மூலம் வந்த அடியார்கள் கொண்டு வந்திருந்தனர். மழை வரும்போலிருந்தது. ஆனால் மழையே இல்லை. மாறாகக் காற்றின் வேகம் மிகவும் மோசமாக இருந்ததைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். அவல் குழைப்பதற்கு இடைஞ்சலாக மணலை வாரிக்கொட்டிக் கொண்டிருந் தது. குரங்குகளின் அட்டகாசம் சற்றுக் கவனக் குறைவாக இருந்தால் தட்டங்கள் உட்பட அனைத்துப் பொருட்களையும் அபகரித்துவிடும் போலிருந்தது. வந்த இளைஞர் கூட்டம் அவற்றை விரட்டிக்கொண்டிருந்தனர். நாங்கள் தேங்காய்களைத் துருவி ஆயத்தமாகிக் கொண்டிருக்க சுவாமிகள் வேற் பெருமான் அமர்ந்துள்ள மேடையைக் கழுவிச் சுத்தமாக்கிப் படைப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அவரே சகல பூசைக் கிரியைகளையும் செய்தார். எம்போன்ற சிலர் உதவியாக இருந்தோம்.



இதை எழுதும்பொழுது ஒரு உணர்வு தட்டுகிறது. அதை நிச்சயம் எம் வருங்காலச் சந்ததிக்காகவும் எங்கள் சைவ உலகிற்காகவும் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒன்று கந்தன் உணர்த்துகின்றான் போலும். எங்கள் ஞானப்பொக்கிஷம் வருங்காலச் சந்ததி யினருக்கு ஆவணமாகத் திகழும் ஈழத்தின் முத்தெனும் தனி ஆன்மீக இதழான ஞானச்சுடரில் தெய்வம் பொறுக்குமா? மழை பெய்யுமா? சாந்தி நிலைக்குமா? என்று ஐயா அவர்கள் எம் வருங்காலச் சந்ததிக்காகச் சைவர்களுக்காக சைவத்தைக் காப்பதற் காகக் குமுறிய கட்டுரையில்..... (தொடரும்...

**இரக்கமில்லாதவன் நெஞ்சம் இருப்பினும் கொடிது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

**01) ஆன்மீக அருளாளர்கள்:**

உலகப் பெரும் மதங்களில் ஒன்றாகவும், உலகில் தோன்றிய முதல் சமயமாகவும் காணப்படுகின்ற சனாதன தர்மமாகிய இந்து சமயத்தில் காலத்துக்குக் காலம் பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள் எனப் பலர்தோன்றி எமது சமயத்தின் பெருமையினை உலகறியச் செய்தார்கள். நாயன்மார்கள், ஆழ்வார்கள், வடநாட்டு பக்திநெறியாளர்கள் போன்றோர் பக்தர்களாகவும், சங்கரர், இராமானுஜர், மத்துவர் மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், உமாபதி சிவாச்சாரியார் போன்றோர் தத்துவ ஞானிகளாகவும், பதினெண் சித்தர்கள், நவநாதச் சித்தர்கள், ஈழத்துச் சித்தர்கள் போன்றோர் சித்த புருஷர்களாகவும் திகழ்ந்தார்கள்.

"பக்தர்கள், சித்தர்கள் ஆகிய இருவரும் இறை உணர்வோடு வாழ்பவர்களே ஆயினும் இருவருக்கும் இடையே நுண்ணிய வேறுபாடு உண்டு. "கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் என்றும், கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கலைக்களஞ்சியக் கட்டுரைத் தொகுதியில் குறிப்பிட்டுள்ளார்"1

(1)(கலைக்களஞ்சியத் தொகுதி 4, பக்.643)

**02) பக்தர்கள்:**

பக்தி என்பது ஆன்மா, இறைவன் என்ற இரண்டிலும் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே ஆகும். பக்தியே உண்மைச் சமயத்தின் உயிர் நாடியாகத் திகழ்கிறது. இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தி எனப்படும். ஆன்மாவிற்கும், இறைவனுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பக்தி ஆகும். பக்தர் என்பவர் சமய உணர்வோடு வாழ்பவர்; குறிப்பிட்ட தெய்வ வணக்கம் உடையவர் கோயில் தோறும் சென்று உள்ளம் உருகி இறைவனைப் பாடிப் பணிபவர்; சமய சின்னங்களை அணிபவர். பக்தி செய்வது என்பது மனித நேயத்துடன் உடலாலும், வாக்காலும், மனத்தாலும் இறைத் தொண்டு மேற்கொள்வதும் இறைவனைப் பாடிப்பரவுதலும் ஆகும்.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத்தேடுவதும்
நின் அடியார் செய்கை பராபரமே"

எனத் தாயுமான சுவாமிகள் இந்த வழிபாட்டு நெறியினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"எதிர்பார்ப்பு இல்லா அன்பே பக்தி என்றும், பக்தியால் மேன்மை வரும்; சிறுமை போகும், எளிமை, இனிமை என்பன இயல்பாய் வரும். ஆறுகள் எல்லாம் கடலை நோக்கி ஓடுவதுபோல ஆருயிர்கள் அனைத்தும் இறைவனை நோக்கித் திரும்புவதற்கு பக்தி மார்க்கம் துணை செய்யும்"2

(2) முத்துக்குமார சுவாமி; ப, ஓங்கு புகழ் சைவநீதி, பக்-70)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03) ஞானிகள்:**

இறைவனைச் சென்று அடைவதுதான் உயிர்களின் குறிக்கோள். பற்றுக்களில் இருந்து விடுபட்டவன் பந்தபாசங்களை அறுத்தெறிந்து பொய்த்தோற்றங்களைப் புறக்கணித்து மெய்ஞ்ஞானம் பெற்று இறைவன் அருகில் சென்று அடைகின்றான். இறைவனை அறிவாலறிந்து வழிபடும் நிலையே ஞானமாகும். இந்நிலையில் உயிரை இறைவனிடத்தில் அர்ப்பணித்தல் நிகழும். புறத்தொழில், அகத்தொழில் இரண்டுமன்றி அறிவுத் தொழிலால் அருவம், உருவம், அருஉருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளையும் கடந்த முழுமுதற் பொருளாய் நின்ற இறைவனிடத்தில் செய்யும் வழிபாடே ஞானம் ஆகும். தானம், தவம், மந்திரம், சாத்திரம், யோகம், ஒழுக்கம் ஆகிய யாவும் தன்னைத் தான் அறிகின்ற ஞானத்துக்கு ஒப்பாகாது. ஆனால் இவை ஞானத்தைப் பெறுவதற்கான படிநிலைகளாக அமைந்துள்ளன. ஞான நெறியில் நிற்பவர்கள் எங்கும் எதிலும் இறைவனையே காண்பார்கள். அவர்களின் அகத்திலும் புறத்திலும் தெய்வீக ஒளி பிரகாசிக்கும். உண்மையான அறிவாகிய ஞானத்தில் திளைத்தவர்களே சிறந்தவர்கள்.

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நல்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கவர் நரரின் மிக்காரே

-திருமந்திரம்.

ஞானயோகி செய்யும் எந்தச் செயலும் இறைவனின் செயலாகவே மாறி விடுகிறது. ஞானயோகிக்கு விருப்பு வெறுப்பு கிடையாது; இன்ப துன்பம் கிடையாது; பந்த பாசங்களோ ஆசா பாசங்களோ கிடையாது. ஞானயோகி ஒளியுள் ஒளியாகத் திகழ்வான்.

ஆன்மாவை அறிந்தவன் துன்பத்தைக் கடந்தவன் ஆகிறான். (தரதி சோகம் ஆத்மவித்) பிரமத்தை அறிந்தவன், பிரம்மம் ஆகிறான். (பிரம்மவித் பிரனமவ பவதி) எனப் பகவத்கீதை கூறுகிறது.

"ஆத்ம ஞானம் எப்போதும் இருப்பது. அதற்கு கடந்த காலமோ எதிர்காலமோ இல்லை. மேகம் காற்றினால் விலகும்போது சூரிய ஒளி வெளிப்படுகிறது. அதுபோல் அறியாமை விலகும்போது எப்போதுமுள்ள சுயம் ஜோதியான ஆன்மா வெளிப்படுகிறது.3

(3) சுவாமி துர்யானந்தர், தினம் ஒரு தியானம், பக்- 52)

**04) சித்தர்கள்:**

தமிழில் சித்து என்ற சொல் அருள் விளையாட்டு என்று பொருள்படும். சித்தர்கள் பெற்றுக்கொள்ளும் அனுபூதி ஞானம் மறைஞானம் என்று அழைக்கப்படும். ஆன்மா பரம்பொருளோடு இணைய எடுத்துக்கொள்ளும் முயற்சி அல்லது அம் முயற்சியில் பெறும் அனுபவம் மறைஞானம் எனப்படும். சித்து என்ற சொல் சித்தம் என்ற சொல்லிலிருந்து தோன்றியது. சித்து என்பது சித்தம், அறிவு, பூரணத்துவம், வெற்றியடைதல் முதலிய கருத்துக்களைக் குறிக்கும். சித்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக்கரணம் என்பர். இவற்றில் மனம் ஒன்றை நினைக்கும். புத்தி நிச்சயிக்கும்; அகங்காரம் முனைப்பைத் தோற்றுவிக்கும். சித்தம் இம் மூன்றுக்கும் காரணம் ஆகும். சித்தி என்ற சொல்லுக்குப் பேறு (நல்வாய்ப்பு) என்ற பொருளும் உண்டு. உலகம் என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தவரையே குறிப்பதுபோல பேறு என்பது இறை இணைவுப் பண்பாகிய விழுமிய வாய்ப்பினையே குறிக்கும் எனவாம். எனவே இப்பேற்றை அடைந்தவனைச் சித்தன் எனக் கூறலாம்.

"சிந்தையிலே களங்கமற்றவர் சித்தனாவார்"

-அகத்தியர்-

"சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்"
"சிந்தை தெளிந்திருப்பவர் ஆர் அவனே சித்தன்"

-வான்மிகி சூத்திரம்-

திரையற்ற நீரபோல சிந்தை தெளிந்த நிலை சித்தர்களின் நிலை. இந்நிலையில் சித்தமும் இல்லைச் செயலும் இல்லை. இதனை மோனநிலை என்றும் கூறலாம். இந்நிலையினைச் "செத்தார் நிலை" எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். மாயாகாரியப் பொருளாகிய பாசத்தின் தன்மையை உணர்ந்து, மூலமலமாகிய ஆணவத்தால் விளையும் மதமற்று, யான், எனது என்னும் செருக்கற்று அவை அனைத்தையும் அருள் நினைவால் மாற்றி அப்பேரறிவுப் பெருங்கருணைப் பொருளோடு இணையும் நிலை பெற்றவர் சிவ சித்தராவார் என்பதைத் "திதி முற்றவர்கள் சிவசித்தர் தாமே" எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

இவர்கள் மக்களுடைய நல்வாழ்விற்கும் மனித மனத்திற்கும் பல அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். பேய் போல் திரிந்து, பிணம்போல் கிடந்து இட்ட பிச்சையெல்லாம் நாய் போல் அருந்தி, நரிபோல உழன்று, நன் மங்கையரைத் தாய்போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மை சொல்லிச் சேய்போல் இருக்கும் சித்தர்கள் தமக்கெனத் தனிவழி வகுத்துக் கொண்டதோடு அமையாமல் தமிழ் மொழிக்கும் மக்கட் சமுதாயத்திற்கும் பல வகையில் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார்கள். பூரணத்துவமான அறிவைப் பெற்ற இவர்கள் மருத்துவம், சோதிடம், தத்துவம் சார்ந்த ஏராளமான நூல்களைத் தந்துள்ளார்கள்.

சித்தர்கள் சமுதாயத்தில் நிலவிய பல்வேறு கண்மூடிப் பழக்க வழக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும், பொருளற்ற செயல்களையும், போலிச் சடங்குகளையும் நெஞ்சுரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் கடுமையாகச் சாடியுள்ளனர். இவற்றை மேற்கொண்டு திரியும் மனிதர்களைக் குறித்துப் பித்தர்கள், பாவிகள், மூடர்கள், பேயர்கள், வம்பர்கள், வீணர்கள் எனக் கடுஞ்சினத்துடன் வசைபாடியுள்ளனர்.

**05) உடம்பின் முதன்மையை வலியுறுத்தும் சித்தர்:**

சித்தபுருஷர்களில் மூலவராகிய திருமூலர் உடம்பின் முக்கியத்துவத்தினை தனது பாடலின் ஊடாக வெளிப்படுத்துகின்றார். "காயமே இது பொய்" என்றும், "நீர்க்குமிழி ஆம் உடல்" என்றும் "ஊத்தைச் சடலம்" என்றும் உடம்பினை அருவருத்து ஒதுக்கி, இழுக்கு என்று கருதி மாயாவாதம் பேசித் திரிந்த போக்கினை முற்றிலுமாக மறுத்தும் வன்மையாகக் கண்டித்தும் திருமூலர் குரல் கொடுத்தார்.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே

-திருமந்திரம் - மூன்றாம் தந்திரம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பார் அழியின் உயிரால் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

-திருமந்திரம் - மூன்றாம் தந்திரம்-

முதற் பாடலில் உடம்பினை உத்தமன் குடிகொண்டிருக்கும் கோயிலாகக் கருதும் திருமூலர் அடுத்த பாடலில் உயிருக்கு இணையான சிறப்புடையதாக உடம்பை மதிக்கின்றார். உபாயம் அறிந்து உடம்பை வளர்க்குமாறும் அதன்மூலம் உயிரையும் ஓம்பலாம் என்றும் அறிவுறுத்துகின்றார்.

**06) மணிவாசகரின் நான்கு பெரும் படைகளில் சித்தர்கள்:**

இறையருளைப் பெறுவதற்கு நான்கு பெரும் படைகளை மணிவாசகர் திருவாசகத்தின் திருப்படை எழுச்சியிலே சித்தரித்துக் காட்டுகின்றார். தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள், சித்தர்களே இவரது படையணியில் பணியாற்றுபவர்கள். வஜ்ராயுதத்துக்கு ஒப்பான சித்தர்களைப் படையின் இறுதி அணியிலேயே வரும்படி வரிசைப்படுத்தி தருகின்றார். அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் பெறுவதற்கு வழிகாட்டும் படை அணியிலே சித்தர்களுக்கு மணிவாசகர் சிறப்பிடம் கொடுக்கின்றார்.

தொண்டர்காள் தூசி செல்லீர், பக்தர்காள் சூழப் போகீர்
ஒண்திறல் யோகிகளே பேர் அணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர் நாடு ஆள்வோம் நாம் அல்லல் படை வாராமே

-திருவாசகம், திருப்படையெழுச்சி-

**07) குழூ உக் குறிச் சொற்களும், மந்திர எழுத்துக்களும்:**

உட்பொருள் வைத்துப் பாடுவது சித்தர் பாடல்களில் பெரு வழக்காக உள்ளது. குழூ உக் குறிச் சொற்களைப் பயன்படுத்தும் முறையைச் சித்தர்கள் அறிமுகம் செய்தார்கள். சாதாரண நிலையில் உள்ளவர்க்கு எளிமையாகத் தோற்றம் அளிக்கும் சொற்களால் ஆழ்ந்த பொருளைப் பொதிந்து வைத்துச் சித்தர்கள் பாடுவார்கள். இதனை ஏமாற்றும் எளிமை எனக் குறிக்கலாம்.

சித்தர்கள் குழூ உக்குறிச் சொற்களைப் பயன்படுத்தியது போல மந்திர எழுத்துக்களையும் பயன்படுத்தி உள்ளனர். சித்தர் மரபில் மந்திரம், யந்திரம், தந்திரம் என மூன்று காணப்படுகின்றன. யந்திரம் என்பது வரைகின்ற சக்கரம். இந்த யந்திரத்தில் எழுதப்படும் எழுத்துக்கள் மந்திரம் எனப்படும். இம் மந்திர எழுத்துக்களுக்கு உயிரூட்டும் முறைமையே தந்திரம் ஆகும். பெரிய ஆற்றலின் மிகச்சிறிய வடிவத்தையே மந்திரம் குறிக்கிறது. அறிவியலில் குறியீட்டு எழுத்துக்கள் பயன்படுத்தப்படுவது போலச் சித்தர் இலக்கியங்களில் மந்திர எழுத்துக்கள் பயன்படுகின்றன.

**08) பேச்சு வழக்கு மொழியில் பாடல்களை அருளினார்கள்:**

மொழியின் திருந்திய வடிவம் எழுத்து மொழியாகும். பேச்சு மொழி செம்மை குன்றிய வடிவமாகும். காலம், முயற்சி, சுருக்கம் கருதிப் பேச்சு மொழியில் வடிவங்களைச் சுருக்குகிறோம். சித்தர்கள் மக்கள் வழக்கில் இருந்த யாப்பைப் பயன்படுத்தியது போலவே

**கல்விதான் மனிதனுக்கு மேன்மை கொடுப்பது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வழக்கில் இருந்த சொற்களையும் பயன்படுத்தினர். பேச்சு வழக்கு மொழியை இலக்கியத்தில் சித்தர்களே புகுத்தினார்கள். இவர்களைப் பின்பற்றியே குறவஞ்சி, பள்ளு போன்ற இலக்கியங்கள் எழுந்தன. இங்ஙனம் பின்வந்த இலக்கியப் படைப்பாளர்களுக்கு யாப்பு முறையிலும் சொல்லாட்சி முறையிலும் முன்னோடியாகச் சித்தர்கள் விளங்கினார்கள்.

09) சித்தர்கள் கூறும் பழமொழிகள்:

மக்கள் தமது வாழ்வில் பட்டறிவின் ஊடாக வெளிப்படுத்திய அனுபவ மொழிகளே பழமொழிகள் எனப்படும். சித்தர்கள் தமது பாடல்களில் நடைமுறை வழக்கில் இருந்த பழமொழிகளைப் பயன்படுத்தியதோடு தாமும் சில அனுபவ மொழிகளைக் கூறியுள்ளார்கள். தங்கள் கருத்துக்களைச் சாதாரண மக்களுக்குப் புரிய வைப்பதற்காக இவற்றைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

உ+ம்:

**(1) பட்டினத்தார்**

1. செத்துக்கிடக்கும் பிணத்தருகே இனி
   சாம்பிணங்கள் கத்துங் கணக்கென்ன?
2. ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு
3. காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே
4. நன்னாரில் பூட்டிய சூத்திரப் பாவை நல்நார்
   தப்பினால் தன்னாலும் ஆடிச் சலித்திடுமோ!

**(2) சிவவாக்கியர்**

1. கறந்த பால் மடி புகாது.
2. உடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புகா.
3. விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம் புகாது.

**(3) அகப்பேய்ச் சித்தர்**

1. வெள்ளை கறுப்பாமோ? வெள்ளியும் செம்பாமோ?
2. பிச்சை எடுத்தாலும் பிறவி தொலையாதே.

**(4) அழுகணி சித்தர்**

1. கொல்லன் உலை போலக்
   கொதிக்குதடி என் வயிறு.
2. பற்றற்ற நீரதிலே பாசி படர்ந்ததுபோல

**(5) கொங்கண நாயனார்**

1. முட்டையிடுது ஒரு பறவை
   மோசம் பண்ணுது ஒரு பறவை.
2. பெண்டாட்டிக்கு உற்றது சொல்லாதே
   பிள்ளைக்கு இளப்பம் கொடுக்காதே.

**அரிசி அன்னமாவதுபோல மனிதன் சித்தனாகின்றான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(6) காசுபுண்டர்**

1. வீட்டிலே தீபம் வைத்தாற் பிரகாசிக்கும்
   வெளியேறினாற் தீபம் விழலாய்ப் போமே.
2. பன்றி பல குட்டி போட்டாலென்ன
   பதியானைக் குட்டியொரு குட்டியாமே

**(7) பாம்பாட்டிச் சித்தர்**

1. உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி
2. தன்னையறிந்து ஒழுகுவோர் தன்னை மறைப்பர்
   தன்னையறியாதவரே தன்னைக் காட்டுவார்
3. காய்த்த மரம் கல்லடி படும்.

**(8) இடைக்காட்டுச் சித்தர்**

1. கைவிளக்கு கொண்டு கடலில் வீழ்வார் போல
2. கட்டாத நாயெல்லாம் காவலுக்கு ஆகாது.
3. அவித்த வித்து முளையாதே தாண்டவக்கோனே! - பத்தி
   அற்றவர் கதியடையார் தாண்டவக்கோனே.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 06 | ஐப்பசி | 20 | வியாழன் | திருமூலர் |
| நவம்பர் | 27 | கார்த்தி | 11 | வியாழன் | இராமநாதர் |
| டிசம்பர் | 12 | கார்த்தி | 26 | வெள்ளி | ஆறுமுகநாவலர் |
| டிசம்பர் | 15 | கார்த்தி | 29 | திங்கள் | மெய்ப்பொருளார் |

காத்திரமான கட்டுரையும் கனதி நிறைந்த கவிதையும்
தாங்கி வரும் ஞானச்சுடரே! வாழ்க! வாழ்க!
தோத்திரமே செய்து நிதம் தூய்மையான மணம் பரப்பி
சீக்கிரமே சைவம் வளர சிறப்பான பணி செய்கின்றாய்!
பாத்திரமறிந்து பிச்சை இடு என்று பண்புள்ளோர் சொன்னதுபோல்
காத்திரமாய் நீ மலர்ந்து ஒளிவீசி நிற்கின்றாய்!
சாத்திரமும் சரித்திரமும் உன்புகழே பேசி மகிழ
சந்ததமும் அருள் பரப்பிச் சுந்தரமாய் வாழியவே!

– இராசையா ஸ்ரீதரன்

**தன்னை அறிந்தவன் உலகத்தையும் அறிவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# தியாகத்தின் மாண்பு

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

## திருநீலகண்ட நாயனார்

திருநீலகண்டப் பெருமானின் பக்தரான குயவர் ஒருவர் தில்லையில் வாழ்ந்தார். இவர் இடையறாத சிவபக்தியால் எந்த நேரமும் "திருநீலகண்டம்" என்று உச்சரித்து வந்தார். இதனால் இவர் திருநீலகண்டர் என யாவராலும் அழைக்கப் பெற்றார். இவர் தமது பணிமூலம் சிவனடியார்களுக்கென்றே திருவோடுகள் செய்து அன்புடன் வழங்கி இறையருளை நாடினார். இவர் தமது சிவப்பணி சிறக்கவென இல்லறம் நாடி சிவபக்தியும், நற்பண்பும், பேரழகும் மிக்க பெண்ணின் நல்லாளொடு இல்லறம் புகுந்து நல்லறஞ் செய்து வந்தார்.

இக்காலத்தில் அழகுப் பதுமையான மனைவி வீட்டில் இருந்தும் திருநீலகண்டரின் பெண் மோகம் விலை மாதர்களை நாட வைத்தது. இவ்வாறு நெறிதவறிய கணவன் மீது மனைவி கடுஞ் சினமுற்றிருந்தாள். இவர் தமது மனைவியுடன் அன்பு பாராட்ட எண்ணி நாடியபோது மனையாள் இவரைக் கடிந்தாள். "நீர் வணங்கிவரும் திருநீலகண்டத்தின்மீது ஆணையாக எம்மீது தீண்டாதீர்" எனச் சூளுரைத்தாள். இதனால் திகைப் படைந்த திருநீலகண்டர் தன் மனைவி பன்மையாக "எம்மீது" என்ற சொல்லின் பேறாக "எந்தப் பெண்களையும் மனதாலும் தீண்டமாட்டேன்" என்று தமது சூளுரையை முன்வைத்தார்.

இனிய குடும்பம் வேண்டாத சூளுரையால் தமது சத்தியவாக்கை அன்று (வாலிபப் பருவம்) முதல் முதுமை வரை கடைப் பிடித்தனர். ஆனால் இறை பக்தியும் கடமையும் வழிப்படுத்த ஒருவர் மீதொருவர் தீண்டாது வழமைபோல இல்லற தர்மத்தைப் பேணி வந்தனர். இவர்கள் தமது சத்திய நெறியை அடுத்த எவருக்கும் தெரியாது காப்பாற்றி வந்தனர். இளமையைத் துறந்தனர். வருடங்கள் பல செல்ல முதுமை வந்தும் இவர்கள் சத்தியவாக்கை நிலை நிறுத்தினர்.

எல்லாம் வல்ல இறைவன் இவர்களின் சத்தியநெறியை உலகறியச் செய்யச் சித்தங் கொண்டார். இறைவன் ஒரு முதிய சிவயோகியார் வேடத்தில் கையில் ஒரு திருவோட்டுடன் நீலகண்டரிடம் வந்தார். அச்சிவயோகியரைக் கண்டதும் திருநீலகண்டர் அவரை வரவேற்று உபசரித்தார். சிவயோகியார் தமது கையிலிருந்த திருவோட்டை நீலகண்டரிடம் அடைக்கலமாக வைக்குமாறும் தாம் திரும்ப வந்து கேட்கும் போது தருமாறும் கூறியதுடன் இவ்வோடு அற்புதமானது, பொன் கொடுத்தாலும் வாங்க முடியாதது. இதனைத் தகுந்த பாதுகாப்பாக வைக்குமாறும் கூறிப் பொன்னம்பலத்துட் சென்று மறைந்தருளினார்.

திருநீலகண்டரும் அவ்வோட்டினைத் தகுந்த பாதுகாப்பில் மறைவாக வைத்திருந்தார். நெடுங்காலஞ் சென்றதும் இறைவன் தம் திருவிளையாடலினால் அத்திருவோட்டை மறையச் செய்தார். ஒருநாள் திருநீலகண்டரிடம் வந்து தமது திருவோட்டைத் தருமாறு

**சேவை செய்யச் செய்ய ஆற்றல் அதிகரிக்கும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். திருநீலகண்டர் தாம் மறைத்து வைத்த இடத்திற் திருவோட்டைத் தேடினார். கிடைக்கவில்லை. சிவனடியாரிடம் வந்து தமது இயலாமையைத் தெரிவித்து தாம் புதியதோர் ஓடு செய்து தருவதாகக் கூறிப் பணிந்தார்.

சிவயோகியார் தாம் கொடுக்கும் போது அத்திருவோட்டின் பெருமையைக் கூறியும் பாதுகாப்புடன் வைக்குமாறு கூறிய தாகவும் அவ்வோடு இல்லையெனில் அதனைத் திருடியவன் என்று குயவனாரை வைதார். குயவனார் செய்வதறியாது திகைத்தபோது குயவனாரை நோக்கி அதனைத் திருடவில்லையென்று சத்தியஞ் செய்ய வேண்டுமென்றார். உமக்குப் பிரியமான புதல்வனின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கி திருவோடு காணாமற் போய்விட்டதாகச் சத்தியஞ் செய்யுமாறு கூறினார்.

இது கேட்ட குயவனார் தாம் இளமையைத் துறந்து வாழ்ந்ததால் பிள்ளைகள் இல்லையே என்றார். அது கேட்ட சிவயோகியார் உமது மனைவியின் கையிற் பிடித்தவாறு குளத்தில் மூழ்கிச் சத்தியஞ் செய்யுமாறு கூறினார். அப்போது குயவனார் ஆரம்ப காலத்தில் ஒரு சத்திய வாக்காக மனைவியைத் தீண்டுவதில்லை என்றார். அப்படியாயின் தில்லை மூவாயிர வரிடம் எனது முறைப்பாட்டைச் சொல்லி அவர்களின் தீர்ப்பை ஏற்பதாகவும் தெரிவித்தார்.

தில்லை மூவாயிரர் சமூகத்தில் இவர்களின் முறைப்பாடு விசாரணை செய்யப்பட்டபோது குயவனார் மனைவியின் கையிற் பொருந்தியவாறு சத்தியஞ் செய்வதாகத் தெரிவித்தார். அதற்கமைவாகக் குயவனார் சிவயோகியாருடன் சென்று மனைவியையும் அழைத்துக்கொண்டு குளத்துக்குச் சென்றார். குளத்தில் இருவரும் ஒரு மூங்கில் தடியின் இரு முனைகளிலும் பிடித்தவாறு நீரில் மூழ்கிச் சத்தியம் செய்ய முன்வந்தனர். அச்சமயம் சிவயோகியார் குயவனாரை நோக்கித் தாம் சத்திய வாக்காக ஒருவரை ஒருவர் தீண்டுவதில்லையென உலகறியச் சொல்லி மூழ்கி எழுமாறு கூறினார். வேறு வழியின்றி குயவனார் சத்திய வாக்கை உறுதி செய்து இருவரும் மூழ்கி எழும்போது முதுமை நீங்கி முன் இருந்த இளமைக் கோலத்துடன் எழுந்தனர். சிவயோகியாரும் மறைந்தார். அவ்விடத்திற் கூடியிருந்த யாவரும் குயவர் தம்பதியினரின் சத்திய வாக்கின் பெருமையையும் இறையருளையும் வியந்தனர்.



அச்சமயம் இறைவன் உமையாளுடன் இடப வாகனத்திற் காட்சி தந்தார். மேலும் அன்பரே இவ்விளமைக் கோலத்துடன் இனிது வாழ்ந்து எம்மிடம் சிவலோகத்தில் பெருமையடையும் பேறு கிடைக்குமெனக் கூறி மறைந்தனர். இவ்வரிய நிகழ்வுக்காகவே பட்டினத்தடிகள் “மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்” எனப் பாடிப் பெருமைப்படுத்தினார்.

(முற்றும்)

உள்ளம் நல்லதானால் நோக்கமும் பயனும் நல்லனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருட புராணம்

திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் —



## பிறப்பும் இறப்பும்

ஒருவர் எக்குலத்தில் பிறந்தவராக இருந்தாலும் அவர் செல்வந்தராகவோ வறுமை நிலையிலோ வாடுபவராக இருந்தாலும் அவர் அறிவு ஆற்றல் பெற்ற மேதையாகவோ அறிவாளியாகவோ இருந்தாலும் அவர் சிறு குழந்தையாகவோ, வயோதிபராகவோ இருந்தாலும் அவருக்குக் குறிப்பிட்ட காலத்தில் மரணம் ஏற்படுகிறது. அதற்குக் காரணமென்ன என்ற சந்தேகம் கருடனுக்கு எழுகிறது. அதற்கு வைகுண்ட வாசன் ஸ்ரீ மகாவிஷ்ணு விளக்கம் அளிக்கிறார்.

உயிர்களுக்கு மரணம் ஏற்படுத்துவதற்கென்றே நியமிக்கப்பட்டிருப்பவன் எமதர்மன் ஆகும்.

உலகில் வாழ்பவர்கள் அவர்கள் தாங்கள் செய்யும் பலவிதமான தோஷங்களால் ஆயுள் குறைந்து மரணமடைகின்றனர்.

இறந்து போனவன் வீட்டில் உணவு அருந்துதல், பிறர் மனைவியை விரும்புதல், தனக்குத் தகாத தொழிலைப் புரிதல் போன்றவர்களின் வாழ்நாள் குறைந்து இறப்பர்.

நல்வினை புரியாதவரும், பெரியோர்களை மதித்து நடக்காதவரும், கடவுள் பக்தி இல்லாதவரும், தூய்மை இல்லாதவரும், பாவங்கள் என்று அறிந்திருந்தும் அதையே செய்பவரும் எமலோகத்தில் நரகத்தில் சிக்கி வருந்த நேரும்.

ஞானம் என்பது வாழ்க்கைக்கு விளக்கு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரைக் கெடுக்க நினைப்பவர், கேடு நினைப்பவர், கேடு விளைவிப்பவர், பொய் பேசுபவர், உயிர்களிடத்தில் கருணை இல்லாதவர், சாத்திரம் காட்டும் அறநெறிப் படி வாழாது பிறருக்குரிய கருமங்களைப் பின்பற்றுபவர், பாவ காரியங்களைப் புரிபவர் எமலோகத்தில் பெரும் வேதனைக்குள் ளாவர்.

இவ்வுலகில் பிறந்து வாழ்ந்துவரும் உயிர்களின் உடல் நிச்சயமற்றது: நிலை யானது அல்ல: இந்திரியத்தாலும், இரத்தத் தாலுமானது. உடல் உணவு, நீர் போன்ற வற்றால் விருத்தியடைவது. காலையில் வயிறு புடைக்க உண்டாலும் மாலையில் சமிபாடு அடைந்து விடும். உடனே பசிக்கும், மீண்டும் உண்ண வேண்டும் அப்பொழுது தான் உடல் வளரும். இல்லையெனில் உடல் தளர்ந்து சீர்குலைந்துவிடும்.

அதனால் அநித்தியமான இந்த உடல் கர்ம வினையால் மீண்டும் இவ்வுல கில் பிறவி எடுக்காமல் இருக்கும் பொருட்டு நற்காரியங்களைச் செய்ய வேண்டும். மீண் டும் பிறவா நிலையான மோட்சம் பெறுவதற் கான வழியைத் தேடவேண்டும்.

பாவங்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும். பாவங்கள் என்பது மனம், வாக்கு, காயம் எனும் உடல் ஆகியவற்றால் செய் யப்படுகின்றன. ஒருவர் செய்யும் பாவங் களின் அளவைப் பொறுத்து இழிந்த பிறவி எடுக்க நேரிடும்.

ஒருவர் இறப்பதைவிட பிறக்கும் போதுதான் அதிக துன்பத்தை அடைகிறார். தாயின் கருவில் இருக்கும் காலத்தில் தாயின் மலசலத்தால் அதிக துன்பமடைவர். அதனால் தான் பிறவி எடுப்பதே துன்ப மானது என்று அறிந்து அதிலிருந்து மீள நல்லொழுக்கம், நற்பண்புகள் கொண்ட வராகத் திகழ வேண்டும். ஆனால் இளம் வயதில் தமக்கு உறுதுணையானதும் நன்மை பயப்பதும் எது என்று அறியாமல் தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். முதுமைப் பருவத்திலோ எதையும் உணர்ந்து கொள்ள முடியாமல் போகிறது.

இவ்வாறு நன்மையை உணராமல் செய்பவர் பலராவர். பூர்வ புண்ணிய வசத் தால் உறுதியானதை நல்லதைச் செய்பவர் நிலையான முத்தியை அடைவர். உயிர்கள் செய்யும் கர்ம வினையினால்தான் பிறந்து பிறந்து இறக்கின்றனர். உலகில் பிறந்தவர் நீண்ட வயது வாழாது பிறந்து ஐந்து ஆண்டு களுக்குள் இறப்பது என்பது கொடியது. அது அவர் செய்த பாவத்தினால் ஏற்படு வதாகும். பிறந்தவுடனேயே இறந்துபோவது கொடிய பாவத்தினால் நேர்வது ஆகும். அத்தகையவர் பிறத்தலுக்கும் இறத்தலுக் கும் எண்ணிக்கை இருக்காது. முற்பிறப்பில் ஒருவர் நல்லொழுக்கம் மிக்கவராய் தான தர்மங்கள் புரிந்து நேரிய வழியில் வாழ்ந் தவர் மீண்டும் பிறந்தால் மனைவி மக்கள் சுற்றத்தோடு நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து பின் நற்பேறு பெறுவர்.

ஒரு தாய் கருவுற்று அது ஆறு மாதத்திற்குள் எந்த மாதத்திலாவது கலைந்து போனால் எத்தனையாவது மாதத் தில் அது நிகழ்ந்ததோ அத்தனை நாட் களுக்கு மட்டும் அந்தத் தாய்க்கு ஆசூசம் (தீட்டு) உண்டு. அதாவது கருத்தரித்து மூன்றாம் மாதம் கருக்கலைப்பு நிகழ்ந்தால் மூன்று நாட்களுக்கு மட்டும் ஆசூசம் தாய்க்கு உண்டு. ஆனால் தந்தைக்கு தீட்டு இல்லை. அவர் எந்தக் கர்மமும் செய்ய வேண்டியதில்லை.

அவ்வாறின்றி பத்தாம் மாதத்தில் குழந்தை பிறந்து ஐந்து வயதிற்குள் இறக்க நேரிட்டால், இறந்துபோன குழந்தைக்காக பாற்சோறும், தயிர்சோறும் சுற்றியுள்ள ஊர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கு இயன்றவரை கொடுக்க வேண்டும்.

ஐந்து வயதிற்குமேல் இறப்பு நேரின் ஈமக்கிரியைகள் செய்ய வேண்டும்.

உலகில் இறப்பதும், பிறப்பதும் நியதியானது. அதனால் ஒருவர் தாம் இறந்த பிறகு மறுபிறவி எடுக்காமல் இருப்பதற் குண்டான முயற்சியில் ஈடுபடவேண்டும். அதற்கான புண்ணிய செயல்களையே செய்ய வேண்டும்.

இறந்தபின் செய்யப்பட வேண்டிய சடங்குகள் முக்கியமானவையாகும். அவற்றை முறைப்படி செய்ய வேண்டும்.

ஐந்து வயதிற்குள் இறக்கும் குழந் தைகளுக்கு விருஷோற்சர்க்கமும் விசேட தான தர்மங்களும் செய்ய வேண்டிய தில்லை. மூன்று வயதிற்கு உட்பட்ட குழந்தை இறந்து போனால் பூமியில் புதைக்க வேண்டும். மற்றையவர்களைத் தகனம் செய்ய வேண்டும்.

குழந்தை பிறந்து ஆறு மாதங்கள் வரை "சிசு" எனப்படும் மூன்று வயது குழந்தை "பாலகன்" என்றும், ஆறு வயது வரையில் "குமரன்" எனவும், ஒன்பது வயது வரை "பவுண்டகன்" என்றும் பதினாறு வயது வரையில் "கைசோரன்" என்றும் சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

ஐந்து வயதுக்கு மேல் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர் அல்லது பன்னிரண்டு வயது நிரம்பியவர் இறந்து போனால் விரு ஷோர்சர்க்கம் செய்ய வேண்டும். ஆனால் பிதுர்களுக்கான சபிண்டீகரணம் செய்ய லாகாது.

ஒருவருக்கு பிறக்கும் புத்திரர் வேறு யாருமல்ல; அவருடைய ஆத்மாவே ஆகும். அதனால்தான் புத்திரர் இறந்து போனால் அவருக்காக அவர் தந்தையும், தந்தை இறந்து போனால் அவருக்காக அவருடைய புத்திரரும் கர்மம் செய்ய வேண்டும். அந் நிலையில் ஒருவர் தனக்குத்தானே புத்திரர் ஆவர் என்று வேத சாத்திரங்கள் கூறு கின்றது.

சூரியனும் ஒன்றே, சந்திரனும் ஒன்றே, பகல் நேரத்தில் நீர் நிறைந்த குடங்களை வரிசையாக வைத்து அதனுள் பார்த்தால் ஒவ்வொரு குடத்துள்ளும் சூரியன் தெரியும். அவ்வாறுதான் ஒருவருக்குப் பல புத்திரர்கள் பிறக்கின்றனர். பெரும்பாலான புதல்வர்கள் அவர்களின் தந்தையைப் போன்றே உருவமும், அறிவும், ஆற்றலும், ஒழுக்கமும் உள்ளவர்களாகத் திகழ்கின் றனர். இருப்பினும் குருடனுக்கு குருட்டுப் பிள்ளையோ, ஊமைக்கு ஊமைப்பிள் ளையோ, செவிடருக்கு செவிட்டுப்பிள் ளையோ பிறப்பதில்லை. தந்தையிடம் அமைந்துள்ள சிறப்பான அம்சங்களில் ஏதே னும் ஒன்று பிள்ளைக்கும் பொருந்தி இருக் கும். இதுவே நியதி என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் உறுதியுடன் கூறுகின்றார்.

நமது நாட்டில் "தாயைப்போல பிள்ளை நூலைப் போல சேலை" என்று பழமொழி ஒன்று உள்ளது. இன்றைய நவீன அறிவியல் இயல்புகளிற்கு காரணம் நிற மூர்த்தம் என்று அறிவித்துள்ளது. தாய் தந்தையரின் இயல்புகள் பிள்ளைகளிற்கு வருகின்றன என்று ஆய்வு மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. நமது முன்னோர்கள் தந்தையின் இயல்பு புத்திரனுக்கும் தாயின் பண்புகள் புத்திரிக்கும் இருக்கும் என்று ஒரு நியதிப்பாட்டைக் கூறியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேயே தந்தை புத்திரன் தொடர்புகள் கூறப்பட்டுள்ளன. தந்தையின் இயல்பு புத்திரிக்கு இருக்காது என்பது இதன் கருத்தாகாது.

ஒருவருக்கு ஒன்றுக்கு மேல் புத்திரர் கள் பிறந்தாலும் அவர்களில் முதல் மகனே

**ஒவ்வொருவரும் வாழ்க்கைத் தத்துவத்தை உணரவேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தலைச்சசன்" ஆகின்றான். அவரே தந்தையின் இறுதிச்சடங்குகளை செய்ய கடமைப் பட்டவராகின்றார். அவரே தம் தந்தையின் பரலோக வாழ்விற்கு உதவுகின்றார். மற்றப் புதல்வர்கள் தம் தந்தையின் இகலோக வாழ்விற்கு மட்டும் சாதகமாக இருப்பர். மூத்த புதல்வன் இறுதிச் சடங்குகளையும் கருமங்களையும் செய்யக் கடமைப்பட்டவர். மற்றப் புத்திரர்கள் இருப்பின் அவர்கள் இறந்த தகப்பனைக் குறித்து சிறிது கருமங் களும் சிரார்த்தங்களும் செய்யலாம்.

ஒருவருக்கு பெண்மகள் (புத்திரி) மட்டும் இருந்து அந்தப் பெண்ணுக்கு ஒரு மகன் பிறப்பானாயின் தம் குலத்து இருபத் தேழு தலைமுறையினரையும் கரையேற்று வார்.

ஒருவருக்கு காதற் கிழத்தி இருந்து அவள் மூலமாக புத்திரர் இருப்பின் அப் புத்திரர் சிறிது கருமம் செய்யலாம். அவ்வா றின்றி முற்றிலும் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் செய்தவரிற்கும் இறந்தவரிற்கும் நரகம் ஏற்படும். இருப்பினும் காதற்கிழத் தியின் மகன் தன் பெற்றவரைக் குறித்து ஆண்டுதோறும் சிரார்த்தம் செய்யலாம். தான தர்மங்களைச் செய்யலாம்.

(தொடரும்...

யாழ்ப்பாணம் இணுவிலூர் வாசர் அளவையூர் அறிஞர்
கலாபூஷணம், புலவர்மணி
**திரு வை. க. சிற்றம்பலம்** அவர்களின்
நூற்றாண்டு அகவை நிறைவையொட்டி
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
இந்து மன்றத்தினர் மனமுவந்து நல்கிய

## வாழ்த்துப்பா

இன்றமிழ்ப் பாக்கள் நன்றே
இயம்பிடும் புலவர் மணியாம்
நன்றறி சைவம் வாழ
நயமிகு சேவை நல்கும்
தண்டமிழ்ப் புலவர் எங்கள்
சிற்றம் பலவனார் என்றும்
மண்டிணி உள்ள மட்டும்
மகிழ்வுடன் வாழ்க வாழ்க

காலத்தின் கொடையாய் எங்கள்
கவினள வைப்பதி பிறந்து
ஞாலத்தார் போற்றும் நல்ல
இணுவையில் வாழ்வு கொண்டீர்
சாலத்தான் ஞானச் சுடரில்
சந்ததம் பாக்கள் நல்கி
வாழநல் வழிகள் காட்டும்
வள்ளலே வாழ்க வாழ்க.

**சுகமும் துக்கமும் இரட்டைக் குழந்தைகள்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிசயம் ஆனால் உண்மை II

– திரு மோகனதாஸ் சுவாமிகள் –

கடந்த வருடம் எம்மால் மேற்கொள்ளப்பட்ட வட இந்திய யாத்திரையின்போது நாம் வழிபாடு செய்த தலங்களைப் பற்றியும், அந்தந்த இடங்களின் மகிமைகளையும் அதன்மூலம் அடைந்த அனுபவங்களையும் தொடராக ஞானச்சுடர் மலரில் வெளிப்படுத்தி இருந்தோம். அவ்வகையில் குஜராத் மாநிலத்திலுள்ள பஞ்சலிங்க தரிசனம் பற்றி 2013ஆம் ஆண்டு ஆடிமாதம் 187ஆவது மலராக வெளிவந்த ஞானச்சுடர் மலரில் கடல் சூழ்ந்த பகுதியில் பஞ்சலிங்கம் அமைந்திருப்பதையும் அவை தினசரி கடல்நீர் வற்றும்போதும், பெருகும்போதும் தெரிவதும் மூடுவதுமாக காட்சியளிப்பதையும் அவ்விடத்தின் வழிபாடு பற்றியும் எமது யாத்திரைத் தொடரில் வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

நாம் பஞ்சலிங்க தரிசனம் செய்யச் சென்றவேளை கடல்நீர் பெருகும் நேரம் அங்கே போய் அவசர அவசரமாகவும், கடல் நீர் பெருகி வந்துவிடுமோ என்ற அச்சம் காரணமாகவும் வழிபாடுகளை இயற்றிவிட்டு வந்தோம். ஆனாலும் கடல்நீர் வற்றும்போது அங்கே இடம்பெறும் நிகழ்வினைக் காணமுடியவில்லையே என்ற ஆதங்கத்துடன்தான் நாம் திரும்பி வந்தோம். ஆனாலும் மறுமுறை வரும்போது எப்படியும் கடல்நீர் வற்றி லிங்கங்கள் காட்சி தருவதைக் காண வேண்டும் என்ற மன உறுதியுடன் வந்திருந்தேன்.

அதற்கமைவாக இவ்வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற வட இந்திய யாத்திரையின் போது பஞ்சலிங்க தரிசனம் செய்யும் முனைப்போடு எமது யாத்திரைக் குழுவினர் ஆயத்தமானார்கள்.

இம்முறை யாத்திரையின் நிமித்தம் கலந்துகொண்டவர்களில் என்னையும், முகவரையும் தவிர மற்றவர்கள் புதியவர்கள். அவர்கள் அனைவருக்கும் பஞ்சலிங்க தரிசனம் புதிய நிகழ்வு. நாம் அனைவரும் பாவ் நகரிலிருந்து காலை 6 மணியளவில் எமக்குரிய காலை உணவு வகைகளோடு ஒழுங்கு செய்யப்பட்ட பேருந்தில் பஞ்சலிங்கம் அமைந்த கோலியாட் கிராமத்தை காலை 8 மணியளவில் அடைந்து நாம் வந்த பேருந்தினை அதற்குரிய இடத்தில் நிறுத்திவிட்டு கடற்கரையை நாடி விரைவாக நடந்தோம். எம்மோடு வந்தவர்களில் ஒரு சிலர் நடக்கமுடியாதவர்கள். ஆனாலும் அவர்களது மனஉறுதியை மெச்சித்தான் ஆகவேண்டும். எப்படியும் வழிபாடு செய்யவேண்டும் என்ற அவர்களது விருப்பத்தையும் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு எனக்கு இருந்தது. ஏனெனில் பல தடவை வட இந்திய யாத்திரையின்போது அடைந்த அனுபவத்தின்மூலம் எமது முகவர் ஸ்ரீரெங்கநாதன் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் எம்மோடு வரும் யாத்திரிகர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதும் எமக்கு அடியார்களுக்கு செய்யும் சேவையாகவே தென்பட்டது.

இவ்வகைச் செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டு எமது யாத்திரைக் குழுவினரில் நானும் ஒருவனாக எல்லோரையும் அழைத்துக் கொண்டு கடற்கரையை அண்மித்தேன். நேரம் 8.30ஐத் தாண்டிவிட்டது. ஆனால் கடல் நீர் வற்றவில்லை. பஞ்சலிங்கம் இருக்கும் இடத்தை அடையாளப்படுத்தும் கூம்பின் 3இல் 1பாகம் வரை கடல்நீர் மட்டம் இருந்தது. பஞ்சலிங்கம் தெரிவதற்குக் குறைந்தது இன்னும் ஒருமணிநேரமாவது நாம் கடற்கரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும். பஞ்சலிங்க தரிசனம் செய்யவேண்டும் என்ற ஆர்வத்தின் நிமித்தம் கடற்கரையில் பூசைக்குரிய பொருட்கள் விற்கும் வர்த்தக நிலையங்களில் உள்ள இருக்கைகளில் அமர்ந்திருந்தோம்.

எமது குழுவினரில் ஒருசிலர் காலாற கடற்கரையோரம் நடந்து சென்றும் தமது பொழுதைக் கழித்தனர். அப்போதுதான் நான் ஒன்றைக் கவனித்தேன். ஒருசிலர் அயல் கிராமங்களிலிருந்து வந்து பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதையும் காணமுடிந்தது. இச் செயற்பாட்டினை நிறைவேற்றும் பூசகர்கள் சிலர் அங்கே வந்து காத்துக் கொண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது. நேரம் 10 மணியை நெருங்கிவிட்டது. லிங்கங்கள் அமைந்த பகுதி உட்பட சுமார் 1கிலோமீற்றர் தூரத்துக்கு கடல் நீர் மெது மெதுவாக பின்வாங்கத் தொடங்கியது. நாம் பார்த்துக்கொண்டு இருக்கும்போது நீர் இருந்த இடம் எல்லாம் தரையாக காட்சிதரும் வண்ணம் இருந்தது. நாமும் கடல் நீர் வற்ற வற்ற முன்னோக்கி லிங்கங்கள் இருந்த பகுதியை நோக்கி முன்னேற ஆரம்பித்தோம். இந்த நேரத்தில் எம்மோடு இணைந்து வந்த சங்கானையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் நல்லையா தனது தொலைபேசியூடாக இலங்கையில் உள்ள தனது சுற்றத்தினருக்கு ஆலயங்களில் உற்சவ காலங்களில் இடம்பெறும் நேர்முக வர்ணனைபோல் நடக்கும் சம்பவங்களை வர்ணித்தபடியே வந்து கொண்டிருந்தார். முற்று முழுதாக கடல்நீர் வற்றுவதற்குள் நாமும் நீரோடு நீராகப் பஞ்சலிங்கங்கள் இருந்த மேட்டினை அடைந்தோம். எம்முடன் லிங்கங்களுக்கு பூசை வழிபாடுகளை ஆற்றும் பூசகர்களும் வந்திருந்தார்கள்.

கடல்நீர் வற்றிக்கொண்டிருக்கும்போது எமது குழுவினர் அனைவரும் கடலுக்குள் இறங்கிவிட்டதால் நிலத்தில் உள்ள சகதி காரணமாக நீருக்குள் விழுந்தும் எழுந்தும் ஒருவர் கையை ஒருவர் பற்றிப்பிடித்துக் கொண்டும் மிக அவதானமாகவே லிங்கங்கள் இருந்த இடத்தை அடைந்தோம். அதன் காரணமாக அனைவரும் கடலில் நீராட வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது. ஒரு சிலர் மாற்று உடை கையில் கொண்டு வந்திருந்தார்கள். அந்த வகையில் நாம் அனைவரும் கடலில் நீராடி அங்கே இடம்பெற்ற பூசை வழிபாட்டில் ஈடுபட்டோம். நாம் இலங்கையிலிருந்து வந்துள்ளோம் என்பதைக் கேள்வியுற்ற பூசகர்கள் எம்மை லிங்கங்கள் முன் அமர்த்தி தங்களது கடமைகளை நிறைவேற்றி பூசை வழிபாட்டின் நிமித்தம் லிங்கங்களுக்கு நிவேதனமாகப் படைத்த பூ, பழம், தேங்காய் முதலியவற்றை பிரசாதமாகக் கையில் வழங்கினார்கள். அதே சமயம் லிங்கங்களுக்கு அருகிலுள்ள சிறு சிறு குழிகளுள்ள நீரை கையால் வெளியேற்றிவிட்டு பின் அக்குழிக்குள் ஊறும் நீரை தீர்த்தமாக கையில் தந்தார்கள். அந்நீர் உப்புக் கலவாத நன்னீராக இருந்தது. முற்றிலும் கடல் நீர் ஆனாலும் அக்குன்றில் உள்ள குழிகளுக்குள் நன்னீர். இதுவே பெரிய அதிசயமல்லவா. அத்துடன் வற்றிய கடல் ஆர்ப்பரித்தபடி இருந்தது. எவ்வளவுதான் அலை வந்து மோதினாலும் ஒரு வரையறைக்குள்தான் அலை நின்று கொண்டிருந்தது. இதுவும் அதிசயமல்லவா.

யதார்த்த வாழ்வில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும் இவ்வகையான அனுபவங்கள்மூலம் நாம் எவ்வளவோ விடயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இது எமது அனுபவத்தின் அடிப்படையில் எழுந்த கருத்து. ஒருவழியாக வழிபாடுகளை முடித்துவிட்டு பிற்பகல் 1 மணியளவில் நாம் கோலியாட் கடற்கரையிலிருந்து பாவ் நகரை நோக்கி எமது பிரயாணம் ஆரம்பமாயிற்று.

**பொய் சொல்லுதல் கொலைக்குச் சமமானது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

07.11.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "கலை நிகழ்வுகள்"

வழங்குபவர்கள் :- காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாணவர்கள்

---

14.11.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

பக்கவாத்திய சகிதம்

---

21.11.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

28.11.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் கார்த்திகைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு நவரத்தினராசவேல் அவர்கள்

[இளை அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

[அதிபர்]

203ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதிவு இல. QD/16/NEWS/2014**

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org